விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 29 வியாழக்கிழமை (12.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

பணிக்கு திரும்பாவிடின் விலக்கப்படுவீர்கள்

## பல்கலை கல்வி சாரா ஊழியர்களுக்கு உயர் கல்வி அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)


பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிலையங்களின் கல்வி சாரா ஊழியர்கள் வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் பணிக்குத் திரும்பாவிடின் சேவையிலிருந்து தாமாக விலகியதாகக் கருதப்படும் என உயர் கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களின் கல்வி சாரா ஊழியர்கள் கடந்த பெப்ரவரி தொடக்கம் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உயர் கல்வி நிறுவனங்களின் தொழிற்சங்க 24

## புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு யாழில் சிலை வைக்க வேண்டும்

யாழ்.மாநகர சபையில் ஈ.பி.டி.பியின் ஜெகன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் யாழில் சிலை வைப்பதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் யாழ் மாநகரசபை அமர்வில் கோரிக்கை விடுத்துள்ளனர். 23

பொதுமக்களின் காணிகளில் இராணுவம் பேக்கரி அமைப்பது என்ன நியாயம்?

# வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு; தெற்கில் நடத்த முடியுமா? - ராஜித



(கொழும்பு) வடக்கில் பொதுமக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். தெற்கு மக்களின் காணிகளை இராணுவம் அபகரித்தால் அவர்கள் அமைதியாக இருப்பார்களா? பொதுமக்களின் காணிகளில் இராணுவத்தினர் பேக்கரி அமைத்து வியாபாரம் செய்வது சரியா? என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பினார். (23-ம் பக்கம்...)

## "தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்"

யாழ்.மாநகர சபையின் கன்னி உரைகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர் சபையின் கன்னி அமர்வில் கன்னி உரை ஆற்றிய சில உறுப்பினர்கள் தமது உரையின் இறுதியில் "தமிழர் 23

## மே முதலாம் திகதி விடுமுறை ரத்து

(கொழும்பு)

உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே மாதம் முதலாம் திகதி அரசால் நிர்ணயிக்கப்பட்ட அரச விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் 24

குருநகர் கடற்பரப்பில்

## இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்

பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குருநகர் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இருவர் காணாமல் போனமை தொடர்பில் யாழ். பொலிஸ் 23

## நல்லாட்சி அரசில் சுதந்திரக்கட்சி நீடிக்கும்

மத்திய குழு தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டு அரசில் நீடிப்பது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக 23

## கடந்த கால நிர்வாக முறைகேடு உரிய முறையில் பரிசீலிக்கப்படும்

யாழ்.மாநகர முதல்வர் ஆனோல்ட் விளக்க உரையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் நிர்வாக முறைகேடுகள் உரியமுறையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தனது கொள்கை விளக்க உரையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் கன்னி அமர்வு நேற்று மாநகர சபை சபா மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தும் 23

தமிழ் அரசியல் கைதி ஒருவர்

## தன்னை விடுவிக்க கோரி 3-வது நாளாக உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதி ஒருவர் சிறையில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி இன்று மூன்றாவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியை சேர்ந்த இராபல்லவன் தபோரூபன் (வயது 35) என்பவர் கடந்த 2009 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர் உடல்நிலை பாதிக்கப்பட்டகாரணத்தினால் யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை மற்றும் பரிசோதனைகள் 23

## சம்பந்தனுடன் அமர்ந்திருப்பது பெருமைப்பட வேண்டிய விடயம்

இதுவே நல்லிணக்கத்துக்கு உகந்தது

அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் போன்றவர்கள் தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் அமர்ந்திருப்பதையிட்டுப் பெருமைப்படவேண்டும். தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதே நல்லிணக்கத்துக்கு உகந்தது.

இவ்வாறு அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் 23

## தியாகதீபம் திலீபனுக்கு சிலை வைப்பதோடு கிட்டு பூங்கா மீண்டும் புனரமைக்க வேண்டும்

யாழ். மாநகர சபை கன்னி உரையில் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனுக்கு யாழ் மாநகரசபை சிலை வைத்தால் அதனை வரவேற்பதோடு அதற்கான ஒத்துழைப்பும் வழங்குவோம். அதேபோன்று மாவீரர்களின் பெயரில் முன்னர் இருந்த வீதிகளுக்கு மீண்டும் அவர்களது பெயர்கள் சூட்டப்படவேண்டும் என்றும் கிட்டு பூங்கா புனரமைக்கப்பட்டு மீண்டும் கிட்டு பூங்கா என பெயர் சூட்டப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் யாழ் மாநகரசபை உறுப்பினருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபையின் கன்னி அமர்வு நேற்று யாழ் மாநகர சபா மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு கன்னி உரை வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமக்கு மக்களால் வழ 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜனநாயகத்துக்கு இந்தியா இலங்கையை முன்னுதாரணமாக கொள்ள வேண்டும்

### நியு இந்தியன்ஸ் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு இந்தியா, இலங்கையை முன்னுதாரணமாக கொள்ள வேண்டும் என்று நியு இந்தியன்ஸ் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக அவநம்பிக்கை பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான விவாதம் 12 மணிநேரமாக இடம்பெற்று இரவு 9.30 அளவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தோல்வி அடையச் செய்யப்பட்டது.

இதன் மூலம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் நிலவுகின்ற ஜனநாயகம், வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எதிராக எதிர்கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள 3 அவ்நம்பிக்கை பிரேரணைகள் குறித்து இதுவரையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதில்லை.

இந்திய நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதா கட்சி அதிக பெரும்பான்மை பெற்றுள்ள நிலையில், அதற்கு எதிரான அவ நம்பிக்கை பிரேரணை ஒன்று வெற்றி பெறும் சாத்தியம் இல்லை.

ஆனால் இலங்கையில் பிரதமர் ரணில் முகம் கொடுத்திருந்த சூழ்நிலை அவ்வாறானது இல்லை.

அவருக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணையை தோல்வியடையச் செய்வது, பிரதமருக்கு சவாலாக இருந்த போதும், அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு உள்ளாக்கப்பட்டதன் ஊடாக, ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ம)

## கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப் பணிகள்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ள சந்தேகத்தின் அடிப்படையில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிளிநொச்சி அறிவியல் நகரின் யாழ் பல்கலைகழகத்தின் விவசாய பீடத்திற்கு பின்புறமாக உள்ள காட்டுப்பகுதியிலேயே இவ் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நேற்று மாலை நான்கு மணி தொடக்கம் இந்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதிவாளர், பிரதேச கிராம அலுவலர் உள்ளிட்டவர்களின பிரசன்னத்தின் மத்தியில் இவ் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ம-312)

## யாழ்.மாநகர சபையில் முன்னர் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் விசாரணை வேண்டும்

### கன்னி உரையில் முடியப்பு ரெமிடியஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் முன்னைய காலத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என முடியப்பு ரெமிடியஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் கன்னி அமர்வு நேற்று யாழ்.மாநகர சபா மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு கன்னி உரை வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்.மாநகரசபையில் கடந்த எமது ஆட்சியின் போது ஊழல் இடம்பெற்றதாக கூறுகிறார்கள். அவ்வாறாயின் அந்த விசாரணை இடம்பெற வேண்டும். அது மட்டுமல்லாமல் யாழ்.நகர் மத்தியில் மாநகரசபை புதிய கட்டிட தொகுதி அமைப்பதற்கு முன் 6 கடைகள் கட்டப்பட்டது. அந்த கடைகள் கட்டப்பட்ட காலம் தற்போதைய வடக்கு மாகாண அவைத் தலைவரும் முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் கட்டப்பட்டது.

அதே வேளையில் கட்டடம் அமைப்பது தொடர்பாக அனுமதி பெறப்படாமலும் உரிய முறையில் கேள்விப்பத்திரம் கோரப்படாமலும் கட்டப்பட்டு தமது விருப்பத்துக்கு ஏற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. அந்த ஆறு கடைகள் தொடர்பாக பாரிய ஊழல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பிரதிநிதிகளான எமக்கு, அந்த விடயம் தொடர்பாக விசாரணை செய்து விளக்கம் தெரிவிக்க வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது. அது மட்டுமல்லாமல் கடந்த ஆணையாளர்களில் ஒரு சிலர் கோவில் காணிகளில் இருந்து தங்களுடைய பதவி காலத்தில் சோலைவரியை தமது பேரில் மாற்றியுள்ளார்கள் அது எவ்வாறு இடம்பெற்றது என விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மேலும் நம் யாழ்.நகரில் காணப்படும் பல சிலைகள் சிதைவடைந்து அருவருப்பான நிலையில் காணப்படுகிறது. அவை புனரமைப்பு செய்யப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களுடைய நினைவிடம் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அருகில் தியான மண்டபம் அமைத்து வலுவான முறையில் கௌரவப்படுத்தப்பட வேண்டும்.

முன்னைய காலத்தில் கொழும்புத் துறையில் யோகர். சுவாமி ஆச்சிரமம், நினைவு சின்னம் இருந்தது யுத்தத்தால் அந்த நினைவிடம் அழிக்கப்பட்டுள்ளது அது புதுப்பிக்கப்படவேண்டும்.

எமது சபை ஆரம்பமாகி முதலாவது தமிழ் புத்தாண்டு வரவுள்ளது அந்த தினத்தை சிறப்பாக கொண்டாட வேண்டும். அதை கொண்டாடாவிடின் வரலாற்றுத் தவறை இந்த சபை இழைத்ததாக கருதப்படும். மேலும் நாம் இச் சபையில் எதிரி கட்சி இல்லாமல் எதிர்க்கட்சியான வகையில் இருந்து, பிழையானதை சுட்டிக்காட்டி நல்ல விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி அனைவரும் ஒன்று சேர்ந்து மாநகர சபையை கட்டியெழுப்ப வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## சிறையிலிருந்த கணவனுக்கு கஞ்சா கொண்டு சென்ற மனைவி கைது

(ஹட்டன்)

சிறையிலிருந்த கணவனுக்கு கஞ்சா கொண்டு சென்ற மனைவியை கைது செய்துள்ளதுடன் அவரது வீட்டிலிருந்து ஒரு தொகை கஞ்சாவை மீட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி விவகாரம் தொடர்பில் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் இருந்த தனது கணவனுக்கு கொண்டு வந்த ஆடையை சோதனையிட்ட பொலிஸார் ஆடையினுள் மறைத்து வைத்திருந்த கஞ்சா பக்கற்றை மீட்டதையடுத்து குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணை கைது செய்த பின்னர அவரது வீட்டை ஹட்டன் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் சோதனையிட்ட போது வீட்டினுள்ளிருந்து மேலும் ஒரு தொகை கஞ்சாவை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து, ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## கடவத்தை பாலத்திற்கு அருகே

## 75 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சா சிக்கியது

(கொழும்பு)

கேரள கஞ்சா 51 கிலோவுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடவத்தை மேம்பாலத்திற்கு அருகில் வைத்து அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கேளர கஞ்சாவின் பெறுமதி சுமார் 75 லட்சம் ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கொழும்பு-மாளிகாவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (ம)

## யாழ்.ஊடகவியலாளர்களுக்கு பயந்து வாகனங்களை மாற்றிய ஹக்கீம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிற்கு பயந்து கொண்டு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது வாகனங்களை அடிக்கடி மாற்றியதுடன் தனது கட்சி இரகசிய கூட்டம் நடத்தும் இடங்களை அடிக்கடி மாற்றியதால் பரபரப்பு அங்கு ஏற்பட்டிருந்தது. நேற்று முன்தினம் மன்னார் பிரதேச சபையை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றியதை அடுத்து திருகோணமலையில் இருந்து விசேட விமானம் ஒன்றின் ஊடாக பலாலியை வந்தடைந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் குழுவினர் மன்னார் பகுதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள், வட்டார உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானவர்களை செயலமர்வு ஒன்றுக்கு யாழிலுள்ள ஹோட்டலுக்கு அழைத்து செல்லப்பட்டு பின்னர் திடீரென வேறு இடத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த செயலமர்வினை அறிந்த ஊடகவியலாளர்கள் அவ்விடம் சென்று செய்தி சேகரிக்க தயாரான நிலையில அமைச்சரோடு வந்தவர்கள் அதனை தடுத்திருந்தனர். தொடர்ந்து அந்த இடத்திற்கு விசேட அதிரடிப்படையினர் அழைத்து வரப்பட்டனர். அத்துடன் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் ஆரம்பமாக இருந்த குறித்த மறைமுக செயலமர்வு இரவு 10 மணியளவில் ஊடகவியலாளர்கள் அவ்விடத்தில் இருந்து அகன்று சென்ற பின்னர் வேறு இடமொன்றில் நடைபெற்றதாக அறிய முடிகிறது. இதேவேளை நேற்று காலையும் மறைமுக சந்திப்புக்களிலேயே அவர் ஈடுபட்டிருந்தார். (ம-4)

## கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 2018.04.23 மற்றும் 24 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சிற்கு இதுவரை விண்ணப்பம் செய்யாத பட்டதாரிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து 2018.04.20ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சமர்ப்பித்து நேர்முகத் தேர்வுத் திகதியை பெற்றுக் கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)


**பணியாள் தேவை**

வீட்டு வேலைகள் செய்வதற்கு
பொறுப்புகள் இல்லாத
பணிப்பெண் தேவை
வடமராட்சிக்குள் வசிப்பவர்கள்
விரும்பத்தக்கது
வேலை விபரம்,சம்பளம்
நேரில் தீர்மானிக்கலாம்
தொடர்பு:
**0764847171**
(மாலை 5 மணிக்குப் பின் தொடர்பு கொள்க)
(சி-2205)

**நாட்டுக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

கழுத்து வெட்டி நாட்டுக் கோழிக்குஞ்சு (01 கிழமை) விலை -110/=
தொடர்புகளுக்கு:-
**0772601887**
(சி-2263)

**பணியாளர் தேவை**

நெல்லியடியில் அமைந்துள்ள
கணிணி விற்பனை நிலையம்
ஒன்றில் பணிபுரிவதற்கு
பெண் பணியாளர் தேவை
விபரங்கள் நேரில்
தொடர்பு இலக்கம்
**0752046083**
(சி-2204)

**கல்யாண் அடைவு கடை**

கல்யாண் நகை மாடம்
No-65,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல:A007879

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2018ஆம் ஆண்டு 03.01.2018 இற்கும், 16.01.2018 இற்கும் உட்பட்ட திகதிகளில் வைத்த அடைவு நகைகள் யாவற்றையும் 2018ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26ஆம் திகதி (26.04.2018) இற்கு முன்னர் மீட்கவும், மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 26.04.2018ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்:-T.Rahuna
(3606)

**கல்யாண் அடைவு கடை**
இல.65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்.மாநகர சபையின் கன்னி அமர்வு நேற்று




(படங்கள்:-பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் கன்னி அமர்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு மாநகரசபையின் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தலைமையில் ஆரம்பமானது.

அமர்வு ஆரம்பிக்கும் முன்னர் முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைரும் மங்கள வாத்திய இசையுடன் மலர் மாலை அணிவித்து சபைக்குள் அழைத்து வரப்பட்டனர்.

மலர் மாலை அணிவதை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தவிர்த்திருந்தனர்.

மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, மாநகர கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் முதல் வரின் கொள்கை விளக்க உரையினை தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களுக்கும் தலா 3 நிமிடம் தமது உரையினை ஆற்றியிருந்தனர்.

பின்னர் அமர்வு நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் அடுத்த அமர்வு எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதிக்கு நடைபெறும் என முதல்வரால் அறிவிக்கப்பட்டது. (இ-9)

# இராணுவ விமானம் விபத்து 100 பேர் உயிரிழப்பு!




(அல்ஜைர்ஸ்)

வட மேற்கு ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் 100-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அல்ஜீரியாவின் பவுபாரிக் விமானத்தளத்தில் இருந்து சுமார் 100 வீரர்களுடன் இராணுவ விமானம் நேற்றுக் காலை புறப்பட்டது. வடக்கு பகுதியிலுள்ள பெசார் என்ற நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானமானது நடுவானில்பறந்துகொண்டிருக்கும் போது திடீரென கீழே நொறுங்கி விபத்துக்குள்ளானது.

லயுஷின் இல் 76 என்ற பெயர் கொண்ட ரஷ்ய தயாரிப்பு விமானமான இதில் இராணுவ வீரர்கள் தவிர பயணிகளும் இருந்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்த கோர விபத்தில் விமானத்தில் இருந்த 100-க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாக அந் நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

# நீண்ட காலம் அமைச்சர் பதவியில் இருக்க நான் எண்ணவில்லை - தயாசிறி தெரிவிப்பு




(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் இருப்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்க போவதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றுக்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கம் என்பது ஐக்கிய தேசியக்கட்சி மாத்திரமே என சிலர் நினைக்கின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருடன் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது பின்னோக்கிச்சென்றனர்.

இவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைய எதிர்பார்த்துள்ளனர். அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உணர்ந்துள்ள போதிலும் ஐக்கிய தேசியக்கட்சியினர் அதனை ஏற்கவில்லை.

அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு எவரும் கூறவில்லை. எனினும் நீண்ட காலம் அமைச்சர் பதவியில் இருக்க நான் எண்ணவில்லை எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (இ-7)

# புதுவருடத்திற்கு முன் புதிய அமைச்சரவை

## பதவியேற்கும் என்கிறார் ராஜித



(கொழும்பு)

புதுவருடத்திற்கு முதல் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தினை சுதந்திரக் கட்சி நிராகரித்திருந்தது. அதனைத் தொடர்ந்து தேசிய அரசாங்கம் பிளவடையும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக செய்திகள் வெளிவந்தன.

அதேபோன்று மறுபக்கம் ஐக்கிய தேசிய கட்சிக்கும், சுதந்திரக்கட்சிக்கும் இடையில் உட்பூசல்கள் அதிகரித்துள்ள நிலையில் தற்போதுள்ள அமைச்சர்களின் பதவி மாற்றங்கள், பதவிப் பறிப்புகள் இடம்பெறும் என அரசியல் வட்டாரச் செய்திகள் தெரிவித்தன.

இவ்வாறு பல்வேறுபட்ட குழப்பங்கள் வெடித்துள்ள நிலையில் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தினால் சமகால அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களை முடிவுக்கு கொண்டு வரலாமென அரசாங்கம் தீர்மானித்தது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் விஷேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது. இதன்போது தேசிய அரசாங்கத்தில் பிளவுகள் ஏற்படாது எனவும், இப்போதைய அரசாங்கம் தொடர்ந்து செயற்படும் எனவும் பிரதமருக்கு உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அமைச்சரவையில் மாற்றும் ஏற்படுத்தப்படுவது உறுதியென ராஜித சேனாரட்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

எனவே புதுவருடத்தினைத் தொடர்ந்து அரசியலில் பல்வேறு திருப்பு முனைகள் ஏற்படலாமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பதில் முதலமைச்சராக சர்வேஸ்வரன் பதவியேற்பு




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே முன்னிலையில் நேற்று பதவியேற்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இரு வாரங்கள் ஆன்மீக சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ள இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் பதவியேற்றுள்ளார். (இ-9)



டில்லி டேர்டெவில்ஸுக்கு எதிராக நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஐபிஎல் தொடரின் 6ஆவது லீக் போட்டியில் 37 ஓட்டங்களை எடுத்த ராஜஸ்தானின் சஞ்சு சாம்சனின் ஆட்டத்தில் ஒன்று

# சென்னைக்கு கிடைத்த புதிய 'ஹீரோ' சாம் பில்லிங்ஸ்



கொல்கத்தாவுக்கு எதிரான ஐ.பி.எல்., தொடரின் 5ஆவது லீக் போட்டியில், 23 பந்துகளில் 56 ஓட்டங்கள் குவித்து, சென்னை அணியின் புதிய ஹீரோவாக உருவெடுத்துள்ளார் சாம் பில்லிங்ஸ்.

இந்தியாவில் ஐ.பி.எல். 'ரி20' தொடரின் 11ஆவது பருவகாலத்துக்கான போட்டிகள் நடக்கிறது.

சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் சென்னை - கொல்கத்தா அணிகள் மோதின.

இரண்டு ஆண்டு தடைக்குப்பின், சொந்த மண்ணில் முதல் போட்டி என்பதால் வெற்றியை நோக்கி சென்னை களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய சென்னை, ஒரு கட்டத்தில் 52 பந்துகளில் 103 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில், அணித் தலைவர் தோனியுடன் இணைந்தார் சாம் பில்லிங்ஸ்.

23 பந்துகளில் 56 ஓட்டங்கள் விளாசி, சென்னை அணிக்கு வெற்றியை எளிதாக்கினார்.

இதையடுத்து, சென்னை அணியின் புதிய ஹீரோவாக உருவெடுத்துள்ளார் பில்லிங்ஸ்.

கடந்த பருவகாலத்தில் டில்லி அணிக்காக விளையாடியவர் இவர். இம்முறை கடைசி நேரத்தில் சென்னை அணி, ரூ. 1 கோடி அடிப்படை விலைக்கு வாங்கியது.

அப்போது, சென்னை அணி வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,

'தோனியுடன் 'செல்பி' எடுக்கவே பதற்றப்பட்டவர், இனி அவருடன் விளையாடப் போகிறார்.' என தெரிவித்தது. தற்போது, கிடைத்த முதல் வாய்ப்பில், தோனியுடன் இணைந்து விளையாடி வெற்றிக்கு கைகொடுத்து அசத்தினார்.

### என்ன பேசினார்

இது குறித்து சாம் பில்லிங்ஸ் கூறியதாவது.

போட்டியில் 'இணைப்பாட்டம் தர தோனியை விட சிறந்த வீரர் இருக்க முடியாது. மிகவும் அமைதியாக ஓட்டங்கள் சேர்க்க உதவினார். 'ரி20' போட்டியில் கிடைத்த வாய்ப்பில் ஓட்டங்கள் சேர்க்க வேண்டும். அதேநேரம், எல்லா நேரத்திலும் மனதளவில் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடாது. ஓட்டங்கள் எடுக்கும்போது, தோனி என்னிடம் அதிகமாக பேசவில்லை. பந்துகளை வீணடிக்காமல் ஓட்டம் சேர்ப்பது குறித்து மட்டும் விவாதித்தோம்.

### ரசிகர்கள் ஆர்வம்

கடினமான சூழ்நிலையில், பவுண்டரி அல்லது சிக்சர் அடிக்க திறமை தேவை. ஆனால், தோனி இதை மிகவும் எளிதாக செயல்படுத்தினார்.

இதைத்தான் இவரிடம் இருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறேன். எங்களின் பயிற்சியை பார்க்கவே சென்னையில் 10 ஆயிரம் ரசிகர்கள் திரண்டனர். இதன் மூலம், இவர்கள் எந்த அளவுக்கு ஆர்வத்துடன் உள்ளனர் என தெரிந்தது. இவ்வாறு பில்லிங்ஸ் கூறினார்.

### தோனி மகிழ்ச்சி

சென்னை அணித் தலைவர் தோனி கூறுகையில், "இரண்டு ஆண்டுக்குப் பின் சென்னையில் நடந்த போட்டியில் வென்றது மகிழ்ச்சி. இரு அணி பந்து வீச்சாளர்களும் விக்கெட் வீழ்த்த சிரமப்பட்டனர்.

ஆனால், அதிகமான ஓட்டங்கள் குவித்ததால் ரசிகர்கள் மிகவும் உற்சாகத்துடன் போட்டியை கண்டுகளித்தனர்," என்றார்.




# சம்பியன்ஸ் லீக் வெளியேறியது பார்சிலோனா



சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரிலிருந்து பார்சிலோனா அணி வெளியேறியது. ரோமா அணிக்கு எதிரான காலிறுதி சுற்றின் இரண்டாவது போட்டியில் தோல்வியடைந்தது.

ஐரோப்பாவில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது.

இத்தாலியின் ரோம் நகரில் நடந்த காலிறுதி சுற்றின் இரண்டாவது போட்டியில் பார்சிலோனா - ரோமா அணிகள் மோதின.

இதன் 6ஆவது நிமிடத்தில் ரோமா அணி சார்பில் எடின் முதல் கோல் அடித்தார். தொடர்ந்து சொந்த மண்ணில் ஆதிக்கம் செலுத்திய ரோமா அணிக்கு டேனியலி (58ஆவது நிமிடம்), காஸ்டாஸ் (82) கைகொடுத்தனர். நட்சத்திர வீரர்களான மெஸ்சி, இனியஸ்டா இருந்தும் பார்சிலோனா அணியால் பதிலடி தர முடியவில்லை. முடிவில், பார்சிலோனா அணி 0-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

ஏற்கெனவே, நடந்த காலிறுதி முதல் போட்டியில் பார்சிலோனா 4-1 என வென்றிருந்தது. இதன் மூலம், இரு போட்டிகளையும் சேர்த்து இரு அணிகளும் தலா 4 கோல் அடித்துள்ளன.

ஆனால், அந்நிய மண்ணில் கோல் அடித்ததன் அடிப்படையில் பார்சிலோனாவை (0) முந்திய ரோமா (1) அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

இதுவரை, 5 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ள பார்சிலோனா அணி இம்முறை காலிறுதியுடன் திரும்பியது.



# பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு

## தினேஷ் குற்றச்சாட்டு




(கொழும்பு)

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார பின்னடைவை தடுக்கும் நோக்கில் அரசாங்கம் அதிகளவில் பணத்தை அச்சிடுவதாகத்தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறு பணத்தை அச்சிடுவதனால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிவிட முடியாது எனவும் அது மேலும் பொருளாதார வீழ்ச்சி நோக்கியே நகரும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பில் விலைப்பொறிமுறைமை எதுவும் கிடையாது எனவும் இதனால், விரைவில் எரி பொருட்களின் விலைகள் உயர்த்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ் இளைஞனின் திருமண நிகழ்வில் மகிந்த



தமிழரொருவரின் திருமண வைபவத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த திருமணம் அண்மையில் இடம்பெற்றுள்ளதுடன், வினோத் என்ற குறித்த இளைஞரின் பதிவுத் திருமணத்தையும் மகிந்த முன்னின்று நடத்தி வைத்துள்ளார்.

இதேவேளை, இந்த திருமண நிகழ்வில் மும்மதத் தலைவர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆசிரியர்களுக்கு இன்று அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் 2014 ஆம் ஆண்டு ஆசிரிய கலாசாலையில் இருந்து வெளியேறி வெளிமாவட்டங்களில் நான்கு வருடங்கள் பணிபுரிந்து இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்களையும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு சமுகம் கொடுக்கும்படி வட மாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

# அரசியல் கைதிகளாக கல்வி அதிகாரிகள்

## அமீர் அலி விசனம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மத்திய கல்வி அதிகாரிகள் அரசியல் கைதிகளாக இருந்து செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் எம்.எஸ். எஸ்அமீரலிதெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாடசாலையொன்றில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம் தேசியத்தில் சாதாரண தர பரீட்சையில் மூன்று தடவை முதன்மை பெற்று வந்தது.

இதற்குக் காரணம் அக்காலத்தில் இருந்த கல்வியியலாளர்களின்கடின உழைப்பும், வழிகாட்டலுமே.

ஆனால், காலப்போக்கில் கல்வி அதிகாரிகளுடைய நிலவரம் அரசியல் கைதிகளாக இருந்து செயற்பட வேண்டிய காலகட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. இதனால் கல்வி நிலை பின் தள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (இ-7)

# மாற்றுப் பாதைகளை பயன்படுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2018.04.14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் காலை 8.30 மணி வரை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இடம்பெறும்.

சித்திரை வருடப்பிறப்பு திருவிழாவினை முன்னிட்டு நல்லூர் முருகன் வெளிவீதி உலா வருவதனால் ஆலயச் சூழலினூடாக வாகனப் போக்குவரத்துக்காக மாற்றுப் பாதையை பயன்படுத்துமாறும் நல்லூர் ஆலயச்சூழலில் ஏற்படும் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, கோவில் வீதி பாதைகளினூடாக செல்லும் வாகனங்கள் மாற்றுப் பாதைகளை போக்குவரத்திற்காகப் பாவிக்குமாறும் பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் மாற்றுப் பாதைகளை பயன்படுத்துவதன் மூலம் ஆலயச் சூழலில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் அறிவித்துள்ளார். (இ)

# முன்னாள் ஜனாதிபதியின் மீது இந்நாள் ஜனாதிபதி அதிருப்தி

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தியடைந்துள்ளார். கடந்த 2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி மக்கள் அளித்த ஆணை தொடர்பில் சந்திரிகா வெளியிட்டு வரும் கருத்துக்கள், ஜனாதிபதியை அதிருப்தி அடையச் செய்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது சந்திரிகா கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருந்தார். அரசாங்கத்தில் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சி அங்கம் வகிக்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

எவ்வாறெனினும் 2015ஆம் ஆண்டில் ஏனைய சக்திகளுக்காக மக்கள் வாக்களிக்கவில்லை எனவும், தலைமைத்துவத்திற்காகவே வாக்களித்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏன் ஓர் வேட்பாளரை களமிறக்க முடியவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை சந்திரிகா மத்திய செயற்குழுக் கூட்டங்களில் அதிகளவில் பங்கேற்பதில்லை எனவும் இதனால் கொள்கை விவகாரங்களில் அவருக்கு போதியளவு தெளிவில்லை எனவும் ஜனாதிபதி கடுமையாக சாடியுள்ளார். (இ-7)

# லொறி மின்கம்பத்தில் மோதி விபத்து



(சாவகச்சேரி)

ஏ-9 பிரதான வீதியின் சாவகச்சேரி கல்லடி மூட்டுப் பகுதி வளைவில் வேகமாகச் சென்ற லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து அப்பகுதியில் அமைந்துள்ள கடைகளுக்கு முன்னால் உள்ள 30 அடி நீளமான மதிலை உடைத்துச் சென்று மின்கம்பத்தில் மோதி நின்றது.

இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (இ-89)

## இராசி பலன்

**மீனம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டிய நாள்.

**மேடம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** உங்களின் செயற்பாடுகளுக்கு மரியாதை கிடைக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கடகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை, செய்தொழில் மேன்மையுண்டு, பணப்புழக்கம் கூடும் நாள்.

**சிம்மம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எடுத்த காரியத்தில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| சந் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம் | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | | குரு | |

12.04.2018

பங்குனி 29, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு

ஏகாதசி காலை 7.14 மணிவரை

சதயம் பின்னிரவு 2.24 மணிவரை

சுபநேரம் 7.36-9.06 மணிவரை

இராகுகாலம் 1.36-3.06 மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**தனுசு:** உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**துலாம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# பனைசார் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பனைசார் உற்பத்திகளை ஊக்குவித்து அதனை உற்பத்தி செய்யும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை பெற்றுக் கொடுத்து வேலணைப் பிரதேசத்திலுள்ள குறித்த துறைசார் மக்களின் வாழ்வியலுக்கு இத்துறையூடாக ஒரு நிரந்தர பொருளாதாரத்திற்கு வழிவகை செய்து கொடுப்பதேஎமது நிலைப்பாடாகும்என வேலணை பிரதேச தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் குறித்த பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு பனைசார் கைப்பணி உற்பத்தி மற்றும் விற்பனை நிலைய திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக மக்களின் வாழ்வாதாரத்தில் அதிகளவு பங்களிப்பது பனை வளம். இந்தப் பனைவளம் தீவகப் பகுதியின் சொத்தாகவும் காணப்படுகின்றது. பனைவளத்தின் முக்கியத்துவத்தையும் அத்துறை சார்ந்த மக்களது பாதுகாப்பையும் தொழில் வாய்ப்புகளின் உறுதித்தன்மையையும் பெற்றுக்கொடுத்து அந்த மக்களது வாழ்வியலுக்கு வழிவகை செய்து கொடுத்தவர் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவே.

அத்துடன் கடந்த காலங்களில் அவர் அமைச்சராக இருந்த காலப்பகுதிகளில் இத்தொழில் சார் மக்களின் வாழ்வியலில் நிரந்தர தொழில் வாய்ப்புக்காகவும் அதன் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கும் சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுத்தது மட்டுமல்லாது பனைசார் ஆராய்ச்சிக்கென கைதடியில் பனை ஆராய்ச்சி நிலையத்தையும் உருவாக்கிக் கொடுத்து இத்துறைசார் மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தவர் எமது செயலாளர் நாயகம் என்பதை யாரும் மறக்க முடியாது.

அந்த வகையில் அவரது வழிநடத்தலின் கீழ் பணியாற்றும் எமது கட்சியிடம் இப்பகுதி மக்கள் அதிகாரத்தை தந்துள்ளனர்.

இந்தப்பகுதி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிச்சயம் நாம் ஈடேற்றிக் கொடுப்பதுடன் பனைசார் உற்பத்தி பொருட்களின் தரத்தை உயர்வடையச் செய்து அவற்றுக்கு உலகத் தரம்மிக்க சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் வழிவகை செய்து கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தனக்குத் தானே தீமூட்டிய குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

உறவினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி தனக்கு தானே தீமூட்டிய குடும்பஸ்தர் ஒருவர் ஒரு மாதங்களுக்கு பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிதாபமாக உயிரிழந்தார்.

ஆனைக்கோட்டை சாவக்கட்டு பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துராசா முனீஸ்வரன் (வயது 46) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடற்றொழில் மேற்கொண்டு வந்த குறித்த நபருக்கும் மனைவிக்குமிடையே குடும்பப் பிரச்சினை இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் கடந்த மூன்றாம் திகதி குறித்த நபர் தனது வீட்டில் உணவு உண்டுவிட்டுபடுத்துறங்கியுள்ளார். அந்த நேரம் மனைவியின் உறவினரான ஒருவர் அங்கு வந்து குறித்த நபரை காலால் உதைந்து பொல்லால் சரமாரியாக தாக்கிவிட்டு சென்றுள்ளார்.

பின்னர் கடந்த 7 ஆம் திகதி இரவு குறித்த நபர் வீதியில் வரும் போது முன்னர் தாக்கிய அதே நபர் இவரை மீண்டும் தாக்க போவதாக கூறி அச்சுறுத்தியுள்ளார்.

பின்னர் கடந்த 9 ஆம் திகதியும் அதே போன்று வீதியால் நடந்து வந்த குறித்த நபரை மீண்டும் அந்த உறவினர் அச்சுறுத்தியுள்ளார். இந்த விடயத்தை தனது மனைவியிடமும்சகோதரனிடமும் தெரியப்படுத்திய குறித்த நபர் பயமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் அன்றைய தினமே இரவு 9.30 மணிக்கு தனக்கு தானே தீ மூட்டியுள்ளார்.

உடனடியாக குடும்பத்தினர் இணைந்து தீயை அணைத்ததுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளனர். தொடர்ச்சியாக அங்கு சிகிச்சை பெற்ற குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (இ-9)

# கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசாரஅலுவல்கள்திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான நாடகம், எழுத்தாளர்கள், நடனம், ஓவியம், சிற்பம், இசை, கிராமியக்கலை, திரைப்படக் கலை, மற்றும் ஏனைய கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றிய அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

எனவே தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த மேற்குறிப்பிட்ட துறைகளில் சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலகப் பிரிவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து 10.05.2018 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

# உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான பாரம்பரிய விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகாரசபை வட மாகாண தொழில் துறைத் திணைக்களம், யாழ்ப்பாண கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து நடத்தும் சுதேசிய உணவு மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையும் பாரம்பரிய விளையாட்டு விழாவும், "சித்திரை சிறக்கட்டும்" என்னும் தொனிப் பொருளில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக கலாசார அதிகார சபைத் தலைவர் பொ.தயானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத் தலைவர் கு.விக்னேஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமாகணம் தொழிற்றுறை திணைக்களப் பணிப்பாளர் க.ஸ்ரீமோகன், யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலய பங்கு தந்தை ம.இ.வி. இரவிச்சந்திரன், யாழ். மாநகர சபை உறுப்பினர் நா.தனேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட செயலக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் இ.கிருஸ்ணகுமார், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)


# நிர்வாகத் தெரிவு

(வரணி)

வரணி பிரதேச வைத்தி சாலையின் நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்றது. இதில் சங்கத்தின் புதிய தலைவராக வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் பி. சுதந்திரமதன், செயலாளராக க.விஜயகாந்தன், பொருளாளராக ஆ.மகேந்திரனும், உபதலைவராக செ.நவரத்தினசாமியும் உப செயலாளராக கா.ராஜ்மோகனும் நிர்வாக கழக உறுப்பினர்களாக ச.கணேசமூர்த்தி, சி.அருணாசலம், க.பரமானந்தம், க.யுகந்தினி, இ.ஜெகதீஸ்வரன், க.பவளம், வெ.மகாலிங்கசிவம், இ.சுதாகரன், செ.மனோரூபன், ந.வசந்தராணி போன்றோரும் கணக்காய்வாளராக த.நடராசாவும், போசகராக டாக்டர் வி.ஆறுமுகமும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-103)



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இவ்வருடம் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின் போது விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த வரதா விவேகானந்தன் தம்பதியினர் (பழையமாணவர்) பாடசாலை கவின்கலை மன்ற ஆசிரியர்களிடம் இலத்திரனியல் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்ததைப் படத்தில் காணலாம்.



சென்.றொக்ஸ் சனசமூக நிலைய மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் உயிர்ப்பு பண்டிகையையொட்டி விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் சென்.றொக்ஸ் மைதானத்தில் யாழ்.மரியன்னை பேராலய பங்குத் தந்தை நேசராசா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும், சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.அன்றுஷம் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-குருநகர் செய்தியாளர்)

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2017

**யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்**

பூ.நிதர்சன்-8ஏபி, சி.பிரசாந்-8ஏசி, இ.சகாம்சன்-5ஏ2பிசிஎஸ், ர.சாமந்தி-ஏ2பி3சி2எஸ், த.பிரதீபா-2பி3சி3எஸ், ஜெ.ரஜிதரன்-பி4சி4எஸ், ஆ.ஆர்த்திகா-3சி4எஸ், ம.அனுஜா-பி3சி4எஸ்.

**யா/ கரணவாய் மகா வித்தியாலயம் கரவெட்டி**

வி.மணிமேகலை-8ஏபி, க.மதுமிதா-7ஏபிசி,த.தர்மிகா-7ஏ2சி, வி.விதுஷன்-5ஏபி2சிஎஸ், பா.பானுசா-5ஏ3சிஎஸ், மோ.சுஜீவன் -5ஏ3சிஎஸ், ந.சுலைக்ஷன்-4ஏ3பிசிஎஸ், ம.பேபிசாமினி- 4ஏ2பி2சிஎஸ், தே. மனோஜினிகன்-4ஏ4சிஎஸ், ச.லோசன்- 3ஏபி3சி 2எஸ், ஜெ.லிசானி- 2ஏபி3சி2எஸ், ர.பிரியங்கா-ஏபி4சிஎஸ், ந.கோகுஷன்-3பி3சிஎஸ், வி. கவிமேனன்- 2பி3சி3எஸ், ச.விக்னேஸ்வரன்-2பி3சி3 எஸ், சி.ஆரணியா -2பிசி4 எஸ், ஜெ.கனிஸ்ரன்-பி3சி4எஸ், இதிருஷன்-4சி4எஸ்.

**யா/ நாகர்கோவில் மகா வித்தியாலயம்**

ர.தனராஜ்-ஏபி4சி3எஸ், க.கரன்ராஜ்-3ஏ2சி2எஸ், சி.சிவ ரேக்கா- பி4சி3எஸ், சு.விஜிதா-பி3சி2எஸ், அ.நிஸ்ரலா-பி3சி2எஸ்.

**யா/செங்குந்தா இந்துக் கல்லூரி**

பா-அருண்ராம்-6ஏ2பிசி, ரா.ரஜீபன்-6ஏ2சிஎஸ், ச.கேதீஸ்வரன்- ஏ3சி2எஸ்.

# அபிவிருத்திக்கு ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு ஜே/257, ஜே/258 ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய 22ஆம் வட்டாரத்தின் பிரதேச அபிவிருத்தியை முன்னிறுத்திசெயற்படமக்கள் ஆலோசனைக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் 22ஆம் வட்டாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் ந. கஜேந்திரகுமார் அவ் வட்டாரத்தில்உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்து கலந்து ரையாடியிருந்தார்.

இதன் போது குறித்த வட்டாரத்தில் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக செய்வதற்குரிய ஆலோசனைகளை வழங்குவதற்கென அவர்களில் இருந்து மக்கள் ஆலோசனைக்குழு தெரிவு செய்யப்பட்டது. இவ்வட்டாரத்தில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள்,மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்

இவ்வட்டார பகுதியில் உள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வலி.கிழக்கின் சிறந்த வட்டாரமாக 22ஆம் வட்டாரத்தை உருவாக்கும் நோக்கில் இவ் ஆலோசனைக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது என வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் தெரிவித்தார். (இ-9)

# பங்குனிப் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சித்தியம்புளியடி சித்தியம்பதி அன்னமார் தேவஸ்தான வருடாந்த பங்குனிப் பொங்கல் விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அபிஷேகப் பூசையுடன் ஆரம்பமாகும். நாளை மறுதினம் சித்திரைப் புதுவருடப் பிறப்பு பூசை வழிபாட்டுடன் பிற்பகல் 12.15 மணிக்கு கைவிசேடம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (இ)

# வருடப் பிறப்பு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான விளம்பி வருடப் பிறப்பு உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகி காலை 9 மணியளவில் வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதி வலம் வருவார். (இ)

# பாதிக்கப்பட்ட விவசாய சமூகத்திற்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாய சமூகத்திற்கு நிவாரணம் வழங்குவதற்காக 600 ஏக்கர் சோளப் பயிர்ச் செய்கைத் திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இரண்டு போகங்கள் எத்தகைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத பிரதேசங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இங்கினிமிட்டிய திட்டத்திலுள்ள மிகவும் குறைந்த அளவில் உள்ள நீரைப் பயன்படுத்தி இந்த விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு மேலதிக பயிர்ச்செய்கைக்காக விவசாய சமூகத்திற்கு நிவாரணம் வழங்க மேலதிகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சூரிய சக்தியினால் நீர்ப்பம்பிகளை இயக்கி நீரைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம், களை எடுக்கும் இயந்திரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம், இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாடுகளை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தி விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் 'நிவாரணம் வழங்கும் வகையில் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. (இ-7)

# பன்னிரு திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை களபாவோடை வசந்தபுரம் ஸ்ரீ வசந்தநாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இப் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வில் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஓதுவார் மூர்த்திகளான கு.இராமச்சந்திரன், ச.சுப்பிரமணியம், மு.பார்வதிநாதன், இ.இராமகிருஷ்ணன், பு.மகேஸ்வரன், ச.பாலமுருகன் ஆகியோரும் பக்கவாத்திய கலைஞர்களான காமராசு (மிருதங்கம்), முருகன் (மிருதங்கம்) ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

# புதுவருட உதவி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கந்தையா கிருஷ்ணரின் நிதிப் பங்களிப்புடன் புதுவருட உதவிகள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் குப்பிளானிலுள்ள சிவபூமி ஆச்சிரமத்தில் இந்து கலாசார அமைச்சின் யாழ். மாவட்ட ஓய்வு பெற்ற உதவிப் பணிப்பாளர் சிவ மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் திருமதி.மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கிருபாலேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், தெல்லிப்பழை சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் த.கிருஷ்ணகுமார், கௌரவ விருந்தினர்களாக குப்பிளான் வடக்கு கிராம உத்தியோகத்தர் ந.நவசாந்தன், குப்பிளான் தெற்கு கிராம அலுவலர் பே.மயூரதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# தாக்குதலால் இருவர் பலி!

(கொழும்பு)

நிட்டம்புவ, எல்லக்கல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தக் கொலை நடத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த நபர் வதுபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே அவர் உயிரிழந்துள்ளார். பனாவல, தும்மலகொட பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை வலப்பனை, திம்புட்டுகொட பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடபே, திம்புட்டுகொட பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை கைது செய்ய வலப்பனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம்: 04**
**ஆதன இல: 64/52A**
**வீதி: சுதுமலை ஒழுங்கை**
**கிராம சேவையாளர் பிரிவு: J/131 சுதுமலை தெற்கு.**

வட்டாரம் 04, சுதுமலை ஒழுங்கை, ஆதன இல 64/52A இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "கூரைத்தட்டிக்காடு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 4.81 கொண்ட இவ்வாதனம் சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பத்மநாதன் கைம்பெண் ஈஸ்வரி ஆகிய இவர்கள் எச்சாட்டி, சுதுமலை, மானிப்பாய் சேர்ந்த வல்லியன் நடேசன் பெண் சரஸ்வதி ஆகிய இவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் எம்.தியாகராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 16472 ஆம் இலக்க 2016.02.08 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாதனத்தின் தாயுறுதி திரு.மு.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 2194 ஆம் இலக்க 2007.02.28 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியாகக் காணப்படுகின்றது. எனவே இவ்வாதனம் தமக்கு சொந்தமானது என வெளிப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. T.தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 8509 ஆம் இலக்க 2016.01.31 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "கூரைத் தட்டிக்காடு" நிலப்பரப்பு 02 குளி 4.81 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வல்லியன் நடேசன் பெண் சரஸ்வதி ஆகிய இவர்களின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.



செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச
சபை, மானிப்பாய்.

(3599)

(3599)



## பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி

## மீள் கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மந்திகை சந்தைக்கடை இல 08 இனை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி சபையால் கோரப்படுகின்றது.

**01.**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- **12.04.2018 தொடக்கம் 25.04.2018 வரை**
**02.**கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி :- **26.04.2018 மு.ப 10.00 மணி**
**03.**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- **26.04.2018 மு.ப 11.00 மணி**
**04.**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் :- **பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகம்**

**மந்திகைச் சந்தைக்கடை**

| கடை இலக்கம் | கடையின் விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 8 | மந்திகைச் சந்தைக்கடை இல 08 | 420,000.00 | 10000.00 | 1000.00 | 3,500.00 |

**பொதுவான நிபந்தனைகள்**

**1.**கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு **26.04.2018 மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**2.**கேள்விப்பத்திரம் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையைக் கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.

**3.**தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.

**4.**மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

**5.**மேலதிக தகவல்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:-இக்கடையினை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவருக்கு கடையின் வாயிற்கதவினை குத்தகைக்கு பெறுபவரின் சொந்தச்செலவில் கிழக்குப்புறமாக மாற்றியமைப்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.**

(சி-2203)

தவிசாளர்
பருத்தித்துறை பிரதேச சபை.
புலோலி.



## கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/8448 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>தகைமை/தொழில்: மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவி<br>தொ.இ: G/8476 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/8450 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8478 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 61 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/8451 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:BBA<br>தொ.இ: G/8481 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 17<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: B/8452 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 27<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்:BSc, MSc/Demo<br>தொ.இ: G/8484 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மணலாற்றில் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் ஆக்கிரமிப்பு

## மாகாணசபையில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளோம் விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

மணலாற்றுப் பகுதியில் தமிழ் மக்களின் தாய் நில பிரதேசங்கள் பல இன்று பேரின வாத சக்திகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கையொன்றை மாகாண சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளோம் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதன்போது வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் வெலிஓயா மற்றும் கொக்கிளாய் பிரதேசங்களுக்கு நேரில் சென்று அங்கு தமிழர்களின் நில ஆக்கிரமிப்பு, கடல் பிரதேசத்தில் அத்துமீறி சட்டவிரோதமான மீன்பிடி விடயங்கள் போன்றவற்றை அவதானித்துள்ளனர்.

தமிழர்களின் சொந்த வாழ் இடங்கள் மற்றும் மணலாற்று பகுதியில் தமிழ் மக்களின் தாய்நில பிரதேசம் பல இன்று பேரின வாத சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதில் சில குளங்கள்கூட ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. குளங்களை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். இந்த விடயங்கள் தொடர்பில் மாவட்ட செயலரை சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்துள்ளோம்.

இங்கு அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடர்ந்து வரும் மாகாண சபையின் அமர்வுகளில் கதைக்கவுள்ளோம்.

இதற்காக முதலில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து அதில் நாங்கள் இந்த பிரச்சினைகளை கலந்துரையாடி அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

இதன் பின்னர் ஒரு பொதுவான அறிக்கையை மாகாண சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# உடைப்பெடுத்து புனரமைக்கப்படாதுள்ள முறிகண்டிக் குளத்தைப் புனரமையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள நீண்ட காலமாக உடைப்பெடுத்து புனரமைக்கப்படாது இருக்கின்ற முறிகண்டிக்குளத்தைப் புனரமைத்துத் தருமாறு திருமுறிகண்டி இந்துபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முறிகண்டிக்குளம் உடைபெடுத்த நிலையில் காணப்படுவதுடன், இதன் கீழுள்ள 132 ஏக்கர் வயல் நிலங்களிலும் குறிப்பிட்ட பகுதி இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

இப்பகுதியில் தற்போது வயல் நிலங்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றபோதும் குளம் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இக்குளத்தின் கீழுள்ள வயல் நிலங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வந்தனர். கடந்த 2009 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்ததை யடுத்து 2012 ஆம் ஆண்டு வரைக்கும் இப்பகுதி வயல் நிலங்கள் படையினர் வசமிருந்து பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தன.

ஆனால், உடைப்பெடுத்த குளம் இதுவரை புனரமைக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த குளத்தை புனரமைத்துத் தருமாறும் இதன்மூலம் இந்த வயல் நிலங்களை சீர்செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் என இப் பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (2-315)




# சமுர்த்தி புத்தாண்டு வர்த்தகக் கண்காட்சி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசம் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கிவிக்கும் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடத்தப்படும் மாபெரும் புத்தாண்டு வர்த்தகக் கண்காட்சி புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி க.ஜெயபவானி, புதுக்குடியிருப்பு இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பலர் தங்கள் சுய முயற்சியை மேற்கொண்டு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளதுடன் தேசியத்தில் இரண்டாம் இடம் கிடைத்த பல உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தியுள்ளார்கள். இன்றும் இந்த வர்த்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய மட்டத்தில் சமுர்த்தி திணைக்களத்தினால் நடத்தப்பட்ட உற்பத்தியாளர்களுக்கான போட்டியின்போது முதல் இடங்களைப் பெற்ற உற்பத்தியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கௌரவிப்பினை மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கி வைத்துள்ளார்.

சமுர்த்தி திணைக்களத்தால் நடத்தப்பட்ட கெற்குமு சிறுவர் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்துள்ளார். (2-281)

# வீதியைக்கடக்க முயன்ற முதியவரை மோதித்தள்ளியது மோ. சைக்கிள்

(பனிக்கன்குளம்)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் புகையிரதக் கடவை அருகில் வீதியைக் கடக்க முயன்ற முதியவர் மீது வைரவர் புளியங்குளம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் முதியவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றது.

இதேவேளை குறித்த மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்துள்ளதுடன் பயணித்த இருவரும் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# கிளிநொச்சி கணனி வள நிலையத்திற்கு சீல்; வலயக் கல்விப் பணிப்பாளர் அதிரடி நடவடிக்கை

(பரந்தன்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகின்ற வலயக் கல்வித்திணைக்களத்திற்குரிய கணனி வள நிலையத்திற்கு கடந்த வாரம் சீல் வைத்துள்ளார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ்.

இரவு நேரங்களில் குறித்த இடம் கூட்டங்களுக்கும் தேவைகளுக்கும் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தமையினால் வலயக் கல்விப்பணிப்பாளரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கணனி வள நிலையம் தற்போது முழுமையான செயற்பாடுகள் இல்லாதிருக்கின்ற நிலையில் மாதாந்தம் மின்சாரக் கட்டணம் மற்றும் இணைய இணைப்பு (டொங்குள்) கட்டணம் என்பன வலயக் கல்வித் திணைக்களமே செலுத்தி வருகிறது.

எனவே இது தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை தொடர்ந்து அவர் கடந்த வாரம் குறித்த கணனி வள நிலையத்திற்கு சீல் வைத்துள்ளார். அத்தோடு இணைந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இயங்கி வருகின்ற அக்கராயன் ஆசிரிய வள மத்திய நிலையமும் மூடப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் திறக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் கணனி வள மத்திய நிலையம் சீல் வைக் கப்பட்டேயுள் ளது. (2-312)

# காட்டு யானைகளின் தொல்லையால் நாளாந்தம் பயன்தரும் மரங்கள் அழிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் ஆகிய பகுதிகளில் உயிலங்குளம் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆலங்குளம், துணுக்காய், உயிலங்குளம் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறு யானைகளின் தாக்கங்களினால் தமது காணிகளில் உள்ள பெருமளவான பயிர்ச் செய்கைகள் தினமும் அழிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ள இப் பகுதி மக்கள் தாங்கள் உயிர் அச்சுறுத்தல்களைக் கூட எதிர் கொள்ளும் நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை தமது பயிர்ச்செய்கைகளை குரங்குகளும் அழித்து வருகின்றன எனவும் தெரிவித்துள்ள இப் பகுதி மக்கள் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)



முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசம் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கிவிக்கும் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடத்தப்படும் மாபெரும் புத்தாண்டு வர்த்தகக் கண்காட்சி நேற்று புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் நடைபெற்ற போது... (படங்கள்- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தமிழ் மீனவர்களின் பாரம்பரிய தொழில் இடங்களில் சிங்கள மீனவர்கள் அடாத்தாக தொழில்

## முல்லை. அரச அதிபரிடம் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மீனவர்களின் பாரம்பரிய தொழில் இடங்களில் சிங்கள மீனவர்கள் அடாத்தாக தங்கியிருப்பதுடன், சட்டத்திற்கு மாறான தொழில்களையும் செய்துவருகிறார்கள். இவற்றை கட்டுப்படுத்த மாவட்ட செயலர் அதிகாரத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்என முல்லைத்தீவு மாவட்ட செயலரிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் 22 வரையான மாகாணசபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர். இதன் நிறைவில் மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிறுத்தக்கோரி ஜனாதிபதி, பிரதமருக்கான மகஜர் ஒன்றினை மாவட்டசெயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனிடம் மாகாணசபை உறுப்பினர்கள் கையளித்திருந்தார்கள்.

இதன்போது இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்படி கோரிக்கையை மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் முன்வைத்துள்ளார்கள்.

இந்தவிடயம் தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் ஜீ.ரி.லிங்கநாதன் கருத்து தெரிவிக்கையில், நாயாறு பகுதிக்கு சென்றிருந்தபோது அங்கு சிங்கள இனத்தவர் ஒருவர் தனியாக 40 படகுகளை வைத்து தமிழ் மக்களுக்கு சொந்தமான இடத்தில் தொழில் செய்து வருகின்றார்.

அதனைக் கட்டுப்படுத்த கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் மற்றும் பொலிஸ் ஆகியவற்றை பயன்படுத்தி மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கலாம். எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான நடவடிக்கை எவையும் எடுக்கப்படாத நிலையில் குறித்த நபர் தான் நினைத்தால் போல் தொடர்ந்தும் தொழில் செய்து வருகின்றார். எனவே இவ்வாறான சில விடயங்களை மாவட்ட செயலர் கவனத்தில் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மாகாணசபை உறுப்பினர் க.சிவநேசன் கருத்துத்தெரிவிக்கையில்,

கொக்கிளாய் இறங்குதுறைக்கு சென்றிருந்தபோது அங்கே எந்தச் சலனமும் இல்லாமல் சிங்களமீனவர்கள் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி தொடர்ச்சியாக கரைவலை இழுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டு 72 பேருக்கு அனுமதி கொடுத்ததாக கூறிக்கொண்டு இப்போது பெருமளவு சிங்கள மீனவர்கள் அங்கே தங்கியிருக்கின்றார்கள். அதனை மேலும் அதிகரிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்வதுடன் சட்டத்திற்கு மாறான தொழில்களையும் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்பாக மாவட்ட செயலர் உடனடிநடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். (2-315)

# தமிழ்-சிங்கள புத்தாண்டு நிகழ்வு நேற்று கிளிநொச்சியில்





(பரந்தன்)

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழ்,சிங்கள புத்தாண்டு நிழ்வுகள் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி 57 படைபிரிவினரும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள குறித்த சித்திரை புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.30 மணி முதல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. .

கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரியாக செயற்பட்டு நேற்றுடன் பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவண்ண பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சர்வ மத பிரார்த்தனைகளுடன் ஆரம்பமான குறித்த நிகழ்வில் விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் உள்ளிட்டவை இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (2-315-312)

# நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கி குடிநீரைப்பெற உதவுங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்,மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை காரணமாக அதிகளவானோர் சிறுநீரக நோய்குள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடிநீர்க்கிணறுகளில் பெருமளவான கிணறுகள் நீர் வற்றிக்காணப்படுவதுடன், இந்தப்பகுதியில் பெறப்படுகின்ற நீரை குடிதண்ணீராகப் பாவிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ள இப்பகுதி மக்கள் இந்தப்பிரதேசங்களில் அதிகளவான மக்கள் சிறுநீரக நோய்க்குள்ளாகி இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆதலால் கிராம மட்ட அமைப்புக்களுக்கோ அல்லது தனியாருக்கோ நீர்சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கி அவற்றின் மூலம் சுத்திகரிக்கப்படுகின்ற நீரை மக்கள் பெறக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு சுத்திகரிக்கப்படுகின்ற நீரை அதற்கேற்ற பெறுமதியைக் கொடுத்து மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இருக்குமென்றும் பாதிக்கப்பட்டமக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு அன்பு இல்லச் சிறார்களுக்கு பாடசாலை புத்தகப் பைகள், கொப்பிகள், காலணிகள் என்பனவற்றை சங்க உறுப்பினர்கள் நேரில் சென்று அண்மையில் வழங்கி வைத்ததை படத்தில் காணலாம்.




# கேப்பாபிலவு மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தனர் மாகாணசபை உறுப்பினர்கள்

## பிலவுக்குடியிருப்பு வீடுகளையும் பார்வை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் அத்துமீறிய சிங்கள குடியேற்றம்,காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா,நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோர் சென்றிருந்ததுடன் கேப்பாபிலவில் 408 ஆவது நாளாக போராட்டம் மேற்கொள்ளும் மக்களை சந்தித்து அவர்களின் காணிவிடுவிப்பு தொடர்பில் கருத்துக்களை கேட்டறிந்துள்ளதுடன் பிலவுக் குடியிருப்பிற்கு சென்று அங்கு விடுவிக்கப்பட்ட மக்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் மக்களுக்கு கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளையும் சென்று பார்வையிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எங்கெங்கு சிங்களக் குடியேற்றங்கள் தடுக்கப்படாமல் நடைபெறுகின்றனவோ அவற்றையும் தமிழ்மக்கள் மீன்பிடிக்க முடியாமல் வெளிமாவட்டாங்களில் இருந்து வருகை தருபவர்கள் மீன்பிடிப்பது தொடர்பிலும் கடந்த 3 ஆம், 4 ஆம் திகதிகளில் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் பேசியதன் அடிப்படையில் மாகாணசபை தீர்மானத்தை நிறைவேற்றிய தன் அடிப்படையிலும் மாகாண சபை உறுப்பினர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களை பார்வையிட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஆதரவாக நாங்களும் வந்துள்ளோம்.

இந்த நேரத்தில் நான் கேப்பாபுலவு மக்கள் 408 நாளாக போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் அவர்களை பார்வையிட்டுள்ளேன். தென்னிலங்கையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இடையே பல முரண்பாடுகள் இருந்த பொழுதிலும் தமிழ் மக்களின் விடயங்கள் தொடர்பில் கடந்த மூன்றாம் திகதி பேசியபொழுது, தமிழ்மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற விடயங்களில் தாங்கள் ஒன்றாக இருந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுவோம் என்ற கருத்தை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன் சொல்லியுள்ளார்கள். இதன் எதிர்காலத்தை நாங்கள் இனிமேல் தான் தீர்மானிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# முருங்கனில் இலவச மருத்துவமுகாம்




(குருமன்காடு)

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் பகுதியிலுள்ள அலவக்கை பகுதியில் நேற்று முன்தினம் ஒருநாள் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்று மூக்குக் கண்ணாடிகள்வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான பிஷப் பி. எம். இராஜசிங்கத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இம் மருத்துவ முகாம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் முருங்கன் பொலிஸ் நிலைப் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாமில் 115 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இப் பகுதி மக்களின் நீண்டகாலத் தேவை இதனூடாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தககது.(2-281)







முல்லைத்தீவு மாவட்டத்தின் கொம்பாவில், சனசக்தி முன்பள்ளியில் சிறார்களுக்கான விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்ற போது...

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019

# சுபச்செய்தி வந்து சேரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் நீச்சம் பெற்று லாபாதிபதி சந்திரனுடன் இணைந்து சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 4, 7இற்கு அதிபதியான குருபகவான் வக்ரம் பெற்று குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். செவ்வாய்-சனி சேர்க்கை சுக ஸ்தானத்தில் ஏற்படுகிறது. எனவே ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய வருடம் இது. பாம்புக் கிரகமான ராகு 11ஆம் இடத்திலும், கேது பஞ்சம ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார்கள். விரயாதிபதி சூரியன் தனாதிபதி சுக்ரனுடன் சேர்ந்து அஷ்டம ஸ்தானத்தில் உலா வருகிறார். அவர்களை குரு பகவான் பார்க்கிறார்.

விளம்பி வருடத்தில் உள்ள இந்த கிரக நிலையை உங்களின் சுய ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வது நல்லது. தசாபுத்தி பலனும் கோச்சார பலனும் ஒன்றையொன்று இணைந்து செயற்பட்டால் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப்பிடிக்க இயலும். இல்லையென்றால் பரிகாரங்களைச் செய்து கெடுபலன்களின் தாக்குதல்களில் இருந்து ஓரளவேனும் விடுபடலாம்.

இந்த ஆண்டு சித்திரை மாதப்பிறப்பு சனிக்கிழமையில் பிறக்கிறது. உங்கள் இராசிக்கு 5,6இற்கு அதிபதியானவர் சனிபகவான். உங்கள் இராசிநாதன் புதனுக்கு சனி பகவான் நட்பு கிரகமாவார். எனவே பெரிய அளவில் எதுவும் பாதிப்புகள் ஏற்படாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பொதுவாக நீங்கள் எந்தத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் அதில் அக்கறை காட்ட வேண்டிய நேரம் இது. எதிலும் அவசரம் காட்டவேண்டாம். உடல்நலக் குறைபாடு உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ ஏற்படலாம். அதிக காரமான உணவுகளை விலக்குவது நல்லது. குடும்பப் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்லவேண்டாம். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

### குரு பார்வை பலன்!

ஆண்டின் தொடக்கத்தில் குரு உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 4, 7இற்கு அதிபதியான குருபகவான் வக்ர இயக்கத்தில் இருப்பது யோகம்தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நன்மைகளைக் கொடுப்பார். குடும்பத்தில் உள்ள குறைகள் அகலும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். நிதிப்பற்றாக்குறை அகலப் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். திடீர் தன இலாபம் வந்துசேரும். குரு பகவான் உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கிறார்.

6ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் எதிர்ப்பு, வியாதி, கடன், உத்தியோகம் போன்றவற்றில் நல்ல மாற்றங்கள் உருவாகும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறையும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். நிலுவையில் இருந்த சம்பள பாக்கிகள் வந்து சேரும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும்.

8ஆம் இடத்தை குரு பார்ப்பதால், தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய முயற்சியில் இறங்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேறு வேலைக்கு விண்ணப்பிப்பார்கள். நீண்ட நாளையப் பிரச்சினை ஒன்று மீண்டும் தலைதூக்கலாம். விரயங்கள் கூடுதலாகும்.

10ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். அரசுப் பணிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். உயர்ந்த மனிதர்களின் ஆதரவால் உங்கள் புகழ் கூடும். சொத்துகள் வாங்க, விற்க எடுத்த முயற்சி வெற்றி தரும். பெற்றோரது ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். சுய ஜாதகத்தில் குரு வக்ரம் பெற்றிருப்பதால் திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

### செவ்வாய்-சனி சேர்க்கையும், பார்வையும்!

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் செவ்வாய்-சனி சேர்க்கை ஏற்படுகிறது. அதன் பிறகு 20.3.2019 முதல் 13.4.2019 வரை சனி பகவானை செவ்வாய் பார்க்கும் அமைப்பு உள்ளது. இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. சுக ஸ்தானம் பலம் இழந்திருப்பதால் ஆரோக்கிய குறைபாடு ஏற்படலாம். என்ன வைத்தியம் பார்த்தாலும் குணமாகவில்லையே என்று கவலைப்படுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கூடுதல் கவனம் தேவை. தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை.


### விருச்சிகத்தில் குரு!

விளம்பி வருட புரட்டாசி மாதம் 18ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று, விருச்சிக இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்திற்கு குரு வருகிறார். முன்னேற்றம் தருகின்ற இடம் இந்த மூன்றாம் இடம். உடன் பிறந்தவர்கள், உயரதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கழுத்து, தொண்டை சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவானின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. வாழ்க்கைத்துணையை நிர்ணயிக்கும் இடம் 7ஆம் இடமாகும். எனவே இல்லறத்தை நல்லறமாக அமைத்துக் கொடுக்கப் போகிறார். இந்த குருபகவான். சப்தம ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் வரன்கள் வாசல் தேடி வரும். பொருத்தம் பார்த்து வரன்களைத் தேர்ந்தெடுத்தால் வருத்தமில்லாத வாழ்க்கை அமையும். திருமணமானவர்களாக இருந்தால் அன்பும், பாசமும் அதிகரிக்கும். தம்பதியர்களுக்குள் இதுவரை இருந்த மனஸ்தாபங்கள் மாறும். வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினருக்கு பெருமைசேர்க்கும் விதத்தில் பெண்களின் வாழ்க்கை அமையும்.

9ஆம் இடத்தை குரு பார்ப்பதால், மனபயம் அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். எதிர்காலம் இனிமையாக அமைய எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். பெற்றோரின் பாசம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துகளில் இருந்த பிரச்சினைகள் அகலும். சேமிப்பின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வீர்கள். தொழிலில் வரும் இலாபத்தைச் சேர்த்து மனை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

குருவின் பார்வை 11ஆம் இடத்தில் பதிவதால் பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். தடைகள் அகலும். முகஸ்துதி பாடியவர்கள் விலகுவர். அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு சகப் பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பார்த்த இலாகா மாற்றம் வந்துசேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள், விருப்ப ஓய்வுபெற்று சுயதொழில் செய்வது பற்றி சிந்திப்பார்கள்.




### ராகு-கேது பெயர்ச்சி!

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசிக்கு 18ஆம் இடத்தில் மேலோங்க வைக்கப் போகிறார். இனி கவலை என்ற மூன்றெழுத்து உங்களை விட்டு விலகப்போகிறது. நன்மை என்ற மூன்றெழுத்து உங்களை நாடிவரப் போகிறது. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக்கொடுப்பார்கள். அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடலாம்.

சுக ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் 4ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி உருவாகலாம். ஒவ்வாமை நோய் வந்து மறையும். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. பெற்றோரின் மணிவிழா, பவளவிழா போன்ற சுபகாரியங்களும், கட்டடத் திறப்புவிழா போன்றவைகளும் இக்காலத்தில் நடைபெற வாய்ப்பு உண்டு. அனுகூலமான ஸ்தலங்களில் நாக சாந்தி பரிகாரங்களைச் செய்யுங்கள்.

### வளர்ச்சிக்குரிய வழிபாடு!

புதன்கிழமை விரதமும், யோக நரசிம்மர் வழிபாடும் நன்மையை வழங்கும். அஷ்டலட்சுமி கவசம் பாடி, லட்சுமிதேவி வழிபாட்டை மேற்கொண்டால் அனைத்து யோகங்களும் வந்து சேரும்.

### குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!

உங்கள் இராசிக்கு 4, 7இற்கு அதிபதியான குரு பகவான், வக்ரம் பெறுவது யோகம் தான். புதிய வாகனம் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சுபச்செய்திகள் வீடு வந்து சேரும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் அனுகூலமாக நடந்துகொள்வர். அன்பான வாழ்க்கைத் துணை அமைய எடுத்த முயற்சி பலன்தரும்.

சனியின் வக்ர காலத்தில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம். 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குவதால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் கைகூடும். சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். நண்பர்களால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வெளிநாட்டுக்கு அனுப்பும் பிள்ளைகளை நல்ல விதமாக பார்த்துக்கொள்வது நல்லது. இக்காலத்தில் சனி பிரீதியை முறையாகச் செய்வதோடு எள் கலந்த சாதத்தை காகத்திற்கு வைப்பது உகந்தது.

### கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு!

விளம்பி வருடம் உங்களுக்கு பொருளாதார நிலையில் சிறப்பாக இருந்தாலும், மனக்குழப்பம் அதிகரிக்கும். எதைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களை அனுசரித்தும், ஆலோசித்தும் செய்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் அமைதிகாண இயலும். உடன்பிறப்புகளில் ஒருசிலர் மட்டும் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகளும், கல்யாண வாய்ப்புகளும் கைகூடும்.

குருப்பெயர்ச்சிக்குப் பிறகு பணிபுரியும் பெண்களுக்கு பணியில் உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கலாம். உங்கள் பெயரிலேயே இடம் அல்லது வீடு வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குறிப்பாக உடலில் உள்ள நீர்ச்சத்து குறைதல், ஜீரணக் கருவிகளில் அமிலச் சுரப்பின் குறைபாடு, அல்சர், அலர்ஜி போன்றவற்றிற்கு ஆளாகலாம். சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவிற்கு பிரீதியாக திசைமாறிய விநாயகப் பெருமானை வழிபடுவதோடு, சர்ப்ப சாந்தியும் செய்துகொள்வது நல்லது.

(தொடரும்)

# கலைத்தரிசனம்





## கலாபூஷணம் திருமதி கந்தசாமி கமலாம்பிகை அவர்களுடனான சந்திப்பு

**முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையில் 1949 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி பிறந்த இவர் தனது பன்னிரெண்டு வயதினில் கலைத்துறைக்குள் பிரவேசித்தார். பிரபல நாடகக் கலைஞரான சூரி.பொன்னையா அண்ணாவியாரிடம் நாடகத்தையும் கர்நாடக சங்கீதத்தையும் கற்றார். தனது பன்னிரெண்டு வயதினில் சீதா கல்யாணம், வீர அபிமன்யு, அரிச்சந்திரன் போன்ற இசை நாடகங்களில் முதன்மையான பாத்திரம் ஏற்று நடித்தார். 39 தடவைகள் அரங்கேற்றப்பட்ட இம் மூன்று நாடகங்களாலும் இவர் ரசிகர் உலகில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவரின் ஆனையை அடக்கிய அரியாத்தை சிந்து நடைக் கூத்து இலங்கை பூராகவும் பேசப்பட்ட கூத்துவடிவமாகும்.**

**இவர் யாழ்ப்பாணம் இயல், இசை, நாடகக் கலாமன்றத்தினருடன் இணைந்து இசை நாடகம் என்பவற்றில் ஆர்வமுள்ள இளந்தலைமுறையினருக்கும் அவற்றைப் பயிற்றுவித்து வருகின்றார்.**

**நாட்டார் பாடல்களைப் பாடுவதில் அதி சிறந்த ஒருவராகத் திகழ்கின்றார். இன்றுவரை நாட்டார் பாடல்கள் அழிய விடாது இன்றைய சிறுவர்களுக்கு அதனைக் கற்பித்து வருகின்றார். முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட மண்வாசனை இறுவெட்டில் ஒரு நாட்டார் பாடலினைப் பாடியுள்ளார். இவர் யாழ்ப்பாணம் இயல், இசை நாடகக் கலாமன்றத்தினால் கலைமதி என்ற விருதையும் 2014 இல் கலாபூஷண விருதையும் பெற்றார். இவர் இன்றுவரை பாரம்பரியக் கலைகளை மீட்டெடுப்பதிலும் நாடக நெறியாள்கையிலும் தொடர்ச்சியாக இயங்கி வருபவர். 57 வருடங்கள் கலைத்துறைப் பணியிலும் நெசவு நெய்தலிலும் ஈடுபட்டு வருகின்றார். கலாபூஷணம் திருமதி கந்தசாமி கமலாம்பிகை அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப் பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.**

**● தாங்கள் கலைத் துறைக்குள் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

ஆரம்ப காலத்தில் பன்னிரெண்டு வயதில் இருந்து எனது கல்வி வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்க கலைமகள் வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்த காலத்தில் அண்ணாவியார் சூரி. பொன்னையாவின் நெறியாள்கையில் சீதா கல்யாணம், வீர அபிமன்யு, அரிச்சந்திரா போன்ற நாடகங்களில் நடித்துள்ளேன். வீர அபிமன்யு நாடகத்தில் பிரதான பாத்திரமான அபிமன்யு பாத்திரத்தையும் சீதா கல்யாணத்தில் பிரதான பாத்திரமான விசுவாமித்திரர், சம்பூரண அரிச்சந்திர நாடகத்தில் அரிச்சந்தி ரனாகவும் நடித்துள்ளேன். நான் முதன் முதலாக மூன்று நாடகங்களிலும் ஆண் வேடமிட்டு நடித்துள்ளேன். இந் நாடகங்கள் 39 அரங்குகளில் மேடை ஏற்றப்பட்டன. அக்காலத்தில் இந் நாடகத்தை பார்வையிட மக்கள் கூட்டம் அலைமோதியது. இந்நாடகத்தின்பால் ஈர்ப்புக்கொண்ட நான் படிப்படியாக கலை உலகிற்குள் என்னை முழுமையாக அர்ப்பணித்து கலைத்துறைக்குள் கால்பதிக்கலானேன்.

**● தாங்கள் நடித்த, நெறியாள்கை செய்த நாடகங்களில் இலங்கை பூராகப் பேசப்பட்ட நாடகமாக ஆனையை அடக்கிய அரியாத்தை சிந்துநடைக் கூத்து திகழ்கிறது. அந் நாடகத்தின் அனுபவம் பற்றி கூறுங்கள்?**

35 வயதில் இந்த ஆனையை அடக்கிய அரியாத்தை நாடகத்தை முள்ளிவளையைச் சேர்ந்த கலாவித்தகர் அரியான்பொய்கையின் நாடகமான ஆனையை அடக்கிய அரியாத்தை நாடகத்தை நான் முதன் முதலாக முள்ளியவளை கல்யாணவேலர் ஆலயத்தில் மேடையேற்றி பலரின் பாராட்டைப் பெற்றேன். பின் இந்த நாடகத்தை புதுக்குடியிருப்பு அளம்பில் செம்மணி, குமுழமுனை, ஒட்டுசுட்டான் போன்ற இடங்களில் மேடையேற்றி மக்களின் ஏகோபித்த பாராட்டை பெற்றுள்ளேன். இந் நாடகம் இப்போதும் மேடையேற்ற நான் தயாராக உள்ளேன்.

இந்நாடகத்தில் அரியாத்தை வேடம் ஏற்று நான் நடித்த போது இந் நாடகம் இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும். விடியும் பொழுது சுமார் இரண்டு மணிக்கு முடியும். இந்நாடகத்தில் நான் அரியாத்தை வேடம் ஏற்று நடிக்கும் போது ரசிகர்கள் அனைவரும் மிகவும் ஆர்வமாக இருந்து இடையில் எழுந்து செல்லாமல் பார்ப்பார்கள். இந்நாடகத்தில் 17 நடிகர்கள் பங்கேற்றார்கள். இன்றுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரம்பரிய கூத்து வடிவங்கள் இது அழிவடைந்து போகும் தன்மையிலிருந்து மீட்டு எடுக்க இன்றைய இளம் கலைஞர்கள் முன்வர வேண்டும்.

**● நாடகத்தில் ஈடுபட்ட தாங்கள் கர்நாடக சங்கீதத்திலும் ஈடுபாடு என அறிகின்றேன். அதுபற்றி கூறுங்கள்?**

முதன் முதலாக அண்ணவியார் சூரிபொன்னையா வினை நான் நினைவுகூற வேண்டும். எனது கலையுலகில் தெய்வமாகிய சூரி. பொன்னையாவிடம் நான் கர்நாடக சங்கீதத்தை கற்றுள்ளேன். சின்ன வயதிலே நான் நெசவு கற்ற பின் அந்த வேலை முடித்து மாலை வந்து அவரிடம் கர்நாடக சங்கீதத்தை முறையாக கற்றேன். அவர் சொல்லும் ராகத்தை பாட வேண்டும். அப்படி பாடாவிட்டால் அவர் கையை நீட்டு என சொல்லி அடிப்பார். அநேகமாக நான் கலையில் மிகவும் ஈடுபாடு கொண்டவளாக வளர்ந்தேன்.

**● ஆரம்ப காலத்தில் இருந்த ரசிகர் போல் இன்று இல்லாதிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என தாங்கள் நினைக்கின்றீர்கள்?**

எமது காலகட்டத்தில் மக்கள் அனைவரும் கலையை மிகவும் அக் கறையாக போற்றி வளர்த்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் கலை மீது மக்கள் போதிய நாட்டம் கொண்டதில்லை. இதன் காரணம் இன்றைய விஞ்ஞான வளர்ச்சி என நினைக்கிறேன். அது மட்டுமல்ல எமது பாரம்பரிய கலைகளை மதித்து அதை அழிய விடாமல் பாதுகாக்க வேண்டும். அக்கணம் எமது இளம் தலைமுறைகள் செய்தால் காலம்காலமாக கலை அழியாமல் பாதுகாக்கப்படும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இன்றைய நிலையில் இளைஞர் முதல் முதியவர் வரை அவர்களின் கரங்களில் தவழ்வது சிமாற்போன். அனைவரின் பொழுதுகள் இப்படிப் போனில் கழிவதால் கலை ஆற்று கையை சென்று பார்ப்பதற்கு அவர்களுக்கு நேரம் கிடைப்பதுமில்லை என இதை இன் றைய இளைஞர்கள் உணர்ந்தால் எதிர்காலத் தில் ஆற்றுகைகளை விளக்க ஏதுவாக இருக்கும்.

இக் கலைகளில் நாம் ஈடுபட்டு எம் முது சொத்தாகிய கலையை ஆழியவிடாது பாதுகாக்க வேண்டும். எம் எதிர்கால சந்ததிகள் கலையைப் பாதுகாக்காதுவிட்டால் எமது மண்ணில் நாடகம், கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி போன்ற அரிய கலைகள் எம்மை விட்டுப் போகும் தூரம் அதிகம் இல்லை.

**● நாட்டார் பாடல்களில் அதிசிறந்த ஒருவராக திகழ்கிறீர்கள். அந்த வகையில் நாட்டார் பாடல்கள் தொடர்பாகக் கூறுங்கள்?**

கிராமிய இலக்கியம், நாட்டாரிலக்கியம், நாடோடிப் பாடல்கள், பாமரப் பாடல்கள், ஈழத் தமிழ் கவிதைகள், வாய்மொழி இலக்கியம், நாட்டுப் பாடல்கள், மக்கள் மரபியல்,பாமரர் இலக்கியம், பொதுப் புராணவியல் என்று பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டு வருகின்றது. நாட்டுப்புறவியல் என்ற சொல்லை 1846 இல் வில்லியம் தோமஸ் என்பவரே முதன்முதலில் ஆங்கிலத்தில் "FOLK LORE" என்ற ஆங்கிலப் பதம் மூலம் குறிப்பிட்டார். நாட்டாரிலக்கியத்தில் பண்புகளின் அடிப்படையில் நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் கலைகள் என்று வகைப்படுத்தலாம். நாட்டார் இலக்கியத்திற்கு தனித்துவமான பண்புகள் உள்ளன. வாய்மொழியாகப் பரவுதல், மரபு வழிப்பட்டிருத்தல் பல்வேறு வடிவங்களில் சூழலுக்கேற்ப திரிபடைந்து நிலைபெறுதல், ஆசிரியர் இன்மை, ஏதாவது ஒரு வாய்ப்பாட்டு நெறிக்குள் அடங்குதல், எளிய மொழி நடை, தெளிவான கருத்து வெளிப்பாட்டுத் தன்மை, கருத்துக்களை ஒளிவு மறைவின்றி நேரடியாகச் சொல்லும் பாங்கு, எளிமையான இசையுடனும் சத்தத்துடனும் பாடக்கூடியவை, எதுகை மோனை, அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி போன்ற அமைப்புக்களைக் கொண்டிருத்தல். கிராமப்புற மக்களின் ஜீவனோபாய முறைகளையும் வாழ்க்கை ஒழுங்குகளையும் மதிநுட்பத்தையும் ஆக்கத்திறனையும் கற்பனை ஆற்றலையும் காட்டுவனவாகும்.

கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்களின் தேவைகளை ஒட்டி எழுந்த தொழில் முயற்சிகள், குடும்ப உதவிகள், வாழ்க்கைத் தேவைகள், சுயபாதுகாப்பு, அதனால் எழுந்த நம்பிக்கைகள், சகுனம் பார்த்தல், சடங்குகள் நிமித்தம் என்பவற்றை அடியொற்றியே நாட்டார் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

**● நாட்டார் பாடல்களின் தற்போதைய நிலை பற்றிக் கூறுங்கள்?**

நாட்டார் இலக்கியம் ஒரு மனிதனின் பிறப்பில் இருந்து இறப்பு வரையான வாழ்வியலை உணர்வுபூர்வமாக எடுத்துக் காட்டுவதேயாகும். இன்றுள்ள நிலைமையில் நாட்டார் பாடல்களின் பயன்பாடு மிகவும் அருகிப் போய்க்கொண்டிருக்கிறது. எழுச்சிப் பாடல்களில் சில பாடல்கள் நாட்டாரியல் பண்புகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. உதாரணமாக

"வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்
கடல் வீசுகின்ற காற்றில் உப்பின் ஈரம்
தள்ளிவலை ஏற்றி வள்ளம் போகும்-மீன்
அள்ளிவர நீண்ட நேரம் ஆகும்.
எங்கள் துயர் தெரியாது என்னவென்று புரியாது
இங்கிருந்து பாடுகின்ற எங்கள் குரல் கேட்காது"

முன்னைய காலத்தில் தாய் தனது குழந்தையைத் தாலாட்டும் போது தாலாட்டுப் பாடலையும் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபடும் போது கடற்றொழில் பாடலையும் குழந்தை பிறக்கும் போது சுகப்பிரசவம் வேண்டிப் பாடுவார்கள். மூக்கைப் பிடித்து உருவி விடும் போது

"நாய்க்கு மூக்குண்டு, நரிக்கு மூக்குண்டு நான் பெத்த மோனைக்கு மூக்குவா மூக்குவா" என்று பாடுவார்கள். விவசாயத்தில் களை பிடிங்கும் போது "கண்ணாடி வளையல் போட்டு, களை யெடுக்க வந்த புள்ளே, கண்ணாடி மின்னலிட களையெடுப்புப் பிந்துதடி" என்ற பாடலையும் வழிபாட்டுப் பாடல்களில் கரக ஆட்டமும் ஒன்று. கரகம் என்றால் கமண்டலம், பூக்குடம் என்று பொருள் கொள்வர். கரகத்தைத் தலையில் வைத்து ஆடும் ஆட்டம் கரக ஆட்டமாகும். கிராமியப் பெண் தெய்வ வழிபாட்டில் குறிப்பாக மாரியம்மன், துர்க்கை, காளி, திரௌபதை, கண்ணகை அம்மன் வழிபாடு கள் பின்பற்றப்படும் மக்களால் மேற் கொள்ளப்படும் ஒருவகை நேர்த்திக் கடன் வழிபாட்டு முறையே கரக ஆட்டம். தாளத்திற்கு ஏற்ப உடுக்கு வாத்தியம் ஒலிக்கப்படும் மரபு தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. காவடி என்பது முருகக் கடவுளுக்காக பக்தர்களால் நேர்த்தி வைத்து ஆடப்படுகின்ற ஒரு கிராமிய வழிபாட்டு முறையாகும். பழக்காவுதடி, பால்காவுதடி, பூக்காவுதடி, பன்னீர்க்காவுதடி எனப் பெயர் பெற்றன. இவையே இன்று காவடிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றிற்கும் தனியான பாடல்கள் உள்ளன. தமிழ் மக்களிடையே ப்ரம்பரை பரம்பரையாக வழக்கில் இருந்து வரும் சோகரசம் ததும்பும் பாடல்களே ஒப்பாரிப் பாடல்கள். இப்பாடல்கள் துயரப்படுபவர்கள் தம்மைத் தேற்றிக் கொள்வதற்காகவும் துயரத்தில் பங்கு கொள்பவர் பிறரைத் தேற்றிக் கொள்வதற்காகவும் இதனைப் பாடுவர். ஒப்பாரிப்பாடல்கள் பிலாக்கணம், பிணக்கானம், இரங்கல்பா, கல்வெட்டுப் பாடல்கள், இழவுப்பாட்டு எனப் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டார் பாடல்களில் பழமொழிகளும் விடுகதைகளும் இடம் பெறுகின்றன. கழுதையறியுமா கற்பூர வாசனை, பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது, விடுகதையாக தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் அது என்ன?, விளையாட்டுப் பாடல்களில் கிட்டிப்புல் அடித்தல், சடுகுடு விளையாட்டு, உச்சரிப்பு விளையாட்டு, போர்த்தேங்காய் அடித்தல், ஊஞ்சல் பாட்டு, பாண்டிக்குண்டு விளையாட்டு, ஆடு புலி ஆட்டம் என நாட்டார் பாடல்கள் நீண்டு செல்கின்றது. இப்பாடல்களை அழிய விடாது காக்க தத்தமது பிரதேச செயலகக் கலாசாரத் திணைக்களம் பாடசாலை, அறநெறிப் பாடசாலைகளில் நாட்டார் பாடல்களை ஆவணப்படுத்தி காண்பிக்க வேண்டும். எம் முன்னோர்களின் சொத்து இந்த நாட்டார் பாடல்கள்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# பாரதம்

## ரஜினியின் சர்ச்சை டுவிட்



சீருடையில் பணிபுரியும் பொலிஸாரை தாக்குவது வன்முறையின் உச்சம் என நடிகர் ரஜினிகாந்த் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமை, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் சென்னை அண்ணா வீதியில் போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

ஐ.பி.எல். போட்டிக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களில் 780 பேர் கைது செய்யப்பட்டனர். வீதியில் போராட்டத்தில் நாம் தமிழர் கட்சியினர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர். ரஜினியின் டுவிட்டரில் பொலிஸார் மீது கை வைப்ப வர்களைத் தண்டிக்க இன்னும் கடுமையான சட்டம் இயற்ற வேண்டும். வன்முறையின் உச்சக் கட்டமே சீருடையில் புணிபுரியும் பொலிஸார் தாக்கப்படுவதாகும்.

இதுபோன்ற வன்முறைக் கலாசாரத்தினை உடனே கிள்ளி எறியவில்லை எனில் நாட்டிற்கே பேராபத்து எனத் தெரிவித்துள்ளார். (10)

## சீனப் பேரரசின் அடையாளச் சின்னம் சுழல் காற்றில் மண்ணில் சரிந்து வீழ்ந்தது



(பீஜிங்)

சீனாவின் பின்சோயு நகரில் வீசிய பலத்த காற்றில் 62 அடி உயர சீன பேரரசர் குயின் ஷி ஹுயாங்கின் முழு உருவ வெண்கல சிலை முழுவதும் பெயர்ந்து மண்ணில் வீழ்ந்தது.

சீனாவின் முதல் பேரரசர் குயின் ஷி ஹுயாங் கின் முழு உருவ வெண்கல சிலை ஷாங்டாய் மாகாணத்தில் பின்சோயு நகரில் நிறுவப்பட்டுள்ளது. 62 அடி (19 மீற்றர்) உயரம் உள்ள இச்சிலை பல தொன் எடை கொண்டது. இச்சிலை பின்சோயு நகரின் அடையாள சின்னமாக திகழ்கிறது.

அண்மையில் பின்சோயு நகரில் பலத்த காற்று வீசியது. அதில் இச்சிலை முழுவதும் பெயர்ந்து மண்ணில் வீழ்ந்தது. தகவல் அறிந்ததும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்

மண்ணில் வீழ்ந்து கிடந்த சிலையை கிரேன் மூலம் தூக்கி அப்புறப்படுத்தினர்.

பேரரசர் குயின் ஷி ஹுயாங் சீனாவில் குயின் பேரரசை நிறுவியவர். கி.மு. 206 முதல் 221 வரை இவர் ஆட்சி செய்தார். சீனப்பெருஞ்சுவரின் முதல் பகுதியை கட்டி இவர் தான் தொடங்கி வைத்தார்.

சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக கடந்த 2005 ஆம் ஆண்டு பின்சோயு நகரில் இவரது சிலை நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## வெடிகுண்டு வீசி 20 பேர் சுட்டுப்

### பிரேசிலில் பயங்கரம்

(பிரேசிலியா)

பிரேசிலில் சிறைச்சாலையை குண்டு வைத்து தகர்த்து கைதிகளை மீட்க முயன்ற பிரிவினர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் 19 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிரேசில் நாட்டில் பெலேம் நகரில் சாந்தா இஷாபல் என்ற இடத்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். பலதரப்பட்ட கைதிகள் இருப்பதால் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சிறைச்சாலை உடைத்து கைதிகளை மீட்டு செல்ல ஒரு பிரிவினர் முயன்றனர். முன்னதாக வெடி குண்டு வீசி சிறையின் ஒரு புற சுவரை தகர்த்தனர்.

அந்தை பயன்படுத்தி சிறையில் இருந்து கைதிகள் தப்பி ஓட முயன்றனர். அவர்களை சிறை காவலர்கள் தடுத்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் சிறை காவலர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

பதிலுக்கு சிறை அதிகாரிகளும் சுட்டனர் ... வரவழைக்க...



## போராட்ட களத்தில் மின்சாரம் தாக்கி; பா.ம.க.தொண்டர் ஸ்தலத்தில் பலி!

(சென்னை)

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து திண்டிவனத்தில் பா.ம.க. ரயில் மறியல் போராட்டத்தில் ஈடு பட்ட போது மின்சாரம் தாக்கி தொண்டர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பா.ம.க. சார்பில் நேற்று முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. முழு





அடைப்பால் பல்வேறு மாவட்டங்களில் அனைத்து கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. பேருந்துகள் பெரும்பாலும் இயக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது, காவிரி விவகாரத்தில் மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து திருச்சி மற்றும் கரூரில் பா.ம.கவினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறியலில் ஈடுபட்ட 200 இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர். அதேபோல், பா.ம.க. சார்பில் திண்டிவனத்திலும் குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயிலை மறித்து போராட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான பா.ம.கவினர் கலந்துகொண்டு மத்திய அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர். அப்போது, குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில் மீது ஏறி அக்கட்சி தொண்டர் இருவர் முழக்கமிட்டபடியே போராட்டம் நடத்தினர். அப்போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் போராட்டக்களத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (10)

## சென்னைவரும் பிரதமருக்கு எதிராக கறுப்புக்கொடி போராட்டம் வேண்டாம்

### தினகரன் வேண்டுகோள்



(சேலம்)

சென்னைக்கு வரும் பிரதமருக்கு கறுப்புக்கொடி காட்ட நினைப்பது சரியல்ல என்று டி.டி.வி.தினகரன் தெரிவித்தார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய, மாநில அரசை கண்டித்தும், உடனடியாக அமைக்க வலியுறுத்தியும் நேற்று முன்தினம் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் சேலம் ஆளுநர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் துணை பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

இதனையடுத்து டி.டி.வி. தினகரன் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், தமிழகத்திற்கு பிரதமர் மோடி வருகையின்போது கறுப்புக்கொடி காட்ட நினைப்பது சரியாக இருக்காது. இதில் எனக்கு உடன்பாடு இல்லை.

ஜல்லிக்கட்டுக்காக இளைஞர்கள் போராடினார்கள். அதனால் தான் அந்த போராட்டம் வெற்றி பெற்றது. அதேபோல் 8 கோடி மக்களின் ஜீவாதார பிரச்சினை காவிரி நீர் என்பதால் ஐ.பி.எல். கிரிக்கெட்டை இளைஞர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுள்ளோம்.

அப்போது தான் இங்கு நடக்கும் பிரச்சினை உலக அளவில் தெரியும். இதன் மூலம் காவிரி நீர் பிரச்சினையில் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது.

தமிழக முதலமைச்சர் தொடர்ந்த அவதூறு வழக்கில் நீதிமன்றில் ஆஜராக வேண்டியிருப்பதால் 16 ஆம் திகதி நாமக்கல்லில் நடக்க இருந்த ஆர்ப்பாட்டம் 20 ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. பதவி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்களின் தீர்ப்பு விரைவில் வரும். அதில் நிச்சயம் நீதி வெல்லும்.

காவிரி பிரச்சினைக்காக நடைபெறும் போராட்டத்திற்கு தமிழக பா.ஜனதாவும் குரல் கொடுக்க வேண்டும். அதற்கு மாறாக வருமான வரித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தமிழிசை சவுந்தரராஜன் அச்சுறுத்தி வருவது கண்டிக்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## கிரிக்கெட் போட்டியை எதிர்ப்பவர்கள் சினிமாவிற்கு தடைவிதிப்பார்களா?

### பொன்.இராதாகிருஷ்ணன் கேள்வி



(பூந்தமல்லி)

கிரிக்கெட் போட்டியை எதிர்ப்பவர்கள் சினிமாவை திரையிடக்கூடாது என்று தடைவிதிப்பார்களா? என மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை போரூரை அடுத்த அய்யப்பன் தாங்கல் பகுதியில் தொற்றாநோய்களை தடுக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் தனியார் வைத்தியசாலைக்கு சொந்தமான பிரசார வாகனத்தை மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

அங்கு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

காவிரி விவகாரத்தில் வரைவு திட்டத்தை மத்திய அரசு தாக்கல் செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன். அதில் என்ன விடயங்கள் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மத்திய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் எந்த காலத்திலும் தமிழகத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

கர்நாடகம் தண்ணீர் தராமல் தந்திரமான நிலைகளில் இருந்து வருகிறது. அந்த நிலை இனியும் தொடராத வண்ணம் வரைவுத் திட்டம் அமைக்க வேண்டும். கால அவகாசம் ஆனாலும் காவிரி பிரச்சினையில் மத்திய அரசு நிரந்தமான தீர்வை கொடுக்கும். காவிரி விவகாரத்தில் தமிழர்களுக்கு செய்த துரோகத்தை மறந்த தி.மு.க. பிரதமருக்கு கறுப்பு கொடி காட்டப்போவதாக தெரிவித்துள்ளது கண்டிக்கத்தக்கது.

தி.மு.கவின் தலைமையை எதிர்த்து தான் கறுப்பு கொடி காட்டப்பட வேண்டும். ஐ.பி.எல். போட்டி நடத்த வேண்டாம் என்று கூறுபவர்கள் சினிமாவை திரையிடக் கூடாது, சினிமா எடுக்கக்கூடாது என்று தடை விதிப்பார்களா?

தடி எடுத்தவன் எல்லாம் சண்டைக்காரன் ஆக முடியும் என்ற நினைப்பில் வேல்முருகன் செயற்பட்டு வருகிறார். இது ஏற்புடையது அல்ல. தமிழக மக்கள் எந்த நிலையிலும் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே தமிழக அரசு விழிப்புடன் செயற்பட வேண்டும்.

அப்படிதான் செயற்படுவேன் என்று வேல்முருகன் போன்றவர்கள் கூறினால், அதற்கு தேவையான உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

மௌ... அ...



(சியோல்)

அமெரிக்க ... த்தை குறித்து ... உன் முதன் ... கட்சியின ... விவாதித்திருக்க...

அமெரிக்க ... ரிய ஜனாதிபதி ... நடந்து வந்த ... விட்டது. ... சந்தித்து பேச... க்கு இணக்க...

இரசா... உளவ...



பிரிட்டன் ... நிலைக்கு ... முன்னா ... ஸ்கிரிபால் ... டிற்குச் ...

ரஷ்ய ... பிரிவில் ... செர்ஜய் ... உளவாளி... யினரிபம் ... 2004 ஆம் ... செய்யப்பட்... விதிக்கப்... பிரிட்டன் ...

தற்போ... பால், கடந்த ... நகரில் ... வெளியே ... மயங்கிய ...

# வெளிநாடு

# ...சி சிறை தகர்ப்பு ...் படுகொலை!




...சுட்டனர். இதற்கிடையே வெளியில் இருந்தும் பொலிஸார் ...வழைக்கப்பட்டனர். அவர்க ளும் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இந்த அதிரடி தாக்குதலில் 20 பேர் பலியாகினர். அவர்களில் 19 பேர் கைதிகள். ஒருவர் சிறைகாவலர்.


இவர்கள் தவிர மேலும் 4 சிறைக்கா வலர்கள் குண்டு காயம் அடைந்தனர். இந்த அதிரடி எதிர் தாக்குதல் மூலம் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் தப்பும் முயற்சி முறியடிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு பிரேசி லின் அமேசான் பகுதியில் உள்ள மனாஸ் சிறையில் கலவரம் மூண்டது. அதை பயன்படுத்தி அங்கிருந்து தப்பி ஓட ம்யன்ற 56 கைதி கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ட்ரோன்கள் மூலம் தாக்குதல்

# கால்பந்து மைதானம் கொலைக்களமாகும்

## ரஷ்யாவுக்கு ஐ.எஸ். பகிரங்க மிரட்டல்



(மொஸ்கோ)

ரஷ்யாவில் நடக்கும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளின் போது ட்ரோன் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்த போவதாக ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான சுவரொட்டி ஒன்றையும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் சிரியாவில் இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டதற்கு, ரஷ்ய ஜனாதிபதி புடின் அதிக விலை கொடுக்க நேரிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த சுவரொட்டியில் உலகக்கோப்பை கால்பந்து மைதானத்தில் புடின் பேசிக்கொண்டு இருப்பது போலவும், அவர் துப்பாக்கியால் குறிவைக்கப்பட்டுள்ளது போலவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரஷ்யாவில் ஜூன் 15 முதல் ஜூலை 15 வரை உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற உள்ளது குறிப் பிடத்தக்கது.

மேலும் இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் டெய்லி ஸ்டார் சண்டே என்ற பத்திரிகையிலும் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. அதற்கு ஏற்றாற்போல் ஈராக்கின் மொசூல் நகரில் ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் ட்ரோன் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தி பயிற்சி எடுக்கும் வீடியோவும் வெளியாகியுள்ளது.

இத்தகைய விமானங்கள் மூலம் சர்வதேச கால்பந்து வீரர்கள் மீது வெடிகுண்டுகளை வீசவும், இராணுவ தளங்களை தகர்க்கும் விதமாக சிறிய ரக ரொக்கெட்டுகளையும் பயன்படுத்த ஐஎஸ் ஐஎஸ் அமைப்பு திட்டமிட்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. ஐ.எஸ். இன் மிரட்டல் சுவரொட்டி சர்வதேச அளவில் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது. (10)

# ...மௌனம் கலைத்தார் கிம் ஜாங் உன் ...அமெரிக்கா வடகொரியா பேச்சு உறுதி



(...யோல்)

...அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் பேச்சுவார் ...குறித்து வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் ...முதன் முதலாக மௌனம் கலைந்து தனது ...சியினருடன் ஆலோசனையின் போது ...தெரிவித்திருக்கிறார்.

...அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கும், வடகொ ...ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கும் இடையே ...வந்த வார்த்தை யுத்தம் முடிவுக்கு வந்து ... அத்துடன் இருவரும் நேருக்கு நேர் ...பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய அளவு ...இணக்கமான சூழல் உருவாகி வருகிறது. இதில் தென் கொரியாவின் சமரச முயற்சிகள் வெற்றி அளித்து வருகின்றன.

ட்ரம்பும், கிம் ஜாங் உன்னும் மே மாதம் அல்லது ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இது தொடர்பான முன் ஏற்பாடுகளை கவனிப்பதற்கு இரு நாட்டு உயர் அதிகா ரிகளும் சந்தித்துப் பேசி உள்ளனர். கிம் ஜாங் உன்னுடன் பேச்சு நடத்தப்போவது குறித்து ட்ரம்ப் டுவிட்டரில் நேரடியாக தெரிவித்து விட்டார். ஆனால் கிம் ஜாங் உன் மட்டும் இந்த விடயத்தில் நேரடியாக எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் காத்து வந்தார்.

இந்த நிலையில் இப்போது அவர் தன் மௌனத்தை கலைத்துக்கொண்டு கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பியாங்யாங் நகரில், கிம் ஜாங் உன் தனது கட்சியினருடன் நடத்திய ஆலோசனையின்போது, அமெரிக்காவுடன் நடத்த உள்ள பேச்சுவார்த்தை குறித்து குறிப்பிட்டு விவாதித்திருக்கிறார். இதை அந்த நாட்டின் அரசு செய்தி நிறுவனமான கே.சி. என்.ஏ. உறுதி செய்துள்ளது.

எனினும் ட்ரம்புடனான கிம் ஜாங் உன்னின் சந்திப்பு எங்கு, எந்த திகதியில் நடைபெறும் என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# ட்ரம்பின் பாதுகாப்பு ஆலோசகர் டாம் பாஸ்சர்ட் திடீர் இராஜினாமா




(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் உள்நாட்டு பாதுகாப்பு ஆலோசகர் டாம் பாஸ்சர்ட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அந்நாட்டு அரசின் பல்வேறு முக்கிய துறைகளில் உள்ள தலைமை அதிகாரிகளை மாற்றியுள்ளார். மேலும் சிலர் கருத்து வேறுபாடு காரணமாக தங்களது பதவிகளை இராஜினாமா செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியின் உள்நாட்டு பாதுகாப்பு ஆலோசகர் டாம் பாஸ்சர்ட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சான்டர்ஸ் நேற்று அறிவித்துள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிராக உள்நாட்டு பாதுகாப்பை நிலைநாட்டவும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான சைபர் குற்றங்களை தடுக்கவும், ஏராளமான இயற்கை பேரழிவுகளில் திறம்பட செயலாற்றியும் மிக உயர்ந்த நாடான அமெரிக்காவுக்கு டாம் பாஸ்சர்ட் ஆற்றிய பங்களிப்பை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளதாக சாரா சான்டர்ஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# ...ரசாயனத் தாக்குதலில் உயிர் பிழைத்த ...ளவாளியின் மகள் வீட்டிற்கு திரும்பினார்



...டன் நாட்டில் நச்சுத்தாக்குதலால் கோமா ...கு சென்று சிகிச்சைபெற்றுவந்த ரஷ்ய ...ாள் உளவாளியின் மகள் யூலியா ...ால் முழுமையாக குணமடைந்து வீட் ...சென்றுள்ளார்.

...ய நாட்டின் இராணுவத்துறை உளவுப் ... உயரதிகாரியாக பணியாற்றியவர் ... ஸ்கிர்பால் (வயது 66). சில ரஷ்ய ...ளிகளை இங்கிலாந்து உளவுத்துறை ...ம் காட்டி கொடுத்தமைக்காக கடந்த ...ஆம் ஆண்டு மொஸ்கோவில் இவர் கைது ...பட்டார். 13 ஆண்டு சிறைத்தண்டனை ...ப்பட்ட அவரை 2010 ஆம் ஆண்டு ... அரசு மீட்டு அடைக்கலம் கொடுத்தது. ...போது பிரிட்டனில் வசித்து வரும் ஸ்கிர் ...கடந்த மார்ச் 4 ஆம் திகதி சாலிஸ்பரி ... உள்ள ஒரு வணிக வளாகத்துக்கு ...ய தனது மகள் யூலியாவுடன் (வயது 33) ...ய நிலையில் கிடந்தார். அவர்களது உடலில் மிகவும் கொடூரமான 'மர்ம விஷம்' ஏறியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இருவரும் வைத்தியசாலையில் கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் முதல்முறையாக தங்கள் நாட்டு வீதியில் விஷ இரசாயனத் தாக்குதல் நடத்தி முன்னாள் உளவாளியை கொல்ல முயன்றதாக புடின் மீது பிரிட்டன் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் போரிஸ் ஜான்சன் குற்றம் சாட்டினார். இது மூடத்தனமான கருத்து என்று புடின் மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், லண்டன் வைத்தியசாலையில் கோமா நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த செர்ஜய் ஸ்கிர்பால் மற்றும் அவரது மகள் யூலியா ஆகியோரின் உடல்நிலை தேறி அவர்கள் குணமடைந்துள்ளனர்.

அவர்கள் இருவரையும் புதிய பெயர் மற்றும் புதிய அடையாளத்துடன் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்க பிரிட்டன் நாட்டு உளவு அமைப்பான எம்.16 தீர்மானித்தது. பிரிட்டன் அரசின் இந்த முடிவு பற்றி அமெரிக்க அரசு மற்றும் அந்நாட்டின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.வுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக 'தி சன்டே டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இந்நிலையில், உடல் நலம் தேறிய யூலியா ஸ்கிர்பால் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் இருந்து இரகசியமான மற்றும் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக பிரிட்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவரது தந்தை செர்ஜய் ஸ்கிர்பால் மட்டும் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இது தொடர்பாக பிரிட்டன் நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் விரைவில் விரிவான பேட்டி அளிக்கவுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (10)

# சிரிய இரசாயனத் தாக்குதல் விவகாரம் அமெரிக்க தீர்மானத்திற்கு ஆஸி ஆதரவு

(மெல்பேர்ன்)

சிரிய இரசாயன தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலான அமெரிக்காவின் சாத்தியமான விமான தாக்குதலுக்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

மெல்பேர்னில் நேற்று புதன்கிழமை ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிஷப் இதனை தெரிவித்தார்.

சிரியாவில் இடம்பெற்ற சந்தேகத்திற்கிடமான இரசாயன தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும் எனவும், அதற்கு உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் கோரியிருந்தன.

இதேவேளை, குறித்த சம்பவத்திற்கு எதிராக வலிமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்த அதேவேளை, அதற்கு இராணுவ ரீதியான பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இச்செயற்பாடுகளுக்கு ஆதரவளித்து கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய அமைச்சர், "சிரிய இரசாயன தாக்குதல் குறித்து புதிய ஐ.நா. விசாரணை பொறிமுறையை அமைப்பதற்கான அமெரிக்காவின் தீர்மானத்திற்கு நாம் இணை அனுசரணை வழங்குவோம்.

இரசாயன தாக்குதல்கள் எங்கு, யார் நடத்தினாலும் அதற்கு நாம் கண்டனத்தை வெளியிடுவோம். அது மாத்திரமன்றி சிரிய இரசாயன தாக்குதல் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர் என்ற வகையில் ரஷ்யா பொறுப்புடன் செயற்பட வேண்டும் என கன்பராவிலுள்ள ரஷ்ய தூதுவரை நாம் வலியுறுத்தியுள்ளோம்.

அமெரிக்காவின் இராணுவ செயற்பாடுகள் தொடர்பாக நான் கருத்து தெரிவிக்க போவதில்லை. ஆனால், சிரியாவின் சட்டவிரோத இரசாயன ஆயுத பயன்பாட்டிற்கு எதிராக அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தினால், அமெரிக்காவின் இலக்கை அவுஸ்திரேலியா ஆதரிக்கும்" எனத் தெரிவித்தார். (10)

# சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் 16 பேரும் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வர்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 அமைச்சர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது குறித்த பதினாறு அமைச்சர்களும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொள்வார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின் போது வாக்களித்தவர்கள் இவ்வாறு எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வார்கள்.

பிரதமருக்கு எதிராக வாக்களித்த இந்த பதினாறு அமைச்சர்களும் அரசாங்கத்திற்கு தேவையில்லை என்ற போதிலும், நாட்டு மக்களின் ஆதரவு அவர்களுக்கு உண்டு.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது முதுகெலும்பை நேராக வைத்துக் கொண்டு இந்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

இந்த பதினாறு அமைச்சர்களும் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டால் கூட்டு எதிர்க்கட்சி மேலும் வலுப்பெறும்.

எதிர்க்கட்சி மக்களின் இருதயத்திற்கு நெருக்கமாகியுள்ளது. மக்களுக்கு தற்பொழுது எதிர்க்கட்சி தொடர்பில் எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

இந்த அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியது முதல் மக்களுக்கு என்ன செய்துள்ளது என நாம் கேள்வி எழுப்புகின்றோம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## பிரதமரை எதிர்த்த சு.க அமைச்சர்கள்

# அமைச்சர் எஸ்.பி. வீட்டில் இரகசிய ஆலோசனை!



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்தரமுல்லையில் உள்ள அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் வீட்டில் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் மீண்டும் நடைபெறவுள்ள நிலையில், நேற்று முன்தினம் இரவு நீண்ட நேரமாக இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளித்த, சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இவர்கள், கூட்டு அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருந்தனர். அதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றுபட்ட முடிவை எடுக்கும் நோக்கில் மத்திய குழுக் கூட்டத்தை மீண்டும் கூட்டி முடிவெடுப்பதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, அரசில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நேற்று முன்தினம் இரவு நீண்ட நேரம் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான எந்தத் தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உடன்பாட்டை மீறிய இலங்கை இராணுவம்

## கருத்து வெளியிட மறுப்பு



(கொழும்பு)

ஐ.நா. மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை இலங்கை இராணுவம் மீறியுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து வெளியிட இலங்கை இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு மற்றும் ஐ.நாவுடன் செய்துகொண்ட உடன்பாட்டுக்கு அமைய, ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்பப்படும் இலங்கைப் படையினரின் மனித உரிமை பதிவுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

எனினும், இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் மனிதவுரிமை பதிவு ஆய்வுகள் முடிய முன்னரே, இலங்கை இராணுவத்தின் 49 பேர் கொண்ட அணி கடந்த பெப்ரவரி மாதம் லெபனானுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து, லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த 101 இலங்கைப் படையினரின் பயணத்தை ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைப் பணியகம் நிறுத்தி வைத்துள்ளது.

இதுகுறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அதில் ஐ.நாவுடனும், தம்முடனும் செய்து கொண்ட உடன்பாட்டை இலங்கை இராணுவம் மீறி விட்டதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்துவிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

எனினும், அவர் இது குறித்து கருத்து எதையும் வெளியிட மறுப்புத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தானந்த மனுத்தாக்கல்



(கொழும்பு)

நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு சட்டத்திற்கு முரணாக தன்னை கைது செய்ய முற்படுவதாக கோரி ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே உச்ச நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுதாக்கல் செய்துள்ளார்.

மகிந்தானந்த தாக்கல் செய்த மனுவில் நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவினர் சட்டத்திற்கு முரணாக கைது செய்ய முற்படுவதாகவும் இத்தகைய சட்டத்திற்கு விரோதமான குற்றச் செயலை தடுத்து நிறுத்துமாறும் நிதிக் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளை பிரதிவாதிகளாக குறிப்பிட்டும் உள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சராக மகிந்தானந்த கடமையாற்றிய போது அரச பணம் 39 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி கரம் போர்ட் மற்றும் பலகைகளை கொள்வனவு செய்ததாக நிதிக்குற்றப்புலனாய்வு பிரிவு மகிந்தானந்த அளுத்கமகே மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒரு வேலை கடினமாகத் தெரிவது ஏன்?

ஒருவனிடம் "நீ எவரெஸ்ட் மீது ஏறும் குழுவில் சேர்ந்து கொள்கிறாயா?" என்று கேட்டால், அவன் "ஊம்! தாராளமாக!" என்கிறான்.

ஒருவனிடம் "இந்த சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டது ஒட்டித் தருகிறாயா?" என்று கேட்டால் "ஐயோ! அது ரொம்பக் கஷ்டமான வேலையாச்சே!" என்கிறான்.

இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்பது மனநிலை காரணமாக ஏற்படுவது தான்.

இந்த வரிக்குதிரை இருக்கின்றதே அது பார்க்க மிக அழகாக இருக்கும். ஆனால் ஒரு வேலையும் செய்யாது. கழுதையிருக்கிறதே, அது பொதி மட்டும் சுமக்கும். அதற்கு வேறு ஒன்றும் தெரியாது. குதிரை இருக்கிறதே அது அப்படி அல்ல! சாகசம் அனைத்தும் செய்யும், சொன்னதெல்லாம் கேட்கும்.

மனிதர்களில் வரிக்குதிரை மனம் படைத்தவர்கள் மிக அதிகம். இவர்களுக்கு எல்லாச் செயல்களும் கடினமாகத் தெரிகின்றன.

ஒரு வேலையை, பொறுப்பை, கடமையை எண்ணியதுமே அதில் உள்ள கடினத் தன்மைகளை– சிரமங்களை எண்ணிப் பார்ப்பதுதான் பொதுவான மனித இயல்பு. இது ஒரு தவறான அணுகு முறை.

ஒன்றை எண்ணியதுமே அதில் உள்ள நன்மைகளை முதலில் எண்ணிப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையைக் கற்றுக் கொண்டால் எந்த வேலையிலும் நமக்குச் சலிப்போ மலைப்போ வராது.

வெற்றி, வளர்ச்சி, புகழ், வசதி, சாதனை இவற்றில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் திரண்டால் நமக்குத் துடிப்பு வரும். இந்தத் துடிப்பு வந்து விட்டால் எந்த ஒரு செயலும் கடினமாகத் தெரியாது.

எதிலும் நாட்டமில்லாமல் இருப்பவர்களுக்கு எல்லாச் செயல்களும் கடினமாகத் தெரியும்.

"என்னத்த... போயி... பார்த்து..." என்று என்னத்தை கன்னையாவைப் போல் வசனம் பேசினால் சாதாரணமான செயல்கள் கூட மகாக் கடினமான செயல்களாகவே படும்.

நான் நிறைய வலம் வருபவன். ஆனால் மாம்பலம் ரங்கநாதன் தெருவைப் போல் தலைகள் மட்டுமே உள்ள தெருவை நான் உலகில் எங்குமே பார்த்தது இல்லை. இந்த ரங்கநாதன் தெருவின் முனையில் நின்று கொண்டால் இந்தத் தெருவை எப்படிக் கடக்கப் போகிறோம் என்றுதான் நமக்குத் தோன்றும். ஆனால் ஓரடி எடுத்து வைத்துவிட்டால் நமக்கென்று ஒரு பாதை உருவாவதை நாம் கண்கூடாகக் காண முடியும். அதற்குப் பிறகு நாம் நிற்பது கூடச் சாத்தியமில்லை. காரணம் நம்மைப் பின்னாலிருந்து தள்ள ஆட்கள் இருக்கிறார்கள்.

கடினமானவை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் பல விடயங்கள் இப்படிப்பட்ட எளிய பாதைகளே!

**லேனா தமிழ்வாணன்**

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 19

பரமசாமி பஞ்சாட்சரம்

எங்கள் யாத்திரையும் சீன உதவியாளர்களும்

சீன உதவியாளர்கள் சீன விசா கொடுக்கும் "ஜாங்மு" அலுவலகத்திற்கு வந்து எங்களுக்குச் சீன விசா எடுப்பதற்கு இராணுவ அனுமதிப்பத்திரங்களை எடுத்துப் பின் அனுமதியைப் பெறுவதற்கும் சீனாவில் பேருந்துகளில் பிரயாணம் செய்யும் பொழுதும் பொருட்கள் வாங்கும் பொழுதும் மொழிபெயர்ப்புத் தேவைப்படும் பொழுதும் உதவி செய்வார்கள் என்று "எக்கோ ரெக்" சொன்னார்கள்.

யாத்திரையின் போது எங்களுடன் வந்த சீன உதவியாளர் ஒருவர் மட்டும் சிறிது ஆங்கிலம் பேசினார். மற்றவர்கள் எல்லோரும் "சைகைகள்" மூலமே தொடர்பு கொண்டார்கள்.

எமது யாத்திரைப் பாதை

எமது யாத்திரை செல்லும் பாதையின் விபரம்;


சிட்னி, காத்மண்டு, பசுபதி நாத் கோயில் (காத்மண்டு), கொடாரி, சிநேகபாலம், சாங்மு, நைலம், சாகா, மானசரோவர், மானசரோவர் ஏரிக் கிரிவலம், தர்ச்சன், கயிலாச மலைக் கிரிவலம் ஆரம்பம், திரபுக், டொல்மாலாபாஸ், சுதுல்புக், தர்ச்சன், கயிலாச மலைக் கிரிவலம் முடிபு, சாகா, நைலம், சாங்மு, சிநேகபாலம், கொடாரி, காத்மண்டு, முக்திநாத் (நேபாளம்), தென் கயிலாசம், (இலங்கை), சிட்னி.

பயணக் கையேடு

முதலாம் நாள் 02.08.14

நாங்கள் தங்கியிருந்த "மல்லா விடுதி" கடல் மட்டத்திலிருந்து 1350 மீ. உயரத்தில் உள்ளது. சனிக்கிழமை 02.08.14 ஆம் திகதி காலை உணவுவின் பின் "எக்கோ ரெக்" அதிகாரிகள் விடுதிக்கு வந்து எல்லா யாத்திரிகர்களின் பெயர்களையும் பதிவு செய்தார்கள். பின்பு "எக்கோ ரெக்" என்ற பெயருடன் இலக்கம் பதிக்கப்பட்ட பயணப் பை (Traveling Bag), சிறிய பை (Shoulder Bag), தொப்பி (Thermal hat), "மேல் அங்கி" (Thermal Jacket) ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்கள். அத்துடன் "டைமெக்ஸ்" (Diamox- Oxygen Tablets) என்ற மாத்திரைகளை ஒவ்வொரு நாளும் சாப்பிடும்படி கொடுத்து பயணப் பைகளை ஒழுங்கு பண்ணச் சொன்னார்கள்.

யாத்திரையின் செயல்



முறைத் திட்டம் பற்றிய கூட்டம் அன்று இரவு 7 மணிக்கு விடுதியின் உணவுக் கூடத்தில் (Hotel Dining Hall) "அவுஸ்திரேலிய ஏஜெண்ட்" திருமதி சாலினி பட்டேலும், "எக்கோ ரெக்" அதிகாரிகளும் யாத்திரையைப் பற்றிய செயல் முறைத் திட்டங்களைக் கூறினார்கள்.

அன்று நாங்கள் செல்ல வேண்டிய பாதையில் மண் சரிவு ஏற்பட்டு 1கி.மீ. தூரம் வரை பாதையை மண் மூடி விட்டது என்றும் பேருந்தில் செல்ல முடியாது என்றும் பாதையை அரசாங்கம் மூடிவிட்டது என்றும் எங்களுக்குத் தெரிய வந்தது.

பாதை மூடப்பட்டு விட்டது என்று கேள்விப்பட்டவுடன் "ஹெலிகொப்டர்"களை ஒழுங்கு செய்து தரும்படி கேட்டோம். அவர்களும் எமது விண்ணப்பத்தை வரவேற்று அதற்குரிய ஒழுங்குகளைச் செய்ததுடன் நாங்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் வசூல் செய்தார்கள்.

தங்குமிடங்கள், உணவு ஆகியவற்றிற்கு "எக்கோ ரெக்" திரு. தீபக் கார்கி அவர்களைப் பொறுப்பாளராக (Mr.Deepak Karki Eco Trek Representative, tour coordinator, Team Leader) நியமித்தார்கள். அவருக்கு உதவியாக ஒரு குழுவையும் ஏற்பாடு செய்தார்கள். திருமதி பிரேம் அவர்கள் கருத்துக் கவனிப்பாளராக வருவார். (Eco Trek Director's Wife Mrs.Prem as an observer) என்றும் சொன்னார்கள்.

கயிலாச யாத்திரையைப் பற்றிக் கடைசியாக முடிவு செய்யப்பட்ட திட்டத் தொகுப்பையும் தந்தார்கள். நிகழ்ச்சித் தொகுப்பில் உள்ள விடயங்களுக்கு விளக்கங்களைக் கேட்டு யாத்திரையைப் பற்றிய விபரங்களை ஓரளவு அறிந்து கொண்டோம்.

(தொடரும்)

# பிரதமரிடம் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகள் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை!

## கோத்தாவின் அமைப்பு குற்றச்சாட்டு



(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் முற்படுவாரானால் அவருக்கு எதிராக பாரிய போராட்டங்கள் வெடிக்கும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வெளிச்சம் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

சிங்களத்தில் எலிய என்று அழைக்கப்படும் வெளிச்சம் அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த அமைப்பின் முக்கியஸ்தரான பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர் மீது எஞ்சியிருந்த ஒருசில நம்பிக்கையையும் இழந்திருப்பதாகவும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தை அம்பலப்படுத்தியிருந்தார். அதற்கமைய அவர்கள் முன்வைத்த பத்து கோரிக்கைகளை பிரதமர் ஏற்றுக் கொண்டதாலேயே அவருக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் வாக்களித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேரர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் பிரதமருக்கு முன்மொழியப்பட்ட பத்து கோரிக்கைகள் தமிழ் இனவாதத்தை அப்பட்டமாகப் பறைசாற்றுவதாகவே அமைந்துள்ளன. இந்த இனவாத சிந்தனைகளை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த இனவாத கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் முற்படுவாரானால் அவருக்கு எதிராக அனைத்து தேசியவாத அமைப்புக்களையும் இணைத்து வீதியில் இறங்கிப் போராடவும் தாம் தயாராக இருப்பதாகவும் தேரர் எச்சரித்துள்ளார். (இ-7)

# தப்பியோடிய கைதி அதிகாலையில் கைது

## பொலிஸார் இருவர் இடை நிறுத்தம்

(ஏறாவூர்)

சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு ஏறாவூர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியோடியதைத் தொடர்ந்து பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸார் இருவர் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ள அதேவேளை சந்தேக நபர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஏறாவூர் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலி திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கடந்த 9ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தயாராக இருந்தபோது ஏறாவூர் பொலிஸ் நிலையைப் பாதுகாப்பில் இருந்த சந்தேக நபர் தான் சிறுநீர் கழிக்க வேண்டும் என்று பொலிஸாரிடம் கூறிவிட்டு பொலிஸார் சிறுநீர் கழிக்க சந்தர்ப்பம் வழங்கிய போது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் தப்பித் தலைமறைவாகியுள்ளார்.

இதனால் குறித்த சந்தேக நபரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக கடமையில் நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் உடனடியாக கடமையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டனர்.

இவ்வேளை தப்பியோடிய சந்தேக நபரைத் தேடும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக இறங்கினர். இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் ஏறாவூர் தாமோதரம் வீதியிலுள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த போது சந்தேக நபர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# மின்சக்தி நெருக்கடி இல்லை



(கொழும்பு)

எதிர்காலத்தில் நாட்டின் பாரிய மின்சக்தி நெருக்கடி ஏற்படக்கூடும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

மின்சக்தி தேவையின் பொருட்டு நிலவும் கேள்வி அதிகரித்துச் செல்லும் நிலையில் மின் உற்பத்தியும் அதிகரித்துச் செல்வதே இந்த நிலைமைக்கான காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், நாட்டில் எந்த மின்சக்தி நெருக்கடியும் இல்லை என மின்சக்தி வளத்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பஞ்சாட்சர ஜெபத்தால் பரமனடிபற்றியவர் தண்டியடிகள் நாயன்மார் குருபூசை




சோழமண்டலம் எனும் திருவாரூரிலே தோன்றியவர் தண்டியடிகள். இவர் பிறப்பிலேயே கண்ஒளி இல்லாதவர். எப்பொழுதும் "பஞ்சாட்சரஜெபம் செய்தபடி" அகக் கண்ணால் சிவபெருமானைக்கண்டு வணங்குகின்றவர். திருவாரூர் திருப்பதியிலுள்ள பூங்கோயிலைத் தினமும் தொழுது வரும்பேறு பெற்றவர். அவ்வாலயத்துக்கு மேற்றிசையில் இருக்கின்ற திருக்குளமானது தூர்ந்து கொண்டும் பக்கமெங்கும் பெருகிவரும் சமணர்களின் பாழிகள் என்று சொல்லப்பெறுகின்றதாகிய சமண மடங்களினாலே ஆக்கிரமிக்கப் பெறுவதனாலும் குறுகி வருவதை அறிந்து வருத்தமுற்றார். கண் தெரியாவிட்டாலும் குளத்தை ஆழமாக்க முடிவு செய்தார்.

குளத்தின் நடுவில் ஒரு தறியும் குளக்கரையின் மேட்டில் ஒரு தறியும் நட்டு இரு தறிகளையும் இணைக்கும்படி கயிறு ஒன்றை கட்டினார். மண்வெட்டியையும் கூடையையும் எடுத்துக்கொண்டு இணைத்த கயிற்றைத் தடவிய படியேமண்ணைக்கூடையில் கோலி பின் அவ்வாறே நடந்து மண்ணைக் கரையில் போடுவார். இப்படித் தினந்தோறும் மிகுந்த விருப்பத்துடன் "நமசிவாய" என்ற பஞ்சாட்சரத்தை உச்சரித்தபடியே திருக்குளத்தை தூர்வாரும் பணியைச் செய்து வந்தார்.

இப்படிச் செய்து வருவதை கண்ட சமணர்கள் பொறாமை கொண்டு மண்ணை இவ்வாறு வெட்டிக் கொணர்ந்து போடுவதால் "ஜீவராசிகள் இறந்து போம்" என்று கூறி தடுத்தார்கள். ஆனால் "இதுமெய்க் கடவுளாகிய பரமசிவனுக்குச் செய்யுங்குற்றமற்ற புண்ணியம். இதனருமை உங்களுக்கு விளங்குமா?" எனக் கூறி தொடர்ந்து செய்தார்.

கோபமுற்ற சமணர்கள் "உனக்குக் கண்தான் இல்லையென்று நினைத்தோம் காதும் கேட்காதோ" என ஏளனஞ் செய்தனர். தண்டியடிகள் "மந்தபுத்தியும் காணாக்கண்ணும் கேளாச் செவியும் உங்களுக்கே உள்ளன" என்று சொல்லி "திரிபுர தகனஞ் செய்த கடவுளுடைய திருவடி களையேயன்றி வேறொன்றையும் நான் காணேன். அதனையறிதற்கு நீங்கள் யார்?" அக்கடவுளுடைய திரு வருளினால் உலகமெல்லாம் அறியும்படி "என்கண் ஒளி பெற்று உங்கள் கண் ஒளி இழந்தால் என்ன செய்வீர்கள்?" என்று வினவினார். அதற்கு சமணர்கள் "நீ உன் கடவுளது அருளினால் கண் பெற்றாயாகில் நாங்கள் இவ்வூரில் இருக்கமாட்டோம்" என்று கூறியதோடு அவருடைய மண்வெட்டியைப் பறித்துக் குறித்தறிகளைப் பிடுங்கி எறிந்து அவரை வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

மனமுடைந்த தண்டியடிகள் ஆலயத்தை அடைந்து ஈசனின் திருமுன் சென்று நெஞ்சம் உருகி முறையிட்டார். அப்படியே உறங்கியும் போனார்.

பக்தனின் குறையைத் தீர்க்க ஈசன் திருவுளம் கொண்டு அவரது கனவில் தோன்றி "உன் மனக்கவலையை விடு. உன்னுடைய சபதம் நாளை நிறைவேறும்" என்றதோடு மட்டுமல்ல சோழ ராஜாவுக்கும் கனவில் தோன்றி "தண்டி எனும் அன்பன் எமக்குக் குளம் தோண்டும் பணி புரிந்தான், அவனுக்குச் சிலர் இடர்செய்கின்றார்கள் நீ போய் அதைச் சீர்செய்" என்று கூறிமறைந்தருளினார்.

திடுக்கிட்டெழுந்த மன்னன் இறைவனின் கருணையை எண்ணி மகிழ்ந்து, அதிகாலையிலேயே தண்டியடிகள் இருக்கும் இடத்திற்குச் சென்றான், நடந்தது அனைத்தையும் கேட்டறிந்தான். சமணர்களை வரவழைத்து விசாரணை நடத்தினான். அவர்கள் "தண்டி கண் ஒளி பெற்றால்நாங்கள் இந்த ஊரை விட்டே போய் விடுகிறோம்"என்றனர்.

மன்னன், சபதத்தை ஏற்ற தண்டியடிகளை நோக்கி "சிவ பக்தரே! நீர் பரமசிவனது திருவருளினாலே கண் பெறு தலைக்காட்டும்" என்று சொல்ல தண்டியடிகள் "சிவபெருமானே மெய்க்கடவுளும் சிறியேன்' அவருக்கு அடியானுமாயின் இவ்வரசனுக்கு முன்னே நான் கண் பெற்றுச் சமணர்கள் கண் இழப்பார்கள்" என்று சொல்லி ஸ்ரீபஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டு திருக்குளத்திலே முழுகிக் கண் பெற்றெழுந்தார். சமணர்களோ கண்ணிழந்து தடுமாறினார்கள்.

சமணர்கள்ஒப்புக்கொண்டபடி ஊரைவிட்டு அகன்றனர். சோழராஜா சமணர்களுடைய பாழிகளையும் பள்ளிகளையும் பறித்து திருக்குளத்துக்கு கரைகட்டி மனமகிழ்ந்து தண்டியடிகளை வணங்கிக் கொண்டு சென்றார். தண்டியடிகள் பரம சிவனைத் தியானித்து ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஜெபித்து திருத்தொண்டுகள் செய்து இறுதியில் பங்குனி சதய நன்னாளில் சிவபதம் அடைந்தார்.

ஆதிமுதல் அறப்பணியில் ஈடுபட்டுத் தற்போது மீளச் செயற்படத் தொடங்கியுள்ள நாயன்மார்கட்டிலுள்ள "நாயன்மார் குருபூசை மடம்" என்னும் மடாலயத்தில் இன்று தண்டியடிகள் நாயனார் புராணம் ஓதப்பெற்று அவரின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற உள்ளன. அனைவரும் கலந்து அவனருள் பெறுவோமாக.

நாட்டமிகு தண்டிக்கும் (மூர்க்கர்க்கும்) அடியேன்"

நாயன்மார் குருபூசை மடம்,
நாயன்மார்கட்டு, நல்லூர்

## கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு தேடப்பட்டு வந்த தனுக சிக்கினார்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹெட்டியாவத்த- சுமித்ரா ராம வீதி, பிலிங் தோட்டத்தில் கடந்த மார்ச் 8 ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபராக கருதப்படும் தனுக எனப்படும் தினூஷ சந்தோஷ் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பாக இருக்க டாம் வீதி பொலிஸ் நிலையத்தின் சார்ஜன்ட், கான்ஸ்டபிள் ஒருவரின் உதவியுடன் சிறு தொகை போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைக்கு செல்ல முற்பட்ட வேளையில் இவ்வாறு அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவருடன் இருந்த மற்றொருவரும் இது தொடர்பில் கைதாகியுள்ளார்.

கைது செய்யப்பட்ட தினூஷ சந்தோஷ் மற்றும் பிரசாத் பதலே ஆகியோரை 7 நாள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு நேற்று முன்தினம் அனுமதிபெற்றுக்கொண்ட நிலையில், அவர்களுக்கு உதவ முற்பட்ட டாம் வீதி பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

சந்தேக நபர்களில் பிரசாத் பதலே 560 மில்லிகிராம் ஹெரோயினுடனும், தினூஷ சந்தோஷ் 600 மில்லி கிராம் ஹெரோயினுடனும் குறித்த சார்ஜன்ட், கான்ஸ்டபிளிடம் சென்று வேண்டுமென்றே திட்டப்படி சிக்கிக்கொண்டுள்ளதுடன், அது தொடர்பில் அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றை கோரி உதவி செய்ய அவ்விருவரும் திட்டமிட்டுள்ளனர்.

இந் நிலையிலேயே கைதின் பின்னர் சந்தேக நபர்களை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பேற்ற நிலையில், உதவ முற்பட்ட இரு பொலிஸாரையும் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணி இடை நிறுத்தம் செய்துள்ளார்.

கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 29 வயதுடைய மிலான் மதுசங்க என்பவர் உயிரிழந்ததுடன் 34 மற்றும் 61 வயதுகளை உடைய சமந்த பிரதீப், ஜீ.பி.குமாரதாஸ ஆகியோர் படுகாயமடைந்தனர். (இ-7)

## மே தினப் பேரணி நடத்துவதில்லை ஐ.தே.க.தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மே தினப் பேரணி எதனையும் நடத்துவதில்லை என தீர்மானித்துள்ளது.

மேதினக் கூட்டமொன்றை மட்டும் நடத்துவதெனவும், பேரணிகளை நடத்துவதில்லை எனவும் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கட்சி மறுசீரமைப்பு குறித்த கூட்டத்தின் போது இந்த விடயம் பற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கேகாலையில் மே தினக் கூட்டங்களை நடத்த வேண்டுமென முன்னதாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இம்முறை மே தினம் 7ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருப்பதனால், மேதினக் கூட்டமொன்றை மட்டும் கொழும்பில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அமெரிக்கக் குடியுரிமையை கைவிட கோத்தபாய முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் என்றும், அதற்காக அமெரிக்க குடியுரிமையைக் கைவிடுவேன் என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு, ஜனாதிபதி தேர்தல் குறித்து அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக நீங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக பேசப்படுகிறது. ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவது பற்றி யாரேனும், உங்களை அணுகினார்களா?எனக் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த கோத்தபாய அதுபற்றி முடிவு செய்வதற்கு இன்னமும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன்.

அது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்த விடயம். மிகச் சிறந்த வேட்பாளர் என்று அவரே முடிவு செய்வார். வெற்றி பெறக்கூடிய-



பொருத்தமான வேட்பாளர் யார் என்பது அவருக்குத் தெரியும்.

தற்போதைய சூழ்நிலையில், அந்த வகிபாகம் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விட, வேட்பாளராவதற்கு பொருத்தமானவர் வேறு எவரும் இல்லை. மக்கள் ஆதரவையும், பிரபலத்தையும், தற்போதைய சூழ்நிலையில் தேவைப்படும் தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளவர் அவர். அவர் அனுபவம் மிக்கவர்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தினால், துரதிர்ஷ்டவசமாக, அவர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட முடியாது. அவரது ஆதரவைப் பெற்ற எவரேனும் ஒருவரால் தான் வெற்றி பெற முடியும்.உங்களை வேட்பாளரா கத் தெரிவு செய்தால், அந்தச் சவாலை எதிர் கொள்வதற்கு, நீங்கள் தயாரா?

அவர் அவ்வாறு நினைத்தால், நான் போட்டியிடுவேன். அதற்காக முன்வருவேன். போட்டியிடுவதற்கான ஆற்றல் எனக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன்.

அமெரிக்காவில் குடியுரிமையைக் கொண்டுள்ளதால், இரட்டைக் குடியுரிமை உங்களுக்குத் தடையாக இருக்கிறது. இதனை எப்படி தீர்க்கப் போகிறீர்கள்?

19 ஆவது திருத்தச் சட்டத்தினால் இப்போது என்னால் போட்டியிட முடியாது. இருந்தாலும், முன்னாள் ஜனாதிபதி என்னை வேட்பாளராகத் தெரிவு செய்தால், இரட்டைக் குடியுரிமையை கைவிடும் செயல்முறை செல்ல வேண்டும். அதற்கான செயல் முறைகள் என்ன?

அது என்னைப் பொறுத்த விடயம். அதற்கான செயல் முறை உள்ளது. அது தெளிவான- குறுகிய நடைமுறை தான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மனச்சாட்சிக்கு அமையவே தீர்மானம்; எதிரணியில் 19 ஆம் திகதி அமருவோம்

## ரணில் எதிர்ப்பு அணியினர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக வாக்களித்துவிட்டு அமைச்சுப் பதவிகளை வகிக்க எமக்கு உரிமை இல்லை. ஆகவே எமது மனச்சாட்சிக்கு அமையவே தீர்மானம் எடுத்துள்ளோம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ரணில் எதிர்ப்பு அணியினர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சுப்பதவிகளை துறந்து எதிர்க்கட்சியில் 19 ஆம் திகதி அமரும் எமது தீர்மானத்தில் மாற்றம் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சி அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ரணில் எதிர்ப்பு அணியினர் தேசிய அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேரணை இதுவரை காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக நாம் கூறிய காரணிகள் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கைக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்ட காரணிகளாகும். மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தில் பிரதமர் பிரதான குற்றவாளி என தெரிந்தும் அந்தக் காரணிகளை நாம் சுட்டிக்காட்டிய பின்னரும் பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்காது செயற்பட முடியாது.



ஆகவே நாம் ஜனாதிபதியின் அனுமதியுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க தீர்மானம் எடுத்தோம். இதன் பின்னணியில் தான் எமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் தேசிய அரசாங்கத்தில் இருக்கக் கூடாது என்ற அழுத்தங்கள் எழ ஆரம்பித்துள்ளன. எனினும் இவற்றை முகங்கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்த பின்னர் எமக்கு அமைச்சுப் பதவிகளை வகிக்கவோ, அல்லது அமைச்சரவையில் அங்கம் வகிக்கவோ தார்மீகம் இல்லை. ஆகவே நாம் எமது அமைச்சுப்பதவிகளை துறந்து சுயாதீனமாக செயற்பட தீர்மானம் எடுத்துள்ளோம். எமது நிலைப்பாட்டினை நாம் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தோம். பின்னர் நேற்று முன்தினம் கூடிய மத்திய குழுக் கூட்டத்தில் எமது நிலைப்பாட்டினை தெரிவித்தோம். எனினும் இறுதி தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் கூட்டத்தில் பெறப்படவில்லை. எவ்வாறு இருப்பினும் நாம் அமைச்சுப் பதவிகளை துறக்க தயாராக உள்ளோம். எமது 16 உறுப்பினர்களும் அமைச்சுப்பதவிகளை துறந்து எதிர்வரும் 19 ஆம் திகதி எதிர்க்கட்சியில் அமர தீர்மானம் எடுத்துள்ளோம்.

நேற்று முன்தினம் கூடிய மத்திய குழுக் கூட்டத்திலும் நாம் இதே நிலைப்பாட்டில் இருந்தே கருத்துகளை முன்வைத்தோம். அமைச்சரவை கூட்டத்தை புறக்கணிக்க நாம் தீர்மானம் எடுத்தோம். அதற்கமைய எமது அமைச்சரவை அமைச்சர்கள் எவரும் அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அடுத்த அமைச்சரவை கூட்டத்திற்கு முன்னர் எமது நிலைப்பாடுகள் குறித்து ஆராய்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனினும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

எனினும் ஜனாதிபதியை பாதுகாக்கும் கடமை எமக்கு உள்ளது. அதேபோல் இந்த அரசாங்கத்தை பலவீனப்படுத்தவும் நாம் முயற்சிக்கவில்லை. எமது மனச் சாட்சிக்கு அமைய நாம் எதிரணியில் அமர்ந்து செயற்பட தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கிண்ணியா நகர சபை ஐ.தே.க. வசமானது

(திருமலை)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையடுத்து, கிண்ணியாவின் நகர சபையின் முதல் அமர்வு, கிண்ணியா நகர சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இடம் பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் நடைபெற்ற இச்சபை அமர்வின்போது, பகிரங்க வாக்கெடுப்பின் மூலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எஸ்.எச்.எம்.நளீம், தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வாக்கெடுப்பின்போது, தவிசாளருக்கு ஆதரவாக 9 வாக்குகளும் எதிராக மூன்று வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிராக மூன்று வாக்குகளும் ஆதரவாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி சேர்ந்து ஒன்பது வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உறுப்பினர். இவ் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இச்சபை, தவிசாளர், பிரதித் தவிசாளர் உட்பட மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கவுள்ளது.

இரண்டாம் கட்டமாக பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக பகிரங்க வாக்களிப்பு இடம்பெற்றது. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஐயூப் நளீப் சப்ரீன், ஒன்பது வாக்குகள் ஆதரவாகவும் மூன்று வாக்குகள் எதிராகவும் பெற்று, பிரதித் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (இ-7)

# குருநாகல் மாவட்டத்தில் அரச வெசாக் வைபவம்

(கொழும்பு)

2562ஆம் ஸ்ரீபௌத்த வருடத்திற்கான அரச வெசாக் வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குருநாகல் பிங்கிரிய தேவகிரி ரஜமஹா விகாரையினை கேந்திரமா கக் கொண்டு நடைபெறவுள் ளது.

2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தினை வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தி வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும், அதனுடன் தொடர்புபட்ட மேலும் பல நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கும் உத்தேசித்துள்ளதாக புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1382

Search for people, places and things    Nagendram  Home

### துஷ்யந்தி

உப்புத் தண்ணீரில் மட்டும் விவசாயம் செய்ய வாய்ப்பிருந்தால்



தன் கண்ணீராலேயே செய்திருப்பார் விவசாயி

### துஷிதா



ஒரு பெண்ணின் உள்ளங்கை மென்மையாக இருந்தால் வீட்டில ஒரு வேலையும் பார்க்காதுன்னு அர்த்தம்

### துளசி

பார்வையற்ற ஒருவருக்கு வீதியைக் கடக்க உதவினேன் சிறிது நேரம் கண்தானம் செய்த திருப்தி



### துஷான்

பலூன் வியாபாரியின் மூச்சுக் காற்றில்தான் அவன் குடும்பமே உயிர் வாழ்கிறது...



### துளசிகா

என்னதான் பீட்சா, பர்கர்னு வந்தாலும்



நம் கிராமத்தில் கிடைக்கும் பணியாரம் போல வருமா

### துஷ்யந்த்

உனது உண்மையான நண்பன் யார் என்று தெரிய வேண்டுமா?



பணம் இல்லாத ஏழையாக வாழ்ந்து பார்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மேதினத்தைக் கொண்டாட ஆளும் தரப்பிற்கு தகுதியில்லை

## ஜே.வி.பியின் ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

"தேசிய அரசாங்கம் எவ்வளவு காலம் ஆட்சியில் இருக்குமென்பது எமக்குத் தெரியாது. எனினும், இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் காலம் வரையில் சாதாரண பொது மக்கள் மற்றும் தொழிலாளர் நலன்சார்ந்து செயற்பட வேண்டும்" என மக்கள்விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிட்ட, அந்தக்கட்சியின், பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, அரசாங்கமானது தொழிலாளர் நலன்சார்ந்து செயற்பட வேண்டும் என்பதை இம்முறை மே தின கூட்டங்களில் மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தும் என தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினரும், கடந்த காலங்களில் தொழிலாளர்களை கொலை செய்ததோடு, அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டனர்.

ஆகவே மே தினங்களை கொண்டாடுவதற்கு அந்தக் கட்சிகளுக்கு எவ்வித தகுதியும் இல்லை. மே தினத்திற்கு சர்வதேச ரீதியில் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் சிவப்பு கொடியை அந்தக் கட்சிகள் புறக்கணித்து விட்டு, தங்களது கட்சிக் கொடிகளை பறக்கவிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வலைகள் வழங்கல்



(கரணவாய்)

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியிலிருந்து வடமராட்சி கிழக்கு பகுதியிலுள்ள 33 கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவியாக வலைகள் வழங்கப்பட்டன.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்தே இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, மாகாணசபை உறுப்பினர் வி.சிவயோகன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-60-64)

# கனிய வள ஆய்வு மற்றும் தயாரிப்பு நடவடிக்கையை துரிதப்படுத்த முடிவு

(கொழும்பு)

இலங்கை கனிய வள ஆய்வு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான செயற்பாட்டு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எரிபொருள் விலை வேகமாக அதிகரித்து வருவதை தொடர்ந்து சர்வதேச எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு தொழிற்றுறை வளர்ச்சியடையாததன் காரணமான கடந்த 3 வருட காலப் பகுதியில் இலங்கை எரிபொருள் ஆய்வு நடவடிக்கைகள் துரிதமற்ற வகையில் இடம்பெற்ற போதிலும் தேசிய வர்த்தக சந்தை தேவையை பூர்த்தி செய்வது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தி ஆழ்கடல் ஆய்வு நடவடிக்கையை தடையின்றி மேற்கொள்ள இலங்கையால் மாத்திரமே முடிந்துள்ளது.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை வாயு தொடர்பிலான அபிவிருத்திக்காக சிறியளவிலான கேள்வி மனு கோருவதற்கும் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முறையான கேள்வி மனுவை கோருவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள கனிய வள அபிவிருத்தி செயலாளர் அலுவலகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் ஆழ்கடலில் இரண்டு பகுதிகளில் குறிப்பிடப்பட்டு இருந்த நிலப்பகுதியில் கண்டறியப்பட்ட இயற்கை எரிவாயு படிவத்தை கண்டறிவதற்கான ஆய்வை மேற்கொள்வதற்காக கேள்வி மனு அறிவிப்பு 2018 மே மாதத்தில் மேற்கொள்ளப் படவுள்ளது.

இலங்கையில் கிழக்கு கரையோர பகுதியிலும் ஆழமற்ற கடல் பிரதேசத்திலும் எரிபொருள் ஆய்வு நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திடம் உடன்படிக்கை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு இலங்கையின் மேட்டு தரை கரையோர பகுதியின் எரிபொருள் ஆய்வு தொடர்பிலும் கவனம் செலுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிபொருள் ஆய்வு தயாரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மற்றும் திட்டம் தொடர்பில் இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக எரிபொருள் வள அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# ஹபரணையில் கோர விபத்து! 16பேர் படுகாயம்

(கொழும்பு)

ஹபரண, மொரகஸ்வேவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 16 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவித்தனர்.

படுகாயமடைந்தவர்களுள் 8 பெண்கள் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த அனைவரும் ஹபரண வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவையில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த பேருந்து ஒன்று பாதையை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதியின் நித்திரை காரணமாகவே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த சம்வம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அபிவிருத்தி குறித்து விசேட கூட்டம்





(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய யூனியன் நிதிப் பங்களிப்புடன் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பகுதியில் நடைமுறைப் படுத்தப்படும் செயற்றிட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடல் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இவ் விசேட கலந்துரையாடலில் ஐரோப்பிய யூனியன் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை பொது மக்களுக்கு சரியான வகையில் எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பது குறித்தும் அவற்றின் உண்மையான பயனை பொது மக்கள் பெற்றுக் பெற்றுக் கொள்வது குறித்தும் விசேடமாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் ஐரோப்பிய யூனியன் நிதிப் பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களின் பங்காளி நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர். (இ-7)

# தேரரிடம் காணி உறுதி கையளிப்பு



(கொழும்பு)

தியத்தலாவை கஹகொல்ல ஸ்ரீ ஞானாராம ஆசிரமத்தின் காணி உறுதியை வண. ஓதகங்தொட்ட தம்ம விசுத்தி தேரரிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையளித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

1962ஆம் ஆண்டில் இலங்கை ராமஞ்சு மகா நிக்காயவின் ஸ்ரீகல்யாணி யோகாஸ்ரமத்திற்கு வழங்கப்பட்டிருந்த காணியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆசிரமத்தில் சுமார் 25 தேரர்கள் தியானங்களில் ஈடுபட்டு வசித்து வருவதுடன், பிரதேசத்தில் உள்ள மக்களுக்கும் சம்புத்த சாசனத்திற்கும் மகத்தான சேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன.

இந்த நிகழ்வில் வண. ஹல்துமுல்லே பஞ்ஞாதீர தேரர், வண. எல்லேகம பஞ்ஞாசீல தேரர், வண. மானெமில்லே உபசம தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் கலந்துகொண்டனர். (இ-7)

# இலங்கையின் சுகாதாரத்துறைக்கு உலக சுகாதார பணிப்பாளர் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் சுகாதார சேவையானது ஆசிய நாடுகளில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் தரம் வாய்ந்தது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரோஸ் அதனொம் ஜெப்ரயேசுஸ் ( Dr. Tedros Adhanom Ghebreyesus ) தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இலவச சுகாதார சேவை தரமானதாக அமைந்துள்ளமையே இந்தத் தரத்துக்குக் காரணம். சுகாதார சேவைக்கு தெளிவான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன.



இலங்கை குறை வருமான நாடாக இருந்தாலும் நாட்டில் இலவச சுகாதார சேவையானது தரமானதாக அமைந்துள்ளது. இது வளர்முக நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## வெலிக்கடை சிறைப்படுகொலை விவகாரம்

# பிரதான சாட்சியாளரின் மனைவிக்கு ஆயுதம் தரித்த குழுவால் அச்சுறுத்தல்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் பிரதான சாட்சியாளர்களில் ஒருவராக கருதப்படும் பந்துலலியனாரச்சி என்பவரின் மனைவிக்கு ஆயுதம் தரித்த கும்பல் ஒன்று அச்சுறுத்தல் விடுத்துள்ள சம்பவம் தொடர்பில், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பு பாதுகாப்பு விதிவிதானங்களுக்கு அமைய உடன் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திஸாநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இது குறித்து சாட்சியாளரின் மனைவியால் கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ள நிலையில், கிரிபத்கொடை பொலிஸாரிடமிருந்து அது தொடர்பில் தகவல்களைப் பெற்று நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் இதன்போது தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012 இல் இடம்பெற்ற கலவரத்தின் போது, சில கைதிகள் தேர்ந்தெடுத்து கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி சேனக நீதிமன்றில் முன்வைத்த விடயத்தை ஆராய்ந்தே நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

நேற்று முன்தினம் மன்றில் ஆஜரான குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் நுவன் அசங்க, தலைமையிலான குழுவினர் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குமூலங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் தொடர்வதாக நீதவானுக்கு அறிவித்தனர்.

இதன்போது மன்றில் கருத்துக்களை முன்வைத்த பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி சேனக, பிரதான சாட்சியாளர்களில் ஒருவரான பந்துலலியனாரச்சியின் மனைவிக்கு ஆயுதம் தரித்த குழுவினர் கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் அது தொடர்பில் கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பல வருடங்களின் பின்னர் சாட்சிகளில் தங்கியுள்ள இந்த கொலை விவகாரங்கள் தொடர்பில் சாட்சியாளர்களை அச்சுறுத்தி வழக்கை திசைதிருப்ப முயற்சிகள் இடம்பெறுகிறதா என இவை சந்தேகம் கொள்ளச் செய்வதாகவும் அதனால் இது தொடர்பில் நீதவானின் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும் அவர் அறிவித்தார். இதனையடுத்தே நீதவான் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதலாவது சந்தேகநபரான பொலிஸ்போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ, மகசின் சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகரும் சிறைச்சாலை ஆணையாளர்களில் ஒருவருமான இரண்டாம் சந்தேக நபர் எமில் ரஞ்சித் லமாஹேவா ஆகியோர் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்ர பெர்னாண்டோ, அசித் சிறிவர்த்தன ஆகியோர் சந்தேக நபர்களுக்கு எதிராகத் தண்டனை சட்டக் கோவையின் 296 ஆவது அத்தியாயத்தின் கீழ் கொலை அல்லது சதி குற்றச்சாட்டு சுமத்த போதிய ஆதாரங்கள் இல்லை என வாதிட்டனர்.

அத்துடன் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு முன்னரேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இது குறித்து எழுத்து மூல வாதங்களை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதவான் ரங்க திஸாநாயக்க, குற்றம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்ய சட்டமா அதிபரின் ஆலோசனை அவசியமில்லை என சுட்டிக்காட்டினார்.

அதன்படி வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தின் போது 27 கைதிகள் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், இந்த கொலைகள் இடம்பெற்ற காலப்பகுதியில் சிறைச்சாலைகளின் பிரதானியாக இருந்தவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக பாதிக்கப்பட்ட தரப்பு நீதிமன்றில் சுட்டிக்காட்டியது. இந்திக சம்பத் எனும் சிறை அதிகாரி, சிறைப்படுகொலைகள் இடம்பெற்ற காலப்பகுதியில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாக இருந்த பி.டி. கொடிப்பிலி ஆகியோரே இவ்வாறு தப்பிச் சென்றுவிட்டதாக அவர்கள் நீதிவானுக்கு தெரிவித்தனர்.

27 கைதிகள் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பிலான விசாரணைகளில் சந்தேக நபர்களாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ, அப்போது மகசின் சிறைச்சாலையின் அத்தியட்சகராக இருந்த தற்போதைய சிறைச்சாலைகள் ஆணையாளர்களில் ஒருவரான (புனர்வாழ்வு) எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோர் சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர்கள் எதிர்வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் இதன்போது உத்தரவிட்டார்.

இவர்கள் இருவருக்கும் எதிராக பொது இலக்குடன் கொலைக்கு சதித்திட்டம் தீட்டியமை, கொலைக்கு உதவி ஒத்தாசை புரிந்தமை, கொலை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தண்டனை சட்டக்கோவையின் 32 ஆம் அத்தியாயத்துடன் இணைத்து கூறப்படும் 102,113(ஆ),198,296,358 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இதன்போது நீதிமன்றில் விசேட கோரிக்கையை முன்வைத்த சந்தேக நபர்கள் சார்பு சட்டத்தரணிகள், கைது செய்யப்பட்ட இருவரும் அரச ஊழியர்கள் என்பதால் பாரிய மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அதனால் அவர்கள் இருவரையும் சட்ட மனநல நிபுணர் ஒருவரிடம் முன்னிறுத்தி அறிக்கைப் பெற உத்தரவிடுமாறும் அவர்கள் கோரினார். இந்நிலையில் அதற்கும் அனுமதி வழங்கிய நீதவான் அவ்வறிக்கையைப் பெற்று சமர்ப்பிக்க சிறை ஆணையாளருக்கு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றைய தினம் விசேட விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கவும் நீதவான் ஆலோசனை வழங்கினார். (இ-7)

## இ.தொ.கா-தொ.தே.ச. மோதல் பீ அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களுக்கு இடையில் மஸ்கெலியாவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்த பீ அறிக்கையை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

36 சந்தேகத்துக்குரியவர்கள் தொடர்பில் இந்த பீ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸ் வட்டாரத்திற்கு பொறுப்பான பொலிஸ் உதவி அத்தியட்சகரினால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளரை நியமிப்பதற்கான ஆரம்ப அமர்வு கடந்த மாதம் 28ஆம் திகதி மஸ்கெலியாவில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவற்றின் ஆதரவாளர்களுக்கிடையில் மோதல் நிலைமை ஏற்பட்டது.

இந்த மோதலில் சிலர் காயமடைந்ததுடன், சம்பவம் தொடர்பில் சந்தேகத்துக்குரிய சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், 36 சந்தேகத்துக்குரியவர்கள் தொடர்பில் நீதிமன்றில் பீ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான நீதிமன்றத்தின் உத்தரவு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அரசின் ஆயுள் முடிந்தது

### குமார வெல்கம தகவல்



(கொழும்பு)

இந்த அரசாங்கத்தின் ஆயுட்காலம் குறைவடைந்து கொண்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் ஜி.எல். பீரிஸ் உடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## ராஜிதவிற்கு பிரதித் தலைவர் பதவி வழங்கப்படக் கூடாது

### ஐ.தே.கவின் சஜித் எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவி ராஜித சேனாரட்னவிற்கு வழங்கப்படுவதனை வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ எதிர்த்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு குழு, ராஜிதவிற்கு பிரதித் தலைவர் பதவியொன்று வழங்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது.

அமைச்சர் சாகல ரட்நாயக்க இந்தப் பரிந்துரையை முன்மொழிந்துள்ளார். ராஜித சேனாரட்னவும், சதுர சேனாரட்னவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், பிரதித் தலைவர் பதவி ராஜிதவிற்கு வழங்கப்படுவதனை சஜித் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)



## மைத்திரிக்கு போக்கிடம் இல்லை

### நாமல் நக்கல்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் இருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியையும் இழந்து போக்கிடம் இல்லாமல் இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலை கால்டன் இல்லத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்ற பிரதேச சபைகளுக்கு வீதியை நிர்மாணிக்க நிதி வழங்க போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் கூறுகின்றார்.

இந்த அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளில் வீதிகளை நிர்மாணிக்கவில்லை. வீதியை அல்ல குறைந்தது ஒரு கால்வாயை கூட நிர்மாணிக்கவில்லை.

பொதுஜன பெரமுன வெற்றி பெற்ற பிரதேச சபைகளுக்கு நிதி தரமாட்டோம் எனக் கூறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை காப்பாற்றிய இவர்களால் தமது அமைச்சுப் பதவியைக் கூட காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலைமையில் தற்போது நாட்டின் அபிவிருத்தி பற்றி பேசுகின்றனர் எனவும் நாமல் ராஜபக்ஷ விமர்சித்துள்ளார். (இ-7)

## தேர்தல் கடமை; ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை இல்லை

(கொழும்பு)


கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சொந்தப் பணத்தில் செலவு செய்து தேர்தல் கடமைகளுக்காகச் சென்றிருந்த போதிலும் இதுவரை அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை கவலைக்குரியது என்று அந்த சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் தேர்தல் திணைக்களத்திடம் வினவிய போது, அந்த ஆசிரியர்கள் வழங்கிய பற்றுச்சீட்டுக்களில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமையை சீரமைத்து குறித்த கொடுப்பனவுகளை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)




# உழைத்து வாழ வேண்டும்



பிரபு என்ற தொழிலாளி வசித்தான். அவன் மனைவி பெயர் ஜீவனா. ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தான். தினமும் அவன் தவறாமல் வேலைக்குச் செல்வான். வேலை செய்து கிடைக்கும் கூலியுடன் மாலையில் வீடு திரும்புவான்.

அதை அவன் மனைவியிடம் கொடுப்பான். பிரபுவுக்கு குறைந்த கூலியே கிடைக்கும். ஆனால், அவன் மனைவியிடம் அதற்காக மனம் கோணமாட்டாள். அவள் குறைந்த வருமானத்திலும் சிக்கனமாக குடும்பத்தை நடத்தினாள். அவர்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினர். கூலி மிகக் குறைவாக கிடைக்கிறதே என்று பிரபு அடிக்கடி கவலைப்படுவான்.

அவன் மனைவி அவனைத் தேற்றுவாள். ஒரு நாள் பிரபு வேலைக்காக வெளியூர் செல்லத் திட்டமிட்டான். அதை தன் மனைவியிடம் தெரிவித்தான். "வெளியூர் செல்ல வேண்டாம். இங்கே கிடைக்கும் கூலியை வைத்து சிக்கனமாக வாழலாம்," என்று கூறிவிட்டாள் மனைவி. ஒரு நாள் பிரபு பக்கத்து ஊரில் உள்ள தன் நண்பன் வீட்டுக்கு சென்றான். வீடு திரும்பும் போது நன்றாக இருட்டிவிட்டது. பிரபு காட்டு வழியாக தன் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். எங்கும் நல்ல இருள் பரவிக் கிடந்தது. காட்டில் நின்ற மரங்கள் எல்லாம் பயங்கரமாக ஆட்டம் போட்டன. நெஞ்சு திடுக்திடுக்கென்று கண்ணனுக்கு அடித்தது. அவன் திகிலோடு நடந்து கொண்டிருந்தான்.

அப்போது பின்னால் யாரோ சிலர் திமுதிமுவென்று ஓடி வரும் சத்தம் கேட்டது. பிரபு மிகவும் பயந்து விட்டான். பிரபு அஞ்சி நடுங்கினான். வேகமாக ஓடிச் சென்று அருகில் இருந்த மரத்தின் மீது ஏறி ஒளிந்து கொண்டான். மேலே இருந்து யார் வருகிறார்கள் என்று கவனித்தான். அப்போது சில திருடர்கள் அந்த மரத்தின் அடிக்கு வந்தனர். அவர்கள் ஒரு பெரிய மூட்டையில் பணத்தைக் கட்டி வைத்திருந்தனர். அவர்கள் பேசுவதை பிரபு உற்று கவனித்தான்.

"நாம் எல்லாரும் சேர்ந்துதான் இந்தப் பணத்தைக் கொள்ளையடித்தோம். இப்போது நேரம் மிகவும் இருட்டாக இருக்கிறது. எனவே, இந்த பணத்தை ஒரு மரப் பொந்தில் மறைத்து வைப்போம். நாளை காலை வந்து பணத்தை பங்கிட்டு எடுத்துக் கொள்ளலாம்," என்றான். மற்ற திருடர்கள் அதை ஆமோதித்தனர். பின்னர் பண மூட்டையை ஒரு மரப் பொந்தில் வைத்து மூடினர். அனைத்து திருடர்களும் அங்கிருந்து திரும்பிச் சென்றுவிட்டனர். பயம் தெளிந்தது. அவன் மரத்தின் மீது இருந்து திருடர்கள் போய் விட்டார்களா என்பதை கவனித்தான். பின்னர் மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்தான். திருடர்கள் மரப் பொந்தில் ஒளிந்து வைத்த பண முடிப்பை எடுத்தான். பிரபுவுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

இதற்கு முன் அவன் இவ்வளவு பணத்தை கண்ணால் பார்த்தது கூட இல்லை. இனி வேலைக்கு செல்ல வேண்டாம் என்று அவன் சந்தோஷப்பட்டுக் கொண்டான். பண முடிப்பைத் தூக்கிக் கொண்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தான். வீட்டை நெருங்க நெருங்க மீண்டும் அவனுக்கு பயம் ஏற்பட்டது. திருட்டுப் பணத்தை எடுத்து வந்ததற்கு அவன் மனைவி திட்டுவாளோ என்று பயந்தான். எனவே, வீட்டுக்கு வெளியே ஒரு மூலையில் பண முடிப்பை புதைத்து வைத்தான். சில நாட்கள் கழித்து மனைவியிடம் சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டான். பின்னர் வீட்டுக்குள் போனான். பிரபு வரவுக்காக ஜீவனா கவலையுடன் காத்திருந்தாள். பிரபுவைக் கண்டதும், ""ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்டாள். "நண்பனிடம் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் ஆகிவிட்டது." என்று கூறினான். திருட்டு பணமுடிப்பை எடுத்து வந்ததைப் பற்றி புவனாவிடம் அவன் கூறவே இல்லை. பின்னர் சாப்பிட்டுவிட்டு படுத்தார்கள். ஜீவனா தூங்கிய பின் கண்ணன்மெதுவாக எழுந்தான்வெளியே வந்தான். புதைத்து வைத்திருந்த திருட்டு பண முடிப்பை தோண்டி எடுத்தான்.

**தொடரும்...**




❖1633-ரோமன் கத்தோலிக்க மத பீடத்தினால் கலிலியோ கலிலிக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பமாயின.

❖1832- இலங்கையில் கட்டாய அரச சேவையை ஒழிக்கும் ஆணையைபிரித்தானிய அரசர் பிறப்பித்தார்.

❖1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகள் ஐக்கிய அமெரிக்காவின் படைகளை தென் கரோலினாவில் தாக்கியதுடன் போர் வெடித்தது.

❖1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியில் சரணடைந்த அனைத்து ஆபிரிக்க அமெரிக்க படையினர்களும் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு படைகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

❖1865-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமாவில் மொபைல் என்ற நகரம் கூட்டணி இராணுவத்திடம் வீழ்ந்தது.

❖1961- சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதரானார்.

❖1983- பிரித்தானியத் திரைப்படமான காந்தி எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றது.

❖1854-சே.ப.நரசிம்மலு நாயுடு, தமிழகத் தமிழறிஞர், பேச்சாளர், சமூக சேவையாளர், பதிப்பாளர் (இ. 1922)

❖1884-ஓட்டோ பிரிட்சு மேயெர்ஹோப், நோபல் பரிசு பெற்ற செருமானிய மருத்துவர் (இ. 1951)

❖1904-அண்ணல் தங்கோ, திராவிட இயக்க எழுத்தாளர்

❖1932-லக்சுமன் கதிர்காமர், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 2005)

❖1934-என். எஸ். வி. சித்தன், தமிழக அரசியல்வாதி

❖1942-யாக்கோபு சூமா, தென்னாப்பிரிக்காவின் 4வது அரசுத்தலைவர்

❖1943-சுமித்ரா மகஜன், இந்திய அரசியல்வாதி

❖1947-டாம் கிளான்சி, அமெரிக்க வரலாற்றாளர் (இ. 2013)

❖1954-சப்தர் ஆசுமி, இந்திய மார்க்சியக் கொள்கையாளர், வீதி நாடகக் கலைஞர், செயற்பாட்டாளர். (இ. 1989)

**இறப்புகள்**

❖352-முதலாம் ஜூலியுஸ் (திருத்தந்தை)

❖1927-ஜோசேபே முஸ்காதி, இத்தாலிய மருத்துவர், அறிவியல் ஆய்வாளர் (பி. 1880)

❖1937-செர்கேய் பாவ்லோவிச் கிளாசனாப், சோவியத் வானியலாளர் (பி. 1848)

❖1945-பிராங்ளின் ரூசவெல்ட், அமெரிக்காவின் 32வது அரசுத்தலைவர் (பி. 1882)

❖1966-வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1874)

❖1993-நெ.து.சுந்தரவடிவேலு, தமிழக தமிழறிஞர், கல்வியாளர், எழுத்தாளர் (பி. 1911)

❖2005-வைக்கம் சந்திரசேகரன் நாயர், மலையாள எழுத்தாளர் (பி. 1920)

❖2006-ராஜ்குமார், கன்னட திரைப்பட நடிகர் (பி. 1929)

❖2008-மரியாம்பிள்ளை சேவியர் கருணாரத்தினம், இலங்கைத் தமிழ், கத்தோலிக்க மதகுரு, மனித உரிமைச் செயற்பாட்டாளர் (பி. 1951)

**சிறப்பு நாள்**

❖குழந்தைகள் நாள் (பொலிவியா)

❖வீதியோரச் சிறுவர்களுக்கான சர்வதேச நாள்

❖மனித விண்வெளிப் பயணத்துக்கான சர்வதேச நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 50 | 40 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 67 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 50 | 60 | 40 |
| தக்காளி | 20 | 30 | 20 | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 30 | 40 | 60 | 70 |
| கரட் | 80 | 100 | 75 | 100 | 150 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 40 | 60 |
| புடோல் | 80 | 60 | 30 | 50 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 40 | 35 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 150 | 150 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 55 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 160 | 75 | 40 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 50 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 55 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 100 | 180 | 200 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 30 | 60 | 40 |
| குறிமிளகாய் | 80 | 120 | 40 | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 150 | 180 | 280 | 500 |
| போஞ்சி | 80 | 120 | 60 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | — | — | 50 | 60 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 180 | 170 | 180 | 150 | 160 | 100 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 100 | 25-75 | 75 | 60-75 | 100 |
| இராசவள்ளி | 160 | 120 | 170 | 200 | 140 | 130 |
| வெங்காயப்பூ | — | — | — | 100 | — | 100 |
| முள்ளங்கி | 40 | — | 20 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 45 | — | 10 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | — | — | 80 | 70 |

நன்மை, தீமை அறிந்து மனசாட்சிக்கு கட்டுப்பட்டு வாழ்பவனின் உள்ளத்தில் இறைவன் இருப்பான்.
- சுவீடன் போர்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றாரா? என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா?

தருமபிரானுக்கும் சகுனிக்கும் சூதாட்டம் நடக்கிறது. காய் உருட்டுவதில் மாயம் செய்யக் கூடிய சகுனி தருமபிரானைவெற்றிகொள்கிறான்.

தருமரோ தனது சொத்துக்கள் அத்தனையையும் சூதாட்டத்தில் தோற்றுவிடுகிறார். ஈற்றில் தன் சகோதரர்களை சூதாட்டத்தில் வைத்து அவர்களையும் இழந்து விடுகிறார்.

பின்னர் தன்னைச் சூதாட்டத்தில் வைத்து தோற்கிறார். இறுதியில் திரௌபதியை சூதாட்டத்தில் வைத்து பறிகொடுக்கிறார். இவை நடந்து முடிய சபைக்கு திரௌபதி அழைக்கப்படுகிறார்.

சூதாட்டத்தில் திரௌபதியை தாம் வென்றுவிட்டதாக கௌரவர் தரப்பு அறிவிக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் சபையைப் பார்த்து திரௌபதி சபையோரே! என் கணவர் தருமபிரான் சூதாட்டத்தில் தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றாரா? அல்லது என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா? என்ற கேள்வியை எழுப்புகிறார்.

இங்குதான் உரிமைப்பிரச்சினையைத் திரௌபதி கிளப்புகிறார். தருமர் தன்னைத் தோற்றபின்னரே என்னைத் தோற்றார்.

தன்னைத் தோற்றபின் என்னை சூதாட்டத்தில் வைப்பதற்கு தருமருக்கு உரிமையோ அதிகாரமோ கிடையாது.

ஆக, சட்டப்படி என்னைச் சூதாட்டத்தில் தோற்றதென்பது செல்லுபடியற்றது என்று வாதிடுகிறார்.

திரௌபதியின் இந்த வாதத்தில் இருக்கக் கூடிய நியாயத்துவம் எளிதில் மறுதலிப்பதற்குரியதல்ல.

எனினும் கௌரவர் தரப்பில் நீதிக்கு இடமில்லை எனும்போது திரௌபதியின் வாதம் அடிபட்டுப் போகிறது.

இதை நாம் கூறும்போது இந்தக் கதை இப்போது எதற்கானது என்று நீங்கள் கேட்கலாம்.

இங்குதான் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமான தற்போதைய உறவு நிலை புலப்படுகிறது.

அதாவது வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்ததோ அன்றோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்குமான உறவும் தொடர்பும் முற்றுமுழுதாக அறுந்துவிட்டது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து இரவோடு இரவாக அதனை ஆளுநரிடம் கையளித்த அந்தக் கணமே கூட்டமைப்புப் பற்றிய நிலையை முதலமைச்சர் அறுத்தெறிய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை வடக்கின் முதலமைச்சராகக் கொண்டு வந்திருந்தாலும் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தபோது அதனை எதிர்த்து தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு எங்கள் தலைவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்று அண்டம் அதிர ஆர்ப்பரித்தனர்.

இதனால் அதிர்ந்துபோன கூட்டமைப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாபஸ் பெற்றது.

ஆகவே முதலமைச்சர் விக்னேஸ்வரன் இனி தமிழ் மக்களுக்குச் சொந்தமானவர், தங்கள் தலைவனை தமிழ் மக்கள் காப்பாற்றியது எங்களை அவர் காப்பாற்றுவார் என்றே.

ஆகையால் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் களத்தில் இறங்குவது கட்டாயமானது என்பதைத் தமிழ் மக்கள் முன்கூட்டியே உணர்த்திவிட்டனர்.

சுன்னாகம், மருதனார்மடம் உள்ளிட்ட வலி.தெற்கு எல்லையில்

# வெளி, நடைபாதை வியாபாரத்துக்கு வலி.தெற்கு பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மற்றும் மருதனார்மடம் உள்ளிட்ட வலி. தெற்கின் எல்லையினுள் உள்ள சந்தைகளில் வெளி வியாபாரிகளுக்கு இடம் வழங்குவதனையும் இவ் எல்லையினுள் நடைபாதை வியாபார நடவடிக்கையினையும் தடை செய்ய வேண்டும் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களினால்கொண்டு வரப்பட்ட பிரேரணை நீண்ட வாதபிரதிவாதங்களின் பின்னர் அனைவரின் ஒத்துழைப்புடன் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கன்னிய மர்வு நேற்று புதன்கிழமை சுன்னாகம் பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் குறித்த பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபை உறுப்பினர்கள் அனைவரினதும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. குறித்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

சுன்னாகம் சந்தைப் பகுதியில் நடமாடும் வியாபாரிகளுக்கு இடம் வழங்குவது தொடர்பானது. எமது மக்களின் தற்சார்பு பொருளாதாரத்தின் அங்கமாக வாழைச்செய்கை உள்ளது.

அதனடிப்படையில் வாழைப்பொத்தி, இலை, குலை, மடல் என அனைத்தையும் விற்று சந்தைப்படுத்தும் இடத்தினை வேறு ஒரு தேவைக்குப் பயன்படுத்துவது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றில்லை.

கடந்த காலங்களில் இந்தச் சந்தையில் பிரதான ஏற்றுமதிப் பொருளாக வாழை சார் உற்பத்தி இருந்தது. எனினும் சில காரணங்களினால் சந்தைப்படுத்தலுக்குரிய வாய்ப்புக்கள் அற்ற நிலையில் இது பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. இதனை ஆரம்பகாலத்தில் காணப்பட்டதை விட மேலும் சிறந்தமுறையில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி அதன் மூலம் எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த வேண்டுமே தவிர, இந்த இடத்தினை வேறு தேவைக்குப் பயன்படுத்துவது பொருத்தமானதல்ல.

பொலித்தீன் பாவனை நிறுத்தப்பட்டு வருகின்ற ஒரு சூழ்நிலையில் வாழை உற்பத்திப் பொருட்களின் மதிப்பு உயர்வடைந்து வருகின்றது.

குறிப்பாக இலை, தடல், மடல் என்பவற்றின் மதிப்பு உயர இருக்கின்றது. இதற்கு தொழில்நுட்ப மதிப்பைக் கொடுத்து உயர்த்த வேண்டுமே தவிர, இதனை இல்லாமல் செய்யும் நிலைக்கு கொண்டு செல்லக்கூடாது.

மேலும் தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு போன்ற விசேட காலங்களில் சந்தைப்படுத்தி அதிக வருமானத்தினையும் பெறலாம். வாழைப்பழம், இலை, பொத்தி என்பன உடனடியாகவே சந்தைப்படுத்த வேண்டும். இல்லையென்றால் பழுதடைந்துவிடும்.

எனவே இது எமது விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தும். இதனால் பல்வேறு விளைவுகளும் ஏற்படும்.

மேலும் தற்காலிக நடைபாதை வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறித்த இந்த சந்தையினை வழங்குவதற்குரிய நடவடிக்கையினை இந்தப் பிரதேச சபையின் ஊடாக மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் வாழை சார் உற்பத்தியாளர்கள், வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் நிரந்தர வியாபாரிகளுக்கு பெரும் நட்டத்தினையும் ஏற்படுத்தும்.

அதாவது விசேட தினத்தினை முன்னிட்டு கடன்களைப் பெற்று கொள்வனவு செய்த பொருட்களை சந்தைப்படுத்த முடியாமலும் விசேடமாக வேலைக்கு அமர்த்தியவர்களுக்கு சம்பளம், கொடுக்க முடியாமல் கடனாளியாக மாற்றுவதாகவே அமையும்.

எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் எமது மக்களின் பொருளாதாரத்தினை சீர்குலைக்கும் எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்க முடியாது.

எனவே பிரதேச சபையின் பிரிவுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கும் இந்த விடயம் தற்காலிகமாக உடன் நிறுத்தப்பட்டு எமது மக்களின் பொருளாதாரம் உறுதிப்படுத்தப்படும் வரை தற்காலிகமாக வேறு வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதியை வழங்காது இந்த விடயம் தொடர்பாக இந்த சபையில் வாத பிரதி வாதங்களின் கருத்தின் அடிப்படையில் ஓர் சிறந்த தீர்மானத்தினை மேற்கொண்டு எமது மக்களின்வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துமாறு இந்த சபையிடம் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மனுவினை சபையில் முன்வைக் கின்றோம் என்றனர். (ம-4,9)

## திருகோணமலையில் 24 மீனவர்கள் கைது

திருகோணமலை - கோணேஸ்வர் கோவில் கடற்பரப்பில்தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட 24 மீனவர்கள் கடற்படையினரால்நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு வலைகளும் நான்கு படகுகளும் 2 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான மீன்களும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு கடல்தொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் கிண்ணியா, சல்லி, சாம்பல்தீவு மற்றும் ஜமாலியா பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 'விவசாயி' மாதாந்த சஞ்சிகை நாளை 13ஆம் திகதி வெளியீடு

இயற்கை விவசாயம் மற்றும் நம்மூர் விவசாயம் சம்பந்தமான தகவல்கள் அடங்கிய "விவசாயி" எனும் மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டுவிழா நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் சஞ்சிகை ஆசிரியர் சி.அனுராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'நஞ்சில்லா உணவு நாளைய சந்ததிக்கு' எனும் மகுடவாக்கியத்துடன் விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி மற்றும் உள்ளூர் உற்பத்திகள் ஆகியவற்றுடன் தமிழரின் மரபுசார் வாழ்க்கைமுறை தொடர்பான விவசாய விற்பன்னர்கள், சாதாரண விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஆக்கங்களுடன் சஞ்சிகையாக மாதாந்தம் வெளிவர இருக்கிறது 'விவசாயி'

நிகழ்வில் "மருத்துவர் பார்வையில் இயற்கை விவசாயமும் சுகநலனும்" என்ற தொனிப்பொருளில் வைத்திய கலாநிதி கி.சிவன்சுதனும் "சூழலியல் பார்வையில சூழலியலும் விவசாயம்" என்ற தொனிப்பொருளில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைசரும் சூழலியலாளருமான பொ.ஐங்கரநேசனும் "கல்வியியலாளரின் பார்வையில் விவசாயம்" என்ற தொனிப் பொருளில் யாழ். பல்கலைக் கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதியும் விவசாய பேராசிரியருமாகிய கலாநிதி கு.மிகுந்தன், "நிர்வாக அதிகாரியின் பார்வையில் விவசாயம்" என்ற தொனிப்பொருளில் யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனும் "பொருளியற் பார்வையில் விவசாயம்" என்ற தொனிப்பொருளில் வங்கியியலாளர் எஸ். சுந்தரேஸ்வரனும் "சட்டவாளரின் பார்வையில் விவசாயம்" என்ற தொனிப்பொருளில் சட்டத்தரணி சுகாஸ் கனகரட்ணமும் "சமூக சேவையாளனின் பார்வையில் விவசாயம்" என்ற தொனிப்பொருளில் வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசனும் சிறப்புரையாற்றவிருக்கின்றனர். (ம-9)

## சத்திய தரிசனம்



### அனைவரையும் நேசியுங்கள்!

❖ சொர்க்கத்தை தேடி போக வேண்டியதில்லை, கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, உதவ முடியாத ஜீவன்களிடம் காட்டும் இரக்கம் இவற்றால் நம்முடைய மனதுக்குக் கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

❖ அன்பை அடிப்படையாகக் கொண்டு அனைவரையும் நேசித்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

❖ இதயமாகிய வயலில் அன்பு என்ற நாற்றை நட்டு, வெறுப்பு என்ற களையை நீக்கி, தொண்டு என்னும் நீரைப் பாய்ச்சினால், இன்பம் என்னும் விளைச்சலைக் காணலாம்.

❖ பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, கட்டுப்பாடு, திருடாமை, தூய்மை, புலன்களின் மேல் ஆதிக்கம், திறமை, அறிவு, உண்மை, கோபமின்மை இந்தப் பத்தும் தர்மத்தின் குணநலன்களாகும்.

❖ கண்கள் இரண்டானாலும் பார்க்கும் தொழிலை மட்டும் செய்கிறது. காதுகள் இரண்டாயினும் கேட்கும் தொழிலை மட்டும் செய்கிறது. வாய் ஒன்றாக இருந்தாலும் சாப்பிடுவது, பேசுவது ஆகிய இரு தொழில்களை செய்கிறது. நல்வாழ்க்கைக்கு அதை அடக்கி வைக்க வேண்டும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வாஸ்து சாந்தி, பிரவேச பலி ஆகியவற்றுக்கு விளக்கம் என்ன?**

வாஸ்து சாந்தி: புதுமனை புகுவிழாவிற்கு முன்னாள் இரவு 8 மணிக்கும் மேல் 10 மணிக்குள் செய்யும் வேள்வியே வாஸ்து சாந்தியாகும். கலசம் வைத்து அலங்காரம் செய்து வாஸ்து சக்கரத்தை வெள்ளை வேட்டியில் வரைந்து வைக்கவேண்டும். வாஸ்து தேவனை வைக்கோல் பொம்மையாக செய்து கலசத்திற்கு அருகில் வைக்கவும்.

வேள்வி குண்டம் அமைத்து கணபதி பூஜை, நவக்கிரகப் பூஜைக்குப் பின் சிவனை கலசத்தில் ஆவாஹனம் செய்து வெள்ளைப் பூசணிக்காய்க்கும் வாஸ்து பொம்மைக்கும் இடையே வெட்டரிவாளை வைத்து அரிவாளுக்கு பூஜை செய்து குங்குமம் இட வேண்டும்.

(தொடரும்)

# சித்திரைப் புத்தாண்டு கரப்பந்தாட்டம்
# மாதகல் சென்.தோமஸ் ஐக்கியம் சம்பியன்



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சில்லையூர் HEFTY ENTERTAINMENT MEDIA மற்றும் ஸ்ரீ முத்து மாரி அம்பாள் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தியது.இக் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட் கிழமை நடைபெற்றுள்ளது.

சண்டிலிப்பாய் இரட்டையபுலம் இளைஞர் கழகம் மற்றும் மாதகல் சென். தோமஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதிய பரபரப்பான இறுதிப்போட்டி சில்லையூர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

மாதகல் சென்.தோமஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகம் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று வாகை சூடியது.

எதிர்த்து விளையாடிய சண்டிலிப்பாய் இரட்டைபுலம் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் சில்லையூர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் விளையாட்டுக் கழகம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசு வழங்கிக் கௌரவித்தார். (க)

# என் நாடித் துடிப்பே
# சென்னை சுப்பர் கிங்ஸ்தான்



சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பில்லிங்ஸ் அதிரடியால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

2 ஆண்டுகள் தடைக்கு பின்னர் களமிறங்கியிருக்கும் சென்னை அணி என்பதால் இந்தப் போட்டி குறித்து ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது.

இதற்கிடையில் காவிரி மேலாண்மை வாரியம் தொடர்பான போராட்டம் வேறு நடைபெற்றதால் போட்டி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்தது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நேற்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றதால். ரசிகர்கள் சந்தோஷப்பட்டிருப்பார்கள் என தலைவர் டோனி கூறியுள்ளார்.

வெற்றி குறித்து அவர் கூறியதாவது, 2 ஆண்டுகளுக்குப் பிறகு வந்து இங்கு வெற்றி பெறுவது நல்ல உணர்வைத் தருகிறது.

என்னுடைய நாடித்துடிப்பும் எகிறியது. அதனால்தான் ஓய்வறை என்ற ஒன்று உள்ளது.

என் உணர்வுகளை நான் ஓய்வறையில் மறைவாகவே வெளிப்படுத்துவேன். இங்கு வெளியில் அமரும்போது கிடையாது.

களத்தில் நம் உணர்வுகளை வெட்ட வெளிச்சம் போட்டுக் காட்டினால் வர்ணனையாளர்கள் நம்மைப் பற்றி பேசுவதற்கு இடம் கொடுப்பதாகும்.

நாங்களும் ஓட்டம் கொடுத்தோம், கொல்கத்தா நன்றாக துடுப்பாடியது. இரு அணி பந்து வீச்சாளர்களுக்கும் கஷ்ட காலம்தான் என்று கூறியுள்ளார். (க)

# சி.எஸ்.கேயை நேசிப்பவர்களுக்கு நீங்கள் தரும் பரிசு இதுதானா?

## மனதை உருக்கிய புகைப்படம்

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி சென்னையில் நடந்த ஐ.பி. எல்.போட்டிக்கு எதிராக போராட்டம் வெடித்தது.

ஆயிரக்கணக்கான நபர்கள் திரண்டதால் பொலிஸார் திணறியதாகத் தெரிகிறது. பல்வேறு அமைப்பினரை சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதனையும் மீறி போட்டி நடந்து கொண்டிருந்த போது சென்னை அணியினர் மீது செருப்பு வீசப்பட்டது. 8 ஆவது ஓவரில் முதல் பந்து வீசிய போது செருப்பு வீசினர்.

இத னால் போட்டி சிறிது நேரம் தடைப்பட்டதுடன் குறித்த நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.



சென்னை வீரர்களை சந்தித்துவிட்டு டு பிள சிஸ் பெவிலியன் திரும்பும் போது செருப்பு வீசியுள்ள னர்.

இதை கையிலெடுத்து சென்னை வீரர் டு பிளசிஸ் ரசிகர்களைப் பார்த்து பேசாமல் அமைதியாக நின்றார்.

இந்தப் புகைப்படம் வைரலாக பரவி வரும் நிலையில். பலரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

சென்னையை நேசிக்கும் ஒருவருக்கு நீங்கள் கொடுக்கும் பரிசு இதுதானா? என கேள்வி எழுப்புகின்றனர்.

காரணம் சென்னை வெள்ளத்தின் போது மக்களுக்கு ஆறுதலாக டுவிட் போட்டு வருத்தத்தை பதிவு செய்தவர் டு பிளசிஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ஆசிய கோப்பை போட்டிகள் பாகிஸ்தானால் இடம் மாறியது



14 ஆவது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் இந் தியா-பாகிஸ் தான் நாடுகள் இடையே தற்போது சீரான உறவு இல்லாததால், இந்தியாவில் போட்டியை நடத்த பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்தது.

இது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்ட ஆசிய கிரிக்கெட் கவுன்சில், ஆசிய கோப்பை போட்டியை இந்தியாவில் இருந்து ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றி இருக்கிறது. டுபாய் மற்றும் அபுதாபியில் செப்டெம்பர் 13 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறும். இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காதேஷம், ஆப்கானிஸ்தான் மற்றும் தகுதி சுற்றில் ஜெயிக்கும் அணி என்று மொத்தம் 6 அணிகள் பங்கேற்கவுள்ளன. (க)

# சென்னைக் கொடியை தூக்கிப் பிடித்த டோனியின் மகள்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனியின் மகளை சேப்பாக்கம் மைதானத்தில் வைத்து ஷாருக்கான் சந்தித்து, அவரோடு எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் டோனி ரசிகர்கள் மத்தியில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

மேலும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கொடியை தனது கையில் வைத்து அசைத்த காட்சி ஒட்டுமொத்த ரசிகர்களாலும் பகிரப்பட்டு வருகிறது.

ஷாருக்கானின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் நேற்று முன்தினம் மோதின. இதில் 5 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தி சென்னை அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியை பார்ப்பதற்காக நடிகர் ஷாருக்கான் சேப்பாக்கம் மைதானத்திற்கு வந்திருந்தார். அதுமட்டுமின்றி. டோனியின் மனைவி சாக்ஷி மற்றும் மகள் ஷிவா ஆகியோரும் சேப்பாக்கம் மைதானம் வந்திருந்தனர்.

அவர்கள் இருவரையும் சந்தித்த ஷாருக்கான், டோனி மகளுடன் குறும்புத்தனமாக புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

டோனியின் மகளும் அழகாக புகைப் படங்களுக்கு போஸ் கொடுத்துள்ளார்.

இந்த புகைப்படம் நேற்றிலிருந்து இணையத்தளத்தை கலக்கி வருகிறது. (க)

## இரண்டு மீனவர்கள்...

நிலையத்தில் நேற்று புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போன மீனவர்களின் உறவினர்களால் குறித்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த மீனவர்கள் இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை கடலுக்குச் சென்றதாகவும் இதுவரையில் கரைக்குத் திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் நேற்று முன்தினம் தமது உறவினர்களுடன் தொடர்பு கொண்டதுடன் தமது படகு பழுதடைந்துள்ளதாகவும், தம்மை உடனடியாக மீட்குமாறும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து உடனடியாக குறித்த இடத்திற்குச் சென்ற மீனவர்களின் உறவினர்கள் அவர்களது படகினை மட்டுமே கண்டெடுத்துள்ளதாகவும், குறித்த மீனவர்களைக் காணவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், மீனவர்களை மீட்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கில் இராணுவ...

அத்துடன் வழக்கு தொடுக்கப்படாத அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கத்திற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டதா? கூட்டமைப்பு பிரதமருக்கு ஆதரவளிக்க நிபந்தனை விதிக்கப்பட்டதா?

**பதில்:** அவ்வாறு எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. அவர்கள் 2015 ஆம் ஆண்டு முன்வைத்த கோரிக்கையை தற்போது மீண்டும் முன்வைத்துள்ளார்கள். அதாவது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என்பனவே கூட்டமைப்பின் பிரச்சினையாகும். அது நீண்டநாள் பிரச்சினையாகும். அவை உண்மையில் விரைவுபடுத்தப்பட வேண்டும். அதற்காக நிபந்தனை விதிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அது தொடர்பில் பேசவுமில்லை.

**கேள்வி:** வடக்கில் 650 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளனவா? நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான எதிர்ப்பின் காரணமாக இது நடைபெறுகின்றனவா?

**பதில்:** வடக்கில் 650 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. ஆனால் அவ்வாறு விடுவிப்பதில் என்ன தவறிருக்கின்றது. அந்த மக்கள் படும் கஷ்டங்களை நீங்கள் நேரில் சென்று பார்த்தால் அவர்களின் அவலம் உங்களுக்கு தெரியும். உங்கள் காணி களை யாராவது இவ்வாறு பறித்தெடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களுக்கு அப்படி நடந்தால்தான் புரியும். தம்மிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளை மீள கோரும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

**கேள்வி:** எனினும் காணி விடுவிப்பானது நம்பிக்கையில்லாப் பிரேரணை காரணமாக விரைவுபடுத்தப்பட்டுள்ளதா?

**பதில்:** நீங்கள் எப்படி அவ்வாறு கூற முடியும். 650 ஏக்கர் காணிகளுக்கான நில அளவையை இரண்டு வாரங்களுக்குள் செய்ய முடியுமா? அதுமட்டுமன்றி மக்களின் காணிகளை இராணுவத்தினர் பேக்கரி அமைந்துக் கொண்டிருப்பது நியாயமானதா? தெற்கில் இவ்வாறு நடந்தால் என்ன செய்வீர்கள்? வடக்கு மக்களின் காணிகள் விரைவாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதை நான் மிகவும் திடமாக வலியுறுத்திக் கூறுகின்றேன்.

அத்துடன் அரசியல் கைதிகளை விடுவியுங்கள். வழக்குப் போடாமல் இருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் இதனை கூறுவதற்கு நான் பயப்படவில்லை. அரசியல் கைதிகளுக்கு தண்டனை வழங்கியிருந்தால் கூட இந் நேரம் அவர்கள் வெளியில் வந்திருப்பார்கள். 12 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்களை கடந்த அரசாங்கம் புனர்வாழ்வளித்து விடுதலை செய்தது. அதுவொரு நல்ல செயற்பாடாகும். அதேபோன்று இந்த அரசாங்கமும் செயற்பட வேண்டும். மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்றார். (ம)

## புலிகளின் தலைவர்...

யாழ்.மாநகர சபையின் கன்னி அமர்வு நேற்று யாழ்.மாநகர சபா மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சி மாநகர சபை உறுப்பினர் குகேந்திரன் (ஜெகன்) கன்னி உரை வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாம் அனைவரும் முன்னைய காலத்தில் இருந்து அரசியல் போராளிகளாக வளர்ந்து இன்று என்ன நிலையில் உள்ளோம். எல்லா கட்சிகளும் இயக்கங்களாக, ஒற்றுமையாக இருந்து எதிரியுடன் மோதி வெற்றி கண்டோம். ஆனால் காலப்போக்கில் எல்லாம் சிதறடிக்கப்பட்டிருந்தோம்.

மீண்டும் இங்கு ஒன்று கூடியுள்ளோம். ஒற்றுமையாக நாம் இருப்பதற்கு காலம் கனிந்துள்ளது. தோழர் திலீபனுக்கு சிலை வைப்பதை யாரும் எதிர்க்க முடியாது, எதிர்க்கவும் கூடாது. அதே போல் இந்த விடுதலைப் போராட்டத்தில் கட்சிகளின் தலைவர்களான தோழர் பத்மநாபா, உமாமகேஸ்வரன், ஸ்ரீ சபாரட்ணம், முன்னாள் மேயர் துரையப்பா, சிவபாதம் சரோஜினி அம்மா ரவிராஜ் ஏதோ விதத்தில் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஏன் சிலை எடுக்க கூடாது? அவர்களுக்கும் சிலை வைக்க முடியும். அதை விட விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு சிலை அமைப்பதற்கு நாம் தடை இல்லை. அதையும் இந்த மா நகர சபையால் நிறைவேற்ற முடியுமா? அதை செய்ய வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும். முதல்வர் எம்முடன் இணைந்து நேர்வழியில் செயற்பட வேண்டும் அப்போது மாநகரின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்போம். சிலை அமைக்கும் விடயங்களில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-ஆ)

## தன்னை விடுவிக்க...

மேற்கொள்வதற்காக கடந்த 2012ஆம் ஆண்டு யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

ஆனால் சிறையில் இருந்து தப்பிக்க முயற்சி செய்தார் என பொய்க்குற்றம் சாட்டப்பட்டு மீண்டும் 2013ஆம் ஆண்டு அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டார்.

அன்றிலிருந்து அநுராதபுரம் சிறைச்சாலையில் தனி அறையில் இவர் அடைக்கப்பட்டுள்ளார். இதனால் கடும் மன உளைச்சலும் உடல்நிலை பாதிக்கப்பட்டும் உள்ளார். தான் தப்பித்து செல்ல முயற்சி செய்யவில்லை எனவும், தன்னை ஏனைய கைதிகளுடன் இணைத்து விடுமாறு கோரியும் குறித்த கைதி நீதிபதி, சிறைச்சாலை ஆணையாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியோருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்த கடிதத்துக்கு எந்த பதிலும் கிடைக்காத காரணத்தினால், நேற்று முன்தினம் முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (ம-9)

## தமிழர் தாகம்...

தாகம் தமிழீழத் தாயகம்" என்ற வாசகத்தை உரத்துக் கூறி தமது உரையை நிறைவு செய்திருந்தனர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் கன்னி அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு மாநகர சபையின் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தலைமையில் ஆரம்பமானது.

இதில் உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கு 3 நிமிட நேரம் ஒதுக்கப்பட்டது. அப்போது அங்கு உரையாற்றிய சில உறுப்பினர்கள் தமது உரையின் இறுதியில் "தமிழர் தாகம் தமிழீழ தாயகம்" என்ற வாசகத்தை உரத்து கூறியிருந்தனர். அதற்கு ஏனைய உறுப்பினர்கள் கைகளை தட்டி வரவேற்றிருந்தனர். (ம-9)

# ரணிலை அடுத்த ஜனாதிபதியாக்க சிலர் முயற்சி செய்து வருகின்றனர்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதியாக கொண்டு வருவதற்காக சிலர் முயற்சி செய்து கொண்டு வருகின்றனர் எனினும் தனக்கு அவ்வாறான தேவை எதுவும் இல்லை என அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

இன்று பிரதமர் நாளை ஜனாதிபதி என்ற கருத்துகளை சிலர் முன்வைத்து வருகின்றனர். அவர்களின் தேவை பிரதமரை அடுத்த ஜனாதிபதியாக கொண்டுவருவதே.

என்றாலும் அதில் எனக்கு எந்தவித ஈடுபாடும் இல்லை. நாம் அரசியலுக்கு வந்தது மரணிக்கும் முன்னர் நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக மாத்திரமே. அதற்காகவே அரசியலுக்குள் நாம் பிரவேசித்துள்ளோம் அதனை செய்து முடிப்போம்.

பதவிகளுக்காகவும், இலாப நோக்குடனும் நாம் அரசியலுக்கு வரவில்லை. ஆனால் இதில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் தலைவர்களுக்காகவும் தனக்காகவும் அரசியலில் ஈடுபடுபவர்கள் தற்போதைய அரசியலிலும் இருக்கின்றார்கள் என ராஜித சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து தேசிய அரசாங்கத்தின் அரசியல் நகர்வு குறித்து கருத்து தெரிவிக்கும் போது,

வரலாற்றில் எதிரும் புதிருமாக இருந்த இரு கட்சிகளை ஒன்றிணைத்து புதிய மாற்றத்தை ஏற்படுத்தி தேசிய அரசாங்கத்தை கொண்டு வந்துள்ளோம்.

எந்த நிலையிலும் இந்த அரசாங்கத்தில் பிளவு ஏற்படாது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும். பிரதமரும் இதே நிலைப்பாட்டிலேயே உள்ளார் என ராஜித தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கடந்த கால நிர்வாக...

போதே மேற்கண்டவாறு யாழ்.மாநகர முதல்வர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுறுதியும் தீராத வேட்கையும் கொண்டவன் நான். அதனை நோக்கி பயணிப்பதில் உறுதியாக இருப்பவன். தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்துகின்ற எமது பாதையும் பயணமும் கடினமானதாக இருப்பினும் அது ஜனநாயக ரீதியாகவும் மக்களின் அங்கீகாரத்துடன் கூடியதாகவும் சர்வதேச அரங்கில் மதிப்பார்ந்ததாகவும் இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

மக்களின் விடிவுக்கான நெடிய போராட்ட வரலாற்றை கடந்து சென்றுகொண்டிருக்கின்றோம். அந்தப் போராட்டத்தில் அகிம்சை சார் மென்வலு முயற்சிகளும் போர் சார் வன்வலு முயற்சிகளும் இடம்பெற்றிருந்தன. ஆனால் சமகாலத்தில் எமது மக்களும் இந்த நாடும் சர்வதேசமும் மென்வலு சார்ந்த ஜனநாயக வழிமுறைகளே சாலச் சிறந்தது என எமக்கு மிகவும் உறுதியாகச் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். அதுவே சிறப்பானதும் நிச்சயமானதுமாகும் என்பதே எனதும் நான் சார்ந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் நம்பிக்கையாகும்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் மாநகரின் முதல்வராக நான் அமர்ந்திருப்பது எமது மக்களுக்கான விடிவு நோக்கிய பயணத்தை மேலும் வலுவூட்டுவதற்காக அன்றி, வேறு நோக்கங்கள் அல்ல.

எமது பதவிகளும் எமக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களும் எம்மையும் எமது மக்களையும் எமது மக்களுக்கான விடிவு நோக்கிய பயணத்திலிருந்து திசை திருப்புமாகவிருந்தால், அந்தக் கணமே எமது பதவிகளைத் துறக்கவும் எமது அதிகாரங்களைத் தூக்கி எறியவும் நாம் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை.

தமிழ் பேசும் மக்கள் என்ற பொது அடையாளத்தோடு பல்வேறு கட்சிகளாக- குழுக்களாகப் பிரிந்து நாம் தேர்தல்களை எதிர்கொண்டோம். இப்போது இந்த அவையிலே தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளாக தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளாக நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு யாழ்.மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்கள் என்ற அடையாளம் சுமந்து வந்திருக்கின்றோம்.

இன்று முதல் கட்சி பேதங்களுக்கு அப்பால், எமது மக்களின் நலன்களுக்காக உழைப்பவர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு நிர்வாக முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக பலரும் முறைப்பாடுகளை முன்வைத்து வந்துள்ளார்கள். அவை உரியமுறையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இது விடயத்தில் முன்னெடுக்கும் அனைத்து விதமான நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளுக்கு இந்த அவை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## நல்லாட்சி அரசில்...

வாக்களித்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறிய போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசில் நீடிக்கும் என அவர குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்றிரவு இடம்பெற்ற அந்தக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சிலருக்கும் புதிய முகங்களுக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## சம்பந்தனுடன் அமர்...

திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. அதன்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நீக்கப்படவேண்டும் என்றும் அந்தப் பதவி மகிந்த ராஜபக்ச முன்மொழியும் ஒருவருக்கே வழங்கப்படவேண்டும் என்றும் கூட்டு எதிரணி கோருகிறதே? என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயத்தின் அடிப்படையில் பொதுத் தேர்தலில் இரண்டாம் நிலையிலிருக்கும் கட்சிக்கே எதிர்க்கட்சித் தலைவர் வழங்கப்படவேண்டும்.

கூட்டு எதிரணியில் உள்ளவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டு குழுவாகப் பிரிந்து நின்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கேட்க முடியாது.

அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுமாகவிருந்தால் அந்தக் கட்சி எதிர்க்கட்சி தலைவர் பதவியைக் கோரலாம். அதன்போது தனது பதவியை சம்பந்தன் விட்டுக்கொடுக்கவேண்டும்.

எது எவ்வாறாயினும் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருப்பதுதான் இன நல்லிணக்கத்துக்கு வழியமைக்கும்.

அத்துடன், சம்பந்தன் போன்ற தமிழ் தரப்புகள் தென்னிலங்கைத் தலைவர்களுடன் அமர்ந்திருப்பது பெருமைதானே? என்று அமைச்சர் ராஜித பதிலளித்தார். (ம)

## பல்கலை கல்வி...

ங்களின் ஒன்றிணைந்த குழு இந்த போராட்டத்தை நடத்த வருகிறது.

தொழிற்சங்க குழுவுக்கும் உயர் கல்வி அமைச்சருக்குமிடையே கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. எனினும் அவற்றை உயர் கல்வி அமைச்சு இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த நிலையிலே போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. இதனால் நாடு முழுவதுமுள்ள பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் முடங்கிப்போயுள்ளன. புதிய மாணவர் அனுமதி மற்றும் பரீட்சைகள் தடைப்பட்டுள்ளன.

கல்வி சாரா ஊழியர்கள் வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்குத் திரும்ப வேண்டும். அவ்வாறு அவர்கள் பணிக்குத் திரும்பாவிடின் நிரந்தர நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புக் காலம் சம்பளமற்ற சேவைக்காலமாகவே கருத்திற்கொள்ளப்படும்.

அத்துடன் நியமனம் உறுதிப்படுத்தப்படாத, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படை சேவையிலுள்ள ஊழியர்கள் தமது சேவையிலிருந்து தாமாகவே விலகியதாகக் கருதப்படும் என்று உயர் கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. (ம)

## தியாகதீபம் திலீப...

ங்கப்பட்டுள்ள ஆணை என்பது எமக்கான கௌரவம் அல்ல. அது எமக்கு வழங்கப்பட்ட சேவையாகவே நாங்கள் கருதுகின்றோம். எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடமையை நாங்கள் செவ்வனே மேற்கொள்வோம். நாங்கள் ஒரு கட்சியிலிருந்து இந்த மாநகர்சபைக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் எங்களுக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. இந்தப் பிரதேச மக்களுடைய அபிவிருத்தியை நாங்கள் மனதிலே நிறுத்தி செயற்பட வேண்டும். அந்தக் கடமைப்பாட்டை நாங்கள் எங்களுடைய மனதிலே முன்னிறுத்தி பணியாற்றவேண்டும்.

தியாக தீபம் திலீபனுக்கு சிலை அமைப்பது தொடர்பாக அறிந்திருந்தோம். எங்களுடைய கட்சியின் நிலைப்பாடும் அதுவாகவே இருக்கின்றது. எமது முதலாவது செயற்பாடாக திலீபனுக்கு சிலை அமைப்பதனை முன்னெடுக்கவே நாங்கள் விரும்புகின்றோம்.

நல்லூரின் வடக்கு வீதியிலே தியாக தீபம் திலீபனுக்கு நினைவுக் கல் ஒன்று இருந்தது. அவ்விடத்திலேயே அவர் உண்ணாவிரதமிருந்தார். அந்த இடமும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் அதேபோல பேரினவாதிகளால் அழிக்கப்பட்ட தியாகதீபம் திலீபனின் தூபியை அடக்கு முறைக்கு நினைவுச்சின்னமாக வைத்துக்கொண்டு அதன் அருகில் புதிய தூபியை அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

அதேபோல முத்திரைச் சந்தியிலே கிட்டு பூங்கா என ஒரு பூங்கா இருந்தது. அதனுடைய பெயரை சங்கிலியன் பூங்கா என்று மாற்றிவிட்டார்கள். அதனை மீண்டும் கிட்டு பூங்காவாக மாற்றுவதற்கு நாங்கள் சபையில் முன்மொழிவுகளைச் செய்யவேண்டும். இது சிதைவடைந்த ஒரு பற்றைக் காடாக மாறியுள்ளது. அதனை மீண்டும் கிட்டு பூங்காவாக நாங்கள் மீள நிர்மாணிக்க வேண்டும்.

விடுதலைப் போராட்டத்திலே பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களைக் கௌரவிக்கும் விதமாக யாழ் மாநகரசபைப் பகுதிக்குள்ளே உள்ள வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் முன்னர் சூட்டப்பட்டிருந்தன. சில வீதிகளுக்கு வேறு பெயர்கள் மாற்றப்பட்டுவிட்டன. அந்த வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் மீண்டும் அப் பெயர்கள் இடப்பட வேண்டும்.

இந்த சபையிலே ஒரு மாற்றம் தெரிந்தது. எல்லோரும் தேசியம் பேசுகிற ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்கின்றார்கள். அந்த வகையில் முன்னர் இருந்தவாறு மாவீரர்களது பெயர்களை வீதிகளுக்கு சூட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என நினைக்கிறேன்.

இங்கு நடைபெற்றது ஒரு விடுதலைக்கான போராட்டம். அடக்கப்பட்ட தமிழ் பேசுகின்ற மக்களுடைய விடுதலைக்காகவே இந்தப் போராட்டம் நடைபெற்றது. அந்த மக்களுடைய விடுதலைக்காகப் போராடிய போராளிகளும் இருக்கிறார்கள். நாம் யாருக்கு எதிராக போராடினோமோ எங்களை அடக்க நினைத்த அந்த அரச இயந்திரத்தோடு இணைந்து எமக்கு எதிராக போராடிய போராளிகளும் இருக்கிறார்கள். எம்மைப் பொறுத்தவரையில் விடுதலைக்காகப் போராடிய போராளிகளுக்கு மாத்திரமே சிலைவைக்க வேண்டுமே தவிர விடுதலைக்கு எதிராகப் போராடிய அரச இயந்திரத்துடன் சேர்ந்து இயங்கி தமிழ் மக்களின் அழிவிற்குக் காரணமாகியவர்களுக்கு சிலை வைப்பது பொருத்தமற்ற ஒரு செயற்பாடாகவே இருக்கும்.

வேண்டுமானால் எமது விடுதலைக்கு எதிராகச் செயற்பட்டவர்களது அநியாயங்களைக் காட்சிப்படுத்தலாம். நாங்கள் இரண்டு விதமான உதாரணங்களை வைத்துக்கொண்டு முன்செல்ல முடியும். ஒன்று நாம் இவர்களைப் போல வரவேண்டும் என்பது. மற்றையது இவர்களைப் போல வந்துவிடாதே என கூறுவது. அங்கு கிட்லரின் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. கிட்லர் போலே வந்துவிடாதே என ஜேர்மனிச் சிறுவர்களுக்குச் சொல்லப்படுகின்றது. அவ்வாறான விதத்திலும் நாங்கள் நினைவுச் சின்னங்களை உருவாக்கலாம்.

மேலும் கடந்த காலங்களில் யாரும் ஊழல் செய்ததாக நாங்கள் இங்கு சொல்லவில்லை. ஊழல் செய்திருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய விருப்பமாக இருக்கின்றது. மக்களுடைய வரிப்பணம் மக்களுக்குச் சென்றடையவேண்டும் மக்களுடைய வரிப்பணத்தை எவரும் பயன்படுத்தியிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பின் அவற்றிற்கு நடவடிக்கை எடுக்கத் தவறுவோமாக இருந்தால் எதிர்காலத்தில் நாங்களும் ஊழல் செய்வதற்கு வழிவிட்டவர்களாக மாறுவோம். யாரும் ஊழல் செய்தார்கள் என்று நான் கூறவில்லை. யாரும் ஊழல் செய்திருந்தால் அது கண்டறியப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

ஒற்றுமை என்ற விடயத்தில் பல்வேறு விடயங்களில் ஒற்றுமைகள் இருக்கின்றது. கொள்கைக்கான விடயம் எனும்போது இங்கு பலருக்கு அது சாத்தியமற்ற ஒன்று. இந்த உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் பல கட்சிகள் ஒற்றுமையுடன் இணைந்திருந்தன. நாங்கள் மட்டும் உங்களது ஒற்றுமைக்கூட்டில் இணைந்திருக்கவில்லை. உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் ஒற்றுமையோடு தேசிய ரீதியான ஒற்றுமையாக எங்களை இழுத்துவிடாதீர்கள். நாங்கள் எமது தேசியம் சார்ந்த நிலைப்பாட்டிலிருந்து இந்த ஒற்றுமைக்குள் இணைந்துவிட முடியாது. எங்களுடைய கட்சியின் உருவாக்கமானது எங்களுடைய விடுதலைப் போராட்டம் எங்கு மௌனிக்கப்பட்டதோ அந்த இடத்திலிருந்து எமது உரிமைகளை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே எமது கட்சி தொடங்கப்பட்டது. மக்கள் தங்கள் வாழ்வியலை சுயமாகக் கட்டியெழுப்பவேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். அதற்கான அதிகாரம் எம்மிடம் வரவேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராடுகின்றோம் என மேலும் தெரிவித்தார். (ம-4-9)

## மே முதலாம் திகதி...

இம்முறை மே 7ஆம் திகதி உலக தொழிலாளர் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளதால் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெசாக் பௌர்ணமி என்பதனால் அதனைத் தொடர்ந்து வரும் ஒரு வார காலம் வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மே தின கொண்டாட்டங்கள் மே மாதம் 7ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அதற்கமைய மே தின கூட்டங்கள், ஊர்வலங்கள் மே மாதம் 7 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ள நிலையில் அன்றைய தினத்தை வங்கி, அரச மற்றும் வர்த்தக விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ம)


அபிவிருத்தி உத்தியோகத்தர்
தரம் II
வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
EB Exam
(பரீட்சைக்கான எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியது)
By:N.கமலநாதன்
(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்)
13.04.2018
வெள்ளி 9am - 4pm
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224

வட மாகாண போட்டிப் பரீட்சை விசேட இறுதி கருத்தரங்குகள்
வெள்ளி (13.04)
ஞாயிறு (15.04)
காலை 10.00-3.00மணிவரை
• சாரதி தெரிவு
• முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
முகாமைத்துவ உதவியாளர்
ஞாயிறு
10.00 - 3.00
0766883394
D.M.I
(வெலிங்டன் சந்தி SDB வங்கி எதிரில் பானியல் கட்டட 2-ம் மாடியில்)

வலையின் வெளியீடு
வட மாகாண போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள் வெளிவந்து விற்பனையாகிறது
• முன்பள்ளி ஆசிரியர் தரம் III
• சாரதி தரம் III
யாழ்.நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் ஏனைய புத்தக சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
வெளிவரவிருப்பது வடக்கு MA வழிகாட்டி
தொகுப்பு:
சி.என்.எச். சாள்ஸ்
0776913337

HARI REAL ESTATE
வீடு / காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதியிலிருந்து 200Mtr உட்புறமாக இரண்டு புதிய வீடுகள் குடியிருப்பதற்கு தயார் நிலையில் விற்பனைக்குண்டு ...
- கொக்குவில் கிழக்கு உடையார் வீதியில் 1¼ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
- பொற்பதி வீதியில் 04 பரப்பு வெற்றுக்காணி - நன்னீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
- தட்டாதெரு சந்தியிலிருந்து 200Mtr உட்புறமாக 1¼ பரப்பு வெற்றுக் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.
- மண்டைதீவு 08ம் வட்டாரத்தில் 50 பரப்பு வெற்றுக்காணி, நன்னீர் வளத்துடன் விற்பனைக்குண்டு.
"ஹரி றியல் எஸ்டேட்"
இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk
POWERED BY HARI

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK - 550/= Kg
கனடா - 1050/= Kg
(C-1982)
தொடர்புகளுக்கு
0768226240
• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

FLC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France - 2007)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 21.04.18 சனி காலை 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் : 23.04.18 மாலை 4 மணி
திருமணம் ஆகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
தொடர்பு:077 017 5346
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L 2018 Day Class மாணவர்களுக்கான உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
Paper Class / Past Paper Class } சனி, ஞாயிறு 12.00 - 2.00
செயல்முறை வகுப்பு
2.30 - 4.30 (சனி, ஞாயிறு)
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
(C-2268)
பிரபல ஆசிரியர் : கலைதீபன்
(யா/நெல்லியடி மத்திய கல்லூரி)
(கடந்த 3 வருடங்களில் 72 மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய பெருமையுடன்)

நூற்றுக்கணக்கான நாடுகளில் கிளைகளைக் கொண்ட அமெரிக்க நிறுவனங்களான
McDonald's Marriott HOTELS & RESORTS
ஆகியவற்றில் வேலைவாய்ப்பு ஏற்பாடு!
அல்லது
ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு!
அல்லது
சிங்கப்பூர் ஹொட்டேல் வேலைவாய்ப்பு ஏற்பாடு!
அல்லது
சுவிஸ், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா விசா ஏற்பாடு என்பவற்றுடன்
O/L உடன் விரும்பிய நாடு சென்று 50,000 – பல இல. சம்பாதிக்க
10ம் அணி TOURISM & Hotel Management
Entry Level with FREE ENGLISH COURSE
4 MONTHS DURATION
வகுப்புகள் ஆரம்பம் ஏப்ரல் 16 திங்கள்
பதிவுகளுக்கு 0777 324 004
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business • Hospitality • English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
(C-2170)
இல. 221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk


## விசேட கருத்தரங்கு

எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் II இற்கான 2ஆம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு.

DCM கல்வி நிலையம் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகில்) 2018.04.13 (வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி)

வளவாளர் : ஆ. சத்தியமூர்த்தி (077 167 6457)

(C-2207)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.